    அவை அட்டித் தரப் பணியே 20-1; 20
கேட்டேன் கேட்பதெல்லாம் பிறவாமை கேட்டொழிந்தேன் 21-2
கொடியேன் பலபொய்யே உரைப்பேனைக் குறிக்கொள்நீ 1-4
சலச்சலம் மிடுக்குடைய தருமனார் தமரென்னைக் கலக்குவான்
    வந்தாலும் கடுந்துயர் வாராமே விலக்குவாய் 29-8
செல்வத்தை மறைத்து வைத்தீர் எனக்கொரு நாள் இரங்கீர் 46-1
திண்ணென என்உடல் விருத்தி தாரீரே யாகில், திருமேனி
    வருந்தவே வளைக்கின்றேன், நாளைக் கண்ணறையன்
    கொடும்பாடன் என்றுரைக்க வேண்டா 46-9
திருப்புகழ் விருப்பால் பன்னலம் தமிழாற் பாடுவேற்
    கருளாய் பாசுபதா பரஞ்சுடரே 69-4
திருப்புகழ் விருப்பால் பாடிய அடியேன் படுதுயர் களையாய்
    பாசுபதா பரஞ்சுடரே 69-2
திருவாணை உண்டேல் பொற்சுரிகை பொற்பூ பட்டிகை
    கறிவிரவு நெய்சோறு...முப்போதும் வேண்டும் 46-10
நந்தி உனைவேண்டிக் கொள்வேன் நரகம் புகாமையே 92-7
நமன் தமர்தாம் நலிய அலமந்து மயங்கி அமர்வதன்முன்
    அடியேன் உய்யப் போவதோர் சூழல் சொல்லே 3-5

---

* ஆவாஎன் - அபயம் தந்து அஞ்சாதே என்க.

† காம்பு, நேத்திரம் - பட்டாடை வகைகள்.

‡ 'ஒருமாப் பெற்று, மண்சரித்து ஒரு வெள்ளானை வானகம் புகும் பேறுற்ற வள்ளல்' – வானொளிபுற்றூர்ப் புராணம்.

'நம்பி தாமும் அந்நாட் போய் நாகைக் காரோணம் பாடி
அம்பொன் மணிப்பூண் நவமணிகள் ஆடை சாந்த மடற்பரிமா
பைம்பொற் சுரிகை முதலாய பெற்று''
—பெரிய புராணம், கழறிற்-68.

நல்லாயில் செய்தார் நடந்தார் உடுத்தார் நரைத்தார் இறந்தார்
என்று நானிலத்திற், சொல்லாய்க் கழிகின்றதறிந் தடியேன்
தொடர்ந்தேன், உய்யப் போவதோர் சூழல் சொல்லே 3-1
நாளார் வந்தணுகி நலியாமுன் நின்றனக்கே, ஆளா
வந்தடைந்தேன் அடியேனையும் என்றுகொள்நீ 24-6
நாளும் இத்தனை வேண்டுவ தடியேன் உயிரொடு நரகத்
தழுந்தாமை, ஊனம் உள்ளன தீர்த்தருள் செய்யாய்
ஒற்றியூரெனும் ஊர் உறைவானே 54-6
நேசமுடை அடியவர்கள் வருந்தாமை அருந்த வீழிமிழலைதனில்
நித்தல், காசருளிச் செய்தீர் இன்றெனக் கருளவேண்டும்
நாகைக் காரோணம் மேவியிருந்தீரே 46-7
பட்டோடு சாந்தம் பணித்தருளா திருக்கின்ற பரிசென்ன படிறே 46-6
பணிந்த பார்த்தன் பகீரதன் பலபத்தர் சித்தர்க்குப் பண்டு
நல்கினீர்...வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே 88-7
பந்தனை கெடுத்தென் படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே 69-5
பரிசினால் அடிபோற்று பத்தர்கள் பாடியாடப் பரிந்து நல்கினீர்,
அரிய வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே 83-5
பலிஏற்றதென்னென்று விண்ணப்பம் செய்பவர்க்கு
மெய்ப்பொருள் ஆய வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே 88-9
பாதம் பணிவார்கள் பெறும் பண்டம் அது பணியாய் 1-5
பிறவிக்கடல் நீந்தி ஏறி அடியேன் உய்யப் போவதோர்
சூழல் சொல்லே 3-3
பொறிவிரவு நற்புகர்கொள் பொற்சுரிகை மேலோர்
பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருள வேண்டும் 46-10
பொறிவாயில் இவ்வைந்தினையும் அவியப் பொருதுன்
அடியே புகுஞ் சூழல்சொல்லே 3-2
மணக்கோலமதே பிணக்கோலமதாம் பிறவி இதுதான்...
அடியேன் உய்யப் போவதோர் சூழல் சொல்லே 3-6
மாட்டேன் அறவா மறவா துன்னைப் பாடப் பணியாயே 47-1
மாலயன் ஏத்த...வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே 88-4
முத்தாரம் இலங்கி மிளிர் மணிவயிரக் கோவை, அவைபூணத்
தந்தருளி மெய்க்கினிதா நாறும், கத்தூரி கமழ் சாந்து
பணித்தருள வேண்டும் கடல்நாகைக் காரோணம்
மேவி யிருந்தீரே 46-1
மூன்றுகண் உடையாய் அடியேன்கண் கொள்வதே கணக்கு
வழக்காகில், ஊன்றுகோல் எனக் காவதொன்றருளாய்
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே 54-4
வாடி யிருந்து வருந்தல் செய்யா தடியேன் உய்யப் போவதோர்
சூழல் சொல்லே 3-4

வாணுர் நுதலார் வலைப்பட் டடியேன் பலவின்கனி வீந்தது போல்வதன்முன்...அடியேன் உய்யப் போவதோர் சூழல் சொல்லே	3-9
வாயினால் உனைப் பாவிடும் அடியேன் படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே	69-1
வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே	88

சுந்தரர் விரும்பி வேண்டிய பொருள்கள்

ஆடை	46-5
ஆபரணம்	46-5
ஆரம்	46-1, 11
உடல் விருத்தி	46-9
கட்டி (பொற்கட்டி)	46-4
கடும் பரிமா (குதிரை)	46-8
கத்தூரி	46-1, 11
கந்தம்	46-5
கறிவிரவு நெய் சோறு	46-10
காசு	46-7
*காம்பு	46-2
சாந்தம், சாந்து	46-1, 6; 11
சோறு	46-10
நிதியம் (திருவாரூர்க் குளத்தில் எடுத்த 12,000 பொன் முக்கூறில் ஒரு கூறு 4000 பொன்)	46-8
நெய்	46-10
†நேத்திரங்கள்	46-2
பட்டிகை (அரைக்கச்சை)	46-10
பட்டு	46-6, 11
பண்டாரம்	46-5
பூ	46-11
பொற் சுரிகை	46-10
பொற்பூ	46-10
மணிவயிரக் கோவை	46-1
முத்தம்	46-11
முத்தாரம்	46-1
வயிரக்கோவை	46-1

* காம்பு - ஒருவகைப் பட்டாடை - "கச்சொடு பொற்சுரிகை காம்பு கனவளை"—பெரியாழ்வார். 3-8.

† நேத்திரம் - பட்டாடை (திவாகரம்).

(ii) முறையீடும் வேண்டுகோளும்

முறையீட்டுப் பதிகங்கள் 8, 55, 60, 65, 66, 95
தொண்டர்களிடம் முறையீட்டுப் பதிகம் 73

(i) இறைவனிடம் முறையீடு

அகத்திற் பெண்டுகள் நானொன்று சொன்னால் அழையேல்
போ குருடா எனத் தரியேன், முகத்திற்
கண்ணிழந் தெங்ஙனம் வாழ்கேன், முக்கணா
முறையோ மறையோதீ 54-9

அடியேனையும் அஞ்சலென்னே 27

அடியேனையும் வேண்டுதியே 27-9

அணிகொ ளாடையம் பூணணி மாலை அமுதுசெய் தமுதம்
பெறு சண்டி...திருநாவினுக் கரையன்...கண்ணப்பன்
என்றிவர் பெற்ற காதல் இன்னருள் ஆதரித்
தடைந்தேன்...திருநின்றியூரானே 65-2

அர்த்தனை உன் அடைக்கலம் புகுத அவனைக் காப்பது
காரணமாக, வந்த காலன்தன் ஆருயிர் அதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மை கண்டடியேன், எந்தைநீ
எனை நமன்தமர் நலியில் இவன்மற் றென் னடியான்
என விலக்கும், சிந்தையால் வந்துன் திருவடி
யடைந்தேன் செழும்பொழிற் றிருப்புன் கூருளானே 55-1

அமரர்கட் கருள்புரிவது கருதி...விடந்தனை உண்டு
கண்டத்தே வைத்த சீலங் கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும் பொழிற் றிருப்புன் கூருளானே 55-5

அழிப்பர் ஐவர் புரவுடையார்கள் ஐவரும் புரவாசற ஆண்டு,
கழித்துக் காற்பெய்து போயின பின்னைக் கடைமுறை
உனக்கே பொறையானேன், விழித்துக் கண்டனன்
மெய்ப்பொருள் தன்னை வேண்டேன் மானுட
வாழ்க்கை யிதாகில், இழித்தேன் என்றனக் குய்வகை
அருளாய் இடைமருதுறை எந்தை பிரானே 60-5

அன்னையே என்னேன் அத்தனே என்னேன் அடிகளே
அமையும் என்றிருந்தேன், என்னையும் ஒருவன்
உளனென்று கருதி யிறையிறை திருவருள் காட்டாய் 14-2

ஆட்டான் பட்டமையால் அடியார்க்குத் தொண்டுபட்டுக்,
கேட்டேன் கேட்பதெல்லாம், பிறவாமை கேட்டொழிந்தேன் 21-2

ஆரூர் அப்பனே அஞ்சினேனே 8

ஆரூரகத்தீரே! கன்று முட்டி யுண்ணச் சுரந்த காலியவை
போல, என்று முட்டாப் பாடும் அடியார் தங்கண் காணாது,
குன்றின் முட்டிக் குழியில் விழுந்தால் வாழ்ந்து போதீரே 95-3

இயக்கர் கின்னரர் யமனொடு வருணர் இயங்கு தீவளி
ஞாயிறு திங்கள், மயக்கமில் புலி, வானரம் நாகம்
வசுக்கள் வானவர் தானவர் எல்லாம்...நின் திருவடி யதனை
அர்ச்சித்தார் பெறும் ஆரருள் கண்டு, திகைப்பொன்
றின்றிநின் திருவடி யடைந்தேன் திருப்புன் கூருளானே 55-6
இரவிநீள் சுடர் எழுவதன் முன்னம் எழுந்து தன்முலைக்
கலசங்கள் ஏந்திச், சுரபி பால்சொரிந் தாட்டிநின் பாதம்
தொடர்ந்த வார்த்தை திடம்படக் கேட்டுப், பரவி
யுள்கி வன் பாசத்தை அறுத்துப் பரம வந்து நுன்
பாதத்தை அடைந்தேன்...திருநின்றியூரானே 65-4
இருக்கை திருவாரூரே உடையீர்! மனமே எனவேண்டா
அருத்தி உடைய அடியார் தங்கள் அல்லல் சொன்னக்
கால், வருத்தி வைத்து மறுமை பணித்தால் வாழ்ந்து
போதீரே 95-4
இருந்தும் நின்றும் கிடந்தும் உம்மை இகழா தேத்துவோம்
வருந்தி வந்தும் உமக்கொன் றுரைத்தால் வாழ்ந்து போதீரே 95-10
இலங்கையர் கோனை அடர்த்திட்டுக் குறிகொள் பாடலின்
இன்னிசை கேட்டுக் கோல வாளொடு நாளது
கொடுத்த, செறிவு கண்டுநின் திருவடி யடைந்தேன்...
திருப்புன் கூருளானே 55-9
இழியாக் குலத்திற் பிறந்தோம் உம்மை இகழா தேத்துவோம்
பழிதா னாவ தறியீர் அடிகேள் பாடும் பத்தரோம்
வழிதான் காணா தலமந் திருந்தால் வாழ்ந்து போதீரே 95-8
உடு கூறையும் சோறுந்தந் தாளகில்லீர் 2-9
உதிரநீர் இறைச்சிக் குப்பை எடுத்தது மலக் குகைம்மேல்
வருவதோர் மாயக் கூரை வாழ்வதோர் வாழ்வு வேண்டேன் 8-8
உய்வகை அருளாய் இடைமருதுறை எந்தை பிரானே 60
உறவிலேன் உனையன்றி மற்றடியேன் ஒருபிழை
பொறுத்தால் இழிவுண்டே 70-6
எல்லாம் அறிவீர் இதுவே அறியீர் என்றிரங்குவேன்
எல்லியும் நண்பகலும் 2-5
ஏயெம் பெருமான் இதுவே யாமா றுமக்காட் பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால் வாழ்ந்து போதீரே 95-7
ஏழை மானுட இன்பினை நோக்கி இளையவர் வலைப் பட்டிருந்
தின்னம், வாழைதான் பழுக்கும் நமக்கென்று வஞ்ச
வல்வினையுள் வலைப்பட்டுக், கூழை மாந்தர்தஞ் செல்
கதிப் பக்கம் போகமும் பொருளொன் றறியாத, ஏழை
யேனுக்கோ ருய்வகை அருளாய் இடைமருதுறை
எந்தை பிரானே 60-9

ஐவகை யன்ரைய ரவராகி ஆட்சிகொண் டொருகாலவர் நீங்கார்,
அவ்வகை யவர் வேண்டுவதாளுல் அவரவர் வழி ஒழுகி
நான் வந்து, செய்வகை அறியேன் சிவலோகா தீவணு
சிவனே எரியாடீ, எவ்வகை எனக் குய்வகை அருளாய்
இடைமருதுறை எந்தை பிரானே 60-8

ஐவர் கொண்டிக் காட்ட ஆடி ஆழ்குழிப் பட்டழுந்து
வேனுக், குய்யுமா றென் றருளிச் செய்யீர் ஓண
காந்தன் தளியுளீரே 5-1

ஒக்க முப்புரம் ஓங்கெரி தாவ உன்னை உன்னிய மூவர்நின்
சரணம், புக்கு மற்றவர் பொன்னுலகாளப் புகழிளுல்
அருள் ஈந்தமை அறிந்து, மிக்க நின்கழ லேதொழு
தாற்றி வேதியா ஆதி மூர்த்திநின் அரையில், அக்கணிந்த
எம்மான் உனை அடைந்தேன் ஆவடுதுறை ஆதி எம்மானே 66-5

கருத்தில் உம்மைப் பரவும் என்மேற் பழிகள் போக்கீர் 6-8

கழுதை குங்குமம் தான்சுமந் தெய்த்தாற் கைப்பர் பாழ்புக
மற்றது போலப், பழுது நானுழன் றுள்தடுமாறிப்
படுசுழித் தலைப்பட்டனன் எந்தாய், அழுது நீ யிருந்தென்
செய்தி மனமே அங்கணு அரனே என மாட்டா,
இழுதை யேனுக்கோர் உய்வகை அருளாய் இடை
மருதுறை எந்தை பிரானே 60-1

காது பொத்தரைக் கின்னரர் உழுவை கடிக்கும் பன்னகம்
பிடிப்பரும் சீயம், கோதில் மாதவர் குழுவுடன் கேட்பக்
கோல ஆல்நிழற் கீழறம் பகர, ஏதஞ் செய்தவ ரெய்திய
இன்பம் யானும் கேட்டுநின் இணையடி யடைந்தேன்...
திருநின்றியூரானே 65 6

கூடிக் கூடித் தொண்டர் தங்கள் கொண்ட பாணி
குறைபடாமே, ஆடிப் பாடி அழுது நெக்கங்
கன்புடையவர்க் கின்பம் ஓரீர் 5-5

கோடு நான்குடைக் குஞ்சரம் குலுங்க நலங்கொள் பாதநின்
றேத்திய பொழுதே, பீடு விண்மிசைப் பெருமையும்
பெற்ற பெற்றி கேட்டு நின் பொற்கழல் அடைந்தேன்
...திருநின்றியூரானே 65-7

சடையீரே! தனத்தா லின்றித் தாந்தா மெலிந்து தங்கண்
காணுது மனத்தால் வாடி அடியார் இருந்தால்
வாழ்ந்து போதீரே 95-6

செடிய ஞகிலும் தீயஞகிலும் தம்மையே மனம் சிந்திக்கும்
அடியன் ஊரனை ஆள்வரோ நமக்கடிகளாகிய அடிகளே 33-10

செடியேன் தீவினையில் தடுமாற்றம் கண்டாலும் அடியான்
ஆவவெனு தொழிதல் தகவாமே 23-

செந்தண் பவளம் திகழும் சோலை யிதுவோ திருவாரூர்
எந்தம் அடிகள் இதுவே யாமா றுமக்காட் பட்டோர்க்குச்
சந்தம் பலவும் பாடும் அடியார் தங்கண் ணாணது, வந்தெம்
பெருமான் முறையோ என்றால் வாழ்ந்து போதீரே 95-5
தாதை தாளற எறிந்த தண்டிக்குன் சடைமிசை மலரருள்
செயக் கண்டு, பூதவாளிநின் பொன்னடி யடைந்தேன்
பூம்பொழிற் றிருப்புன் கூருளானே 55-3
திகழு மாலவன் ஆயிர மலரால் ஏத்துவான் ஒரு நீண்மலர்
குறையப், புகழிலவன் கண்ணிடந்திடலும் புரிந்து
சக்கரம் கொடுத்தல் கண்டடியேன், திகழுநின் திருப்
பாதங்கள் பரவித் தேவதேவநின் திறம்பல பிதற்றி,
அகழும் வல்வினைக் கஞ்சிவந் தடைந்தேன் ஆவடுதுறை
ஆதி எம்மானே 66-3
[திரு ஆவடுதுறையுள் (அங்கணு)] எனை அஞ்சலென்
றருளாய் ஆரெனக் குறவு அமரர்கள் ஏறே 70
திருவும் வண்மையும் திண்டிறல் அரசும் சிலந்தியார் செய்த
செய்பணி கண்டு, மருவு கோச் செங்க ணான்தனக்
களித்த வார்த்தை கேட்டு நுன்மலரடி அடைந்தேன்...
திருநின்றியூரானே 65-1
துச்சேன் என்மனம் புகுந் திருக்கின்றமை சொல்லாய்
திப்பிய மூர்த்தீ 15.2
தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி சித்திரப்
பந்தர் சிக்கென இயற்றச், சுருண்ட செஞ்சடை
யாயது தன்னைச் சோழனாக்கிய தொடர்ச்சிகண்
டடியேன், புரண்டு வீழ்ந்துநின் பொன்மலர்ப் பாதம்
போற்றி போற்றியென் றன்பொடு புலம்பி, அருண்டென்
மேல்வினைக் கஞ்சி வந்தடைந்தேன் ஆவடுதுறை
ஆதியெம்மானே 66-2
நடுக்க முற்றதோர் மூப்புவந் தெய்த நமன்தமர் நரகத்
திடலஞ்சி, இடுக்க ணுற்றனன் உய்வகை அருளாய்
இடை மருதுறை எந்தை பிரானே 60-7
நரம்பினோ டெலும்பு கட்டி நசையினோ டிசைவொன்
றில்லாக், குரம்பை வாய்க் குடியிருந்து குலத்தினால்
வாழமாட்டேன் 8-5
நரைப்பு மூப்பொடு பிணிவரும் இன்னே நன்றியில்
வினையே துணிந்தெய்த்தேன், அரைத்த மஞ்சள
தாவதை அறிந்தேன் அஞ்சினேன் நமனாரவர் தம்மை,
உரைப்பன் நானுன சேவடிசேர உணரும் வாழ்க்கையை
ஒன்றறியாத, இரைப்ப னேனுக்கோ ருய்வகை
அருளாய் இடைமருதுறை எந்தை பிரானே 60-2

கற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன் நாவினுக் கரையன்
நாளைப் போவானும், கற்றசூதன்நற் சாக்கியன்
சிலந்தி, கண்ணப்பன், கணம்புல்லான் என்றிவர்கள்,
குற்றஞ் செய்யினும் குணமெனக் கருதும் கொள்கை
கண்டுநின் குரைகழல் அடைந்தேன், பொற்றிரண்
மணிக் கமலங்கள் மலரும்பொய்கைசூழ் திருப்புன் கூருளானே 55-4

நின்ற வினைக் கொடுமை நீங்க...திருவாரூர்புக் கென்றன்
மனங்குளிர என்றுகொல் எய்துவதே 83-2

நெய்யும் பாலும் தயிரும் கொண்டு நித்தல் பூசனை செய்ய
லுற்றார், கையில் ஒன்றும் காணம் இல்லைக் கழலடி
தொழுதுய்யின் அல்லால் 5-1

பற்ற லாவதோர் பற்றுமற் றில்லேன் பாவியேன்பல
பாவங்கள் செய்தேன், எற்றுளேன் எனக் குய்வகை
அருளாய் இடைமருதுறை எந்தை பிரானே 60-6

பாடுங் காட்டில் ஆடல் உள்ளீர் பரவும் வண்ணம் எங்ஙனேதான் 6-9

பாரூர் அறிய என்கண் கொண்டீர் நீரே பழிபட்டீர், வாரூர்
முலையாள் பாகம் கொண்டீர் வாழ்ந்து போதீரே 95-11

பிழைத்த பிழையொன் றறியேன் நான் பிழையைத் தீரப் பணியாயே 77-5

புந்தியா லுரை கொள்வரோ அன்றிப் பொய்யின் மெய்யுரைத்
தாள்வரோ, அன்றியே மிக அறவரோ நமக்கடிகளாகிய
அடிகளே 33-6

புன்னுனைப்பனி வெங்கதிர் கண்டாற் போலும் வாழ்க்கை
பொருளிலை நாளும், என்னெனக்கினி யிற்றைக்கு
நாளை என்றிருந்திடர் உற்றனன் எந்தாய், முன்னமே
உன் சேவடிசேர மூர்க்க னாகிக் கழிந்தன காலம்,
இன்ன மென்றனக் குய்வகை யருளாய் இடைமருதுறை
எந்தை பிரானே 60-3

பெற்ற போழ்தும் பெறாத போழ்தும் பேணி உம் கழல்
ஏத்துவார்கள், மற்றோர் பற்றிலர் என்றிரங்கி
மதியுடையவர் செய்கை செய்வீர், அற்றபோதும்
அலந்த போதும் ஆபற்காலத் தடிகேள் உம்மை,
ஒற்றி வைத்திங் குண்ணலாமோ ஓணகாந்தன் தளியுளீரே 5-3

பேயோ டேனும் பிரிவொன் றின்னா தென்பர் பிறரெல்லாம்
காய்தான் வேண்டிற் கனிதா னன்றோ கருதிக் கொண்டக்கால்,
நாய்தான் போல நடுவே திரிந்தும் உமக்காட் பட்டோர்க்கு,
வாய்தான் திறவீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே 95-9

பொய்த் தன்மைத் தாய மாயப் போர்வையை மெய்யென்
றெண்ணும், வித்தகத் தாய வாழ்வு வேண்டிநான்
விரும்ப கில்லேன் 8-9

போர்த்த நீள்செவி அந்தணர்க்கு...அறம்புரிந்து, பார்த்தனுக்கு...
பாசுபதம் கொடுத்து அருளினாய்...பகீரதன் வேண்ட கங்கை
நங்கையாளை நின்சடை மிசைக் கரந்த தீர்த்தனே, நின் திருவடி
அடைந்தேன் திருப்புன் கூருளானே 55-7

மடநல்லார் வலையிற்பட்டு மதிமயங்கி அறிவே
அழிந்தேன் ஐயா நான் 52-4

மணமென மகிழ்வர் முன்னே மக்கள் தாய் தந்தை சுற்றம்
பிணமெனச் சுடுவர் பேர்த்தே பிறவியை வேண்டேன் நாயேன் 8-6

மற்றுத் தேவரை நினைந்துனை மறவே னெஞ்சினாரொடு
வாழவுமாட்டேன், பெற்றிருந்து பெருந்தொழிகின்ற
பேதையேன் பிழைத்திட்டதை அறியேன், முற்றுநீ எனை
முனிந்திட அடியேன் கடவதென்னுனை நான் மறவேனேல் 54-7

மறையவன் ஒரு மாணி வந்தடைய வாரமாய் அவன் ஆருயிர்
நிறுத்தக், கறைகொள் வேலுடைக் காலனைக் காலாற் கடந்த
காரணம் கண்டுகண் டடியேன், இறைவன் எம்பெருமானென்
றெப்போதும் ஏத்தி ஏத்திநின் றஞ்சலி செய்துன், அறைகொள்
சேவடிக் கன்பொடும் அடைந்தேன் ஆவடுதுறை ஆதி
எம்மானே 66-1

*மறையிடைத் துணிந்தவர் மனையிடை யிருப்ப வஞ்சனை செய்தவர்
பொய்கையும் மாயத், துறையுறக் குளித்துள தாகவைத்
துய்த்த உண்மை எனும் தகவின்மையை ஓரேன் 58-9

மானுடப் பிறவி வாழ்வு வாழ்வதோர் வாழ்வு வேண்டேன்...ஆரூர்
அப்பனே அஞ்சினேனே 8-2

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே,
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தான் மிகவாடி
ஆளா யிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே 95-1

முந்திச் செய்வினை யிம்மைக்கண் நலிய மூர்க்கனாகிக் கழிந்தன
காலம், சிந்தித்தே மனம் வைக்கவுமாட்டேன் சிறுச்சிறிதே
இரப்பார்கட் கொன்றீயேன், அந்திவெண் பிறை சூடும்
எம்மானே ஆரூர் மேவிய அமரர்கள் தலைவா!, எந்தைநீ எனக்
குய்வகை அருளாய் இடைமருதுறை எந்தை பிரானே 60-4

---

* மறைகளால் துணியப்பட்ட உண்மைப் பொருளாகிய பெருமான், எனது உடலிலேயே கோயில் கொண்டிருந்தும், வஞ்சனை செய்தவரால் (ஐம்புலன்களால்) ஏற்படும் பொய்யான செய்கைகளும், மாயமான துறைகளில் படிந்து குளித்து, அம்மாயையில் உள்ளதான நிகழ்ச்சிகளைக் கொண்டு செலுத்தும் நெறியையும் நிலையையும் உண்மை என்று நினைக்கும் தகுதியற்ற நிலையையும் யான் அறிகின்றேன் இல்லை. பொய் + கை. கை - ஒழுக்கம்: பொய்கையையும் தகவின்மையையும் ஓரேன் என்றபடி.

முன்னை முதற் பிறவி மூதறியாமையினால், பின்னை நினைந்தனவும்
பேதுறவும் ஒழிய...திருவாரூர்புக் கென்னுயிர்க் கின்னமுதை
என்றுகொல் எய்துவதே 83-3
மூவெயில் செற்ற ஞான்று உய்ந்த மூவரில் இருவர் நின் திருக்
கோயிலின் வாய்தல் காவலாள ரென் றேவிய பின்னை,
ஒருவன்...மணிமுழா முழக்க அருள் செய்த தேவதேவ
நின் திருவடி யடைந்தேன்...திருப்புன்கூருளானே 55-8
மெய்யே யெங்கள் பெருமான் உன்னை நினைவா ரவரை
நினைகண்டாய் 41-7
மொய்த்தசீர் முந்நூற் றறுபதி வேலி மூன்று நூறு வேதியரொடு
நுனக்கு, ஒத்தபொன் மணிக் கலசங்கள் ஏந்தி ஓங்கு நின்றியூர்
என்றுனக் களிப்பப், பத்தி செய்த அப்பரசு ராமற்குப் பாதங்
காட்டிய நீதிகண் டடைந்தேன்...திருநின்றியூரானே 65-3
வந்தோ ரிந்திரன் வழிபட மகிழ்ந்து வானநாடுநீ ஆள்கென அருளிச்,
சந்தி மூன்றிலும் தாபர நிறுத்திச் சகளி செய்திறைஞ் சகத்தியர்
தமக்கு...திருப்பொதியிற் சேர்வு நல்கிய செல்வம் கண்டடைந்
தேன்...திருநின்றியூரானே 65-5
வல்லதெல்லாம் சொல்லி உம்மை வாழ்த்தினாலும் வாய்திறந்
தொன், றில்லை என்னீர் உண்டும் என்னீர் எம்மை
ஆள்வான் இருப்ப தென்னீர் 5-4
வாட்ட மெலாந்தீரக் கட்டி யெமக் கீவதுதான் எப்போது
சொல்லீர் (கட்டி - பொற்கட்டி) 46-4
வீரத்தாலொரு வேடுவனாகி விசைந்தோர் கேழலைத் துரந்து
சென்றணைந்து, போரைத்தான் விசயன்தனக் கன்பாய்ப் புரிந்து
வான்படை கொடுத்தல்கண் டடியேன், வாரத்தால் உன
நாமங்கள் பரவி வழிபட்டுன் திறமே நினைந்துருகி, ஆர்வத்தோ
டுவந் தடியிணை அடைந்தேன் ஆவடுதுறை ஆதியெம்மானே 66-4
விற்றுக் கொள்வீர் ஒற்றி யல்லேன் விரும்பி யாட்பட்டேன்
குற்றமொன்றும் செய்த தில்லை கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிபட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே 95-2
வெஞ்சமாக் கூடல் விகிர்தா அடியேனையும் வேண்டுதியே 42
வேண்டேன் மானுட வாழ்க்கை 60-5
வேலங்காடு தடங்கண்ணார் வலையுட் பட்டுன் னெறிமறந்து
மாலங்காடி மறந்தொழிந்தேன் மணியே முத்தே மரகதமே 52-5
வையக முற்றும் மாமழை மறந்து வயலில் நீரிலை மாநிலந் தருகோம்,
உய்யக் கொள்கமற் றெங்களை என்ன ஒளிகொள் வெண்
முகிலாய்ப் பரந்தெங்கும், பெய்யு மாமழைப் பெருவெள்ளம்
தவிர்த்துப் பெயர்த்தும் பன்னிருவேலி கொண்டருளும்,
செய்கை கண்டுநின் திருவடி யடைந்தேன் செழும்
பொழிற் றிருப்புன் கூருளானே 55-2

(ii) தொண்டர்களிடம் முறையீடு: வேண்டுகோள்

(எந்தை) இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர் 73

142. சுந்தரர் கண்டு தொழப்பெற விரும்பியவை
(பதிகம் 84)

அடியார் கல்லவடப் பரிசு 84-5
இதழித் தொத்து 84-5
எண்டோள் 84-1
ஓசையைப் பாடல் 84-2
கல்ல வடப்பரிசு 84-5
குளிர் மா மத்தம் 84-2
கூதவிடுஞ்சடை 84-2
கைம்மிசைக் கூரெரி 84-5
கொக்கிறகு 84-2
கொண்டல் எனத் திகழும் கண்டம் 84-1
கொல்லை விடைக் கழகு 84-5
கோல நறுஞ்சடைமேல் வண்ணம் 84-1
கோளரவு 84-2
சோதி யிளம்பிறை 84-1
திண்மழு 84-5
தில்லை நகர்ப் பொதுவுற் றாடியசீர் நடம் 84-5
தொண்டர் அடித்தொழல் 84-1
புண்டரிகப் பரிசாம் மேனி 84-1
மெல்லியலாள் ஒருபால்...கூறுசெய்...பரிசு, மென் முலையாள் பாகம் 84-5, 1

143. சுந்தரர் தம்மைத்தாமே வைதல், இழித்துக் கூறுதல்

அடிநாய் 59-11, 86-10, 94-10
அருள் வடிவிலான் 33-10
அருவினையேன் 51-5
அறிவில்லேன் 1-5
அறிவிலா நாயேன் 38-1
அறிவிலியேன் 51-3
ஆதன் 1-5
இரைப்பன் (வீணன், வெற்றெலியன், வீண் ஆடம்பரத்தன்) 60-2
இழுதையேன் 60-1

உணர்வில்லேன் 41-8
ஏழையேன் 51-10, 60-9, 68-5
கட்டனேன் 54-2
கடியேன் 26-7, 96-9
கண்ணறையன் 46-9
கொடியேன் 1-4, 32-1, 96-9
கொடும் பாடன் 46-9
சழக்கனேன் 51-11
செடியன், செடியனேன், செடியேன் 23-1, 33-10, 41-8, 74; 96-9
தீயன் 33-10
துச்சேன் (இழிந்த தன்மையை உடையவன்) 15-2
நாய் 59-11
நாயடியேன் 26-6, 84-9
நாயினேன் 68. 69-8, 100-1
நாயேன் 1-2, 23-3, 38-1, 74
நொய்யேன் 51-11
பாவியேன் 51-1, 60-6
பித்தனொப்பான் 43-11
பெட்டன் (பொய்யன் ஆசைப்படுபவன்) 54-2
பேதையேன் 54-7
பொய்யவன் 26-6
பொய்யடியேன் 89-3
மதியில்லா ஏழையேன் 51-10
மதியிலேன் 63-5, 70-4
மூடனேன் 33-6
மூர்க்கன், மூர்க்கனேன் 51-1, 6; 60-3, 4
வஞ்சனை என்மனம் 100-6

144. சுந்தரர் தம் குறைகளை, தம் குணத்தை எடுத்துக் கூறுதல், தம்மை இழித்துக் கூறுதல், வாழ்க்கை நிலையாமை கண்டஞ்சுதல்

அங்கணா அரனே எனமாட்டா இழுதையேன் 60-1
அஞ்சினேன் நமனாவர் தம்மை 60-2
அஞ்சினை ஒன்றி நின்று *அலர் கொண்டடி சேர்வறியா
வஞ்சனை என் மனமே 100-6
†அருத்தம் பெரிதும் உகப்பன் 73-6
அரைத்த மஞ்சள தாவதை அறிந்தேன் அஞ்சினேன்
நமனாவர் தம்மை 60-2

* அலர் - மலர், பழிச்சொல்; † அருத்தம் - செல்வப் பொருள்.

*அலவலையேன் அலந்தார்கள் ஒருத்தர்க் குதவியேன் அல்லேன் 73-6
அழிப்பர் ஐவர் புரவுடையார்கள் ஐவரும் புரவாசற ஆண்டு,
கழித்துக் காற்செய்து போயின பின்னைக் கடைமுறை
உனக்கே பொறை ஆனேன் 60-5
ஆசைபல அறுக்கில்லேன் 73-10
ஆதன் பொருளானேன் அறிவில்லேன் 1-5
ஆரையும் †அன்றி உரைப்பேன் 73-10
இங்கலக்கு முடற்பிறந்த அறிவிலியேன் 51-3
இடையறியேன் தலையறியேன் 89-2
இரவும் பகலும் நினைந்தாலும் எய்த நினைய மாட்டேன் நான் 77-1
உரைப்பன் நான் உனசேவடி சேர உணரும் வாழ்க்கையை
ஒன்றறியாத இரைப்பனேன் 60-2
உற்றபோதல்லால் உறுதியை உணரேன் உள்ளமே அமையும்
என்றிருந்தேன் 14-3
உற்றவர்க்குத் துணை அல்லேன் 73-6
ஊடி இருந்தும் உணர்கிலேன் உம்மைத் தொண்டன் ஊரனேன் 77-11
ஊனைப் பெருக்கி உன்னை நினையா தொழிந்தேன் செடியேன்
உணர்வில்லேன் 41-8
ஏழை மானுட இன்பினை நோக்கி இளையவர் வலைப்பட்டிருந்
தின்னம், வாழைதான் பழுக்கும் நமக்கென்று வஞ்ச
வல்வினையுள் வலைப்பட்டுக், கூழை மாந்தர்தம் செல்கதிப்
பக்கம் போகமும் பொருளொன் றறியாத ஏழையேன் 60-9
ஐம்புலன் என்வசம் அல்ல 60-7
ஐவகை யரைய ரவராகி ஆட்சிகொண் டொருகாலவர் நீங்கார்,
அவ்வகை யவர் வேண்டுவ தாறல் அவரவர் வழி ஒழுகிநான்
வந்து, செய்வகை அறியேன் சிவலோகா! 60-8
ஓசை பெரிதும் உகப்பேன் 73-10
கடிய ஆயின கொடுமைகள் செய்தேன் 60-6
கடியேன் காதன்மையால் கழற் போதறியாத என்னுள் 26-7
கண்குழிந் திரப்பார் கையில் ஒன்றும் இடக் கிலேன் 59-9
கண்டதே கண்டதே காமுறும் கொடியேன் நான் 96-9
கல்லில் வலிய மனத்தேன் 73-3
கல்லே னல்லேன் நின்புகழ் அடிமை கல்லாதே பல கற்றேன் 15-4
கள்ளமே பேசிக் குற்றமே செயினும் குணமெனக் கொள்ளும்
கொள்கையால் மிகைபல செய்தேன் 69-6
குற்றந் தன்னொடு குணம்பல பெருக்கிக் கோல நுண்ணிடை
யாரொடு மயங்கிக், கற்றிலேன் கலைகள் பலஞானம், கடிய
ஆயின கொடுமைகள் செய்தேன் 60-6
குற்றம் செற்றம் இவை முதலாக விடுக்க கிற்றிலேன் 60-7

* அலவலை - மனச் சஞ்சலம். † அன்றி - பகைத்து.

கூறுமா றுன்பணி கூறாத அடியேன் நான்	96-9
கொடியேன் பல பொய்யே உரைப்பேனைக் குறிக் கொள்நீ	1-4
கொடுக்ககிற் றிலேன் ஒண்பொருள் தன்னை	60-7
*சந்தம் பல அறுக்கில்லேன்	73-7
சார்ந்தவர் தம் அடிச் சாரேன்	73-7
சிந்தித்தே மனம் வைக்கவும் மாட்டேன்	60-4
சிறுச் சிறிதே இரப்பார்கட் கொன் றீயேன்	60-4
சுந்தர வேடங்களால் துரிசே செயுந் தொண்டன் எனை	100-3
செஞ்சே லன்ன கண்ணார் திறத்தே கிடந் துற்றலறி, நஞ்சேன் நான் அடியேன் நலமொன் றறியாமையினால்	26-5
செடியனேன் நாயேன் அறியுமா றறிகிலேன் எம்பெருமானை	74-4
செடியனேன் நாயேன் ஆருமா றறிகிலேன் எம்பெருமானை	74-8
செடியனேன் நாயேன் உரையுமா றறிகிலேன் எம்பெருமானை	74-7
செடியனேன் நாயேன் சொல்லுமா றறிகிலேன் எம்பெருமானை	74-3
செடியனேன் நாயேன் பாடுமா றறிகிலேன் எம்பெருமானை	74-2
செடியேன் நான்	96-9
செய்வினை ஒன் றறியாதேன்	89-3
செய்வினை நல்லன செய்யாத கடியேன்	96-9
செல்லுமா செல்லச் செலுத்துமா றறியேன்	67-6
சொல்லிற் குலாவன் றிச் சொல்லேன்	73-3
தக்கவா றொன் றும் இலாதேன்	73-9
†தமரம் பெரிதும் உகப்பன்	73-9
தேடி எங்குங் காண்கிலேன்	77-11
தேடுமா தேடித் திருத்துமா றறியேன்	67-6
தேற்றாதன சொல்லித் திரிவேனோ	1-8
‡தொடர்ந்தவர்க்கும் துணை அல்லேன்	73-3
தொண்டனேன் பரம் அல்லதொரு...ஆனை தந்தான்	100-6
தொண்டனேன் பரம் அல்லதொரு...வேழம் அருள் புரிந்தான்	100-4
நடுக்கம் உற்றதோர் மூப்புவந் தெய்த நமன்தமர் நரகத்திடல் அஞ்சி இடுக்கண் உற்றனன்	60-7
நல்லந்தார் கூரைபுக்கு நலமிக அறிந்தே னல்லேன்	8-4
நல்லே னல்லேன் நானுமக் கல்லால்	15-4
நலமொன் றறியாமையினால் துஞ்சேன்	26-5
நன் றியில் வினையே துணிந் தெய்த்தேன்	60-2
நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத்துன்னைப் பேயாய்த் திரிந்தெய்த்தேன்	1-2

* சந்தம் - ஆசை ; சந்தப் பாடல்கள்.

† தமரம் - வெறும் ஆரவாரம்.

‡ தொடர்ந்தவர் - அடியாராய்த் தொடர்ந்தவர் "சார்ந்தவர்" என 73-7-ல் வருவது காண்க.

நான் கண்டதே கண்டதே காமுறும் கொடியேன் 96-9
நான் கண்டதே கண்டு வாழ்வேன் 73-9
நில்லேனல்லேன் நின்வழி, நின்றார் தம்முடை நீதியை
நினைய வல்லேனல்லேன் 15-4
நெண்டிக் கொண்டேயும் *கிலாய்ப்பன் 73-8
நெல் வால்ஊன்ற வருந்தும் உடம்பிதனை மகிழாது
அழகா அலந்தேன் 3-6
நெறி காணவு மாட்டேன் 59-9
நெறியும் அறிவும் செறிவும் நீதியும் நான்மிகப் பொல்லேன் 73-4
நெறியொன் றறியேன் 26-6
பண்டே உம்மைப் பயிலாதேன் 77-1
பரவும் பரிசொன் றறியேன் நான் 77-1
பழகா நின்று பணிசெய்வார் பெற்ற பயனொன் றறிகிலேன் 77-4
பழுது நான் உழன்று உள் தடுமாறிப் படுசுழித்
தலைப்பட்டனன் எந்தாய் 60-1
பனுவுமா பனுவிப் பரவுமா றறியேன் 67-6
பாடுமா பாடிப் பணியுமா றறியேன் 67-6
பாவியேன் பல பாவங்கள் செய்தேன் 60-6
பிண்டம்சுமந் தும்மொடும் கூடமாட்டோம் பெரியாரொடு
நட்பினி தென்றிருந்தும் 2-2
பிழைத்த பிழையொன் றறியேன் நான் 77-5
பிழைப்புடையேன் மனம் தன்னால் 73-10
பேசிற் †சழக்கலாற் பேசேன் 73-10
பொய்யவ னாயடியேன் புகவே நெறியொன் றறியேன் 26-6
பொய்யே செய்து புறம் புறமே திரிவேன் 52-2
பொருத்தமேல் ஒன்றும் இலாதேன் 73-6
பொன்னடி பரவ மாட்டேன் மறுமையை நினைய 15-4
மடவார் தங்கள் வல்வினைப்பட் டாழ முகந்த என்னை 100-4
மந்திரம் ஒன்றறியேன் 100-3
மறையிடைத் துணிந்தவர் மனையிடை யிருப்ப வஞ்சனை செய்தவர்
பொய்கையும் மாயத் துறையுறக் குளித்துளதாக வைத்துய்த்த
உண்மையெனுந் தகவின்மையை ஓரேன் 53-9
மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன் சுந்தர வேடங்களால்
துரிசே செயும் தொண்டனெனை 100-3
மிண்டர்க்கு மிண்டலாற் பேசேன் 73-3
‡மிறையுந் தறியும் உகப்பன் 73-4

---

* கிலாய்ப்பன் - அங்கலாய்ப்பேன், வருந்துவேன்.
† சழக்கு - பயனில் சொல்; குற்றம்.
‡ மிறை - குற்றம். தறி - வெட்டெனப் பேசுதல்.

முந்திச் செய்வினை இம்மைக்கண் நலிய, மூர்க்கனாகிக்
கழிந்தன காலம் 60-4
முன்னமே உன்சேவடி சேரா மூர்க்கனாகிக் கழிந்தன காலம் 60-3
வலையம் வைத்த கூற்றமீவான் வந்துநின்ற வார்த்தை கேட்டுச்,
சிலையமைத்த சிந்தையாலே திருவடி தொழுதுய்யினல்லால்,
கலையமைத்த காமச் செற்றக் குரோத லோப மதவருடை,
உலை அமைத்திங் கொன்ற மாட்டேன் 5-8
வாழ்வை உகந்த நெஞ்சே மடவார் தங்கள் வல்வினை
பட்டாழ முகந்த என்னை 100-4
விடக்கையே பெருக்கிப் பலநாளும் வேட்கையாற் பட்ட வேதனை
தன்னைக், கடக்கிலேன் நெறிகாணவு மாட்டேன் கண்குழிந்
திரப்பார் கையில் ஒன்றும், இடக்கிலேன் 59-9
விடுக்ககிற்றிலேன் வேட்கையும் சினமும் 60-7
வேண்டில் ஐம்புலன் என்வசம் அல்ல 60-7
வேண்டிற்றுச் செய்து திரிவன் 73-4

145. சுந்தரர் தமது நெஞ்சொடு கிளத்தல்

துஞ்சியும் பிறந்தும் சிறந்தும் துயக்கறாத மயக்கிவை, அஞ்சி
ஊரன் திருப்புறம்பயத் தப்பனைத் தமிழ்ச் சீரினால்,
நெஞ்சினாலே புறம்பயந் தொழுதுய்தும் என்று நினைத்தன
—என்ற பதிகம் 35
அங்க மோதியோ ராறைசேமற்றளி நின்று போந்துவந் தின்னம்பர்
தங்கினோமையும் இன்னதென்றிவர் ஈசனார் எழுநெஞ்சமே
புறம்பயந் தொழப் போதுமே 35-1
அந்தர மால்விசும்பில் அழகானை அருள்புரிந்த துந்தரமோ
நெஞ்சமே 100-3
அழுதுநீ யிருந் தென்செய்தி மனனே 60-1
உய்த்தாடித் திரியாதே உள்ளமே ஒழிகண்டாய் ஊன்கணோட்டம்
எத்தாலும் குறைவில்லை என்பர்காண் நெஞ்சமே...நம்மை
நாளும்...பாவம் தீர்க்கும்...சிற்றம்பலத்தெம் பெருமானைப்
பெற்றாமன்றே 90-6
உரை விரவிய உத்தமனிடம் உணரல்லுறு மனமே 71-4
கவலாதெழு மடநெஞ்சமே...புறம்பயந் தொழப் போதுமே 35-6
கள்ளிநீ செய்த தீமையுள்ளன பாவமும் பறையும்படி தெள்ளிதா
எழுநெஞ்சமே...புறம்பயந் தொழப் போதுமே 35-5
சங்கைப்பட நினையாதெழு நெஞ்சே தொழுதேத்த...மறைக்காடே 71-5
திருத் தினைநகருட் சிவக்கொழுந்தினைச் சென்றடை மனனே 64
நாடுடைய நாதன்பால் நன்றென்றும் செய்மனமே! நம்மைநாளும்
தாடுடைய தருமனார் தமர் செக்கிலிடும்போது தடுத்தாட்
கொள்வான் 90-9

நெஞ்சமே! புறம்பயந் தொழப் போதுமே 35
படையெலாம் பகடார ஆளிலும், பவ்வஞ் சூழந்தர சாளிலும்,
கடையெலாம் பிணைத்தேரை வால், கவலாதெழு
மடநெஞ்சமே...புறம்பயந் தொழப் போதுமே 35-6
பண்டரியன செய்த தீமையும் பாவமும் பறையும்படி
கண்டரியன கேட்டியேல் கவலாதெழு மடநெஞ்சமே .. 35-9
பதியும் சுற்றமும் பெற்ற மக்களும் பண்டையரல்லர் பெண்டிரும்
நிதியி லிம்மனை வாழும் வாழ்க்கையும் நினைப்பொழி
மடநெஞ்சமே...புறம்பயந் தொழப் போதுமே 35-2
புறந் திரைந்து நரம்பெழுந்து நரைத்துநீ உரையால் தளர்ந்,
தறம்புரிந்து நினைப்பதாண்மை யரிது காணிஃதறிதியேல்,
திரம்பியா தெழுநெஞ்சமே சிறுகாலை நாமுறு வாணியம்... 35-3
மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே மனனே நீ வாழுநாளும்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கில் இடும்போது
தடுத்தாட் கொள்வான் 90-1
மலமெலாம் அறும் இம்மையே, மறுமைக்கும் வல்வினை சார்கிலா,
சலமெலாம் ஒழி நெஞ்சமே...புறம்பயந் தொழப் போதுமே 35-8
மற்றொருவரைப் பற்றிலேன் மறவா தெழுமட நெஞ்சமே... 35-4
முன்னைச் செய்வினை இம்மையில் வந்து மூடுமாதலின் முன்னமே
என்னைநீ தியக்காதெழு மடநெஞ்சமே... 35-7
வாடிநீயிருந் தென்செய்தி மனனே! வருந்தி யானுற்ற
வல்வினைக் கஞ்சி, ஊடினால் இனி ஆவதொன் றுண்டே
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே 54-8
வாழ்வை உகந்த நெஞ்சே 100-4

146. சுந்தரர் வரலாறு

1. வரலாறு நிரம்ப உள்ள பதிகம் 100

2. தமது பழைய நிலையைக் கூறுவது

(i) *தானெனை முன்படைத்தான் அதறிந்து தன்
பொன்னடிக்கே நானென்ன பாடல் அந்தோ 100-1

* இது கண்ணாடியிலிருந்து முன்பு தாம் படைக்கப்பட்டு வந்ததைக் குறிக்கும். "நீடிய தண் கயிலாயத் தாடியில்தன் நிமலவுரு நிழற்ற ஆங்கே கூடிவரும் பெருங்கிழமை" —பூவாளூர்ப் புராணம்.

" தானெனை முன்படைத்தான் என்ற தகவுரையை
நானென்று உண்மை பெற்று நாமுணர்வ தெந்நாளோ" என்னும் இப்பகுதி தாயுமானாரால் 'அறிஞருரை'யில் எடுத்தாளப்பட்டுளது.

(ii) *அணுக்க வன்றொண்டன் 70-10
(iii) உரிமையால் உரியேன் 14-11
(iv) கல்லால் நிழற்கீழ் ஒருநாள் கண்டதும் அல்லால்
விரகொன்றிலம் எம்பெருமான் 2-5

(கயிலையிற்) கமலினி அநிந்திதை என்னும் மாதர்களின் கண்வலைப்பட்டதால் வினைக்கு ஆளானேன் என வருந்தியது

(v) கட்டனேன் பிறந்தேன் உனக்காளாய்க் காதற் சங்கிலி
காரணமாக 54-2
(vi) கூடுமாறெங்ஙனமோ என்று கூறக் குறித்துக் காட்டிக்
கொணர்ந்தெனை யாண்டு, வாடிநீ வாளா வருந்த
லென்பானை வலிவலந்தனிற் கண்டு கொண்டேனே 67-6
(vii) மானை நோக்கியர் கண்வலைப்பட்டு வருந்தி யானுற்ற
வல்வினைக்கஞ்சி 54-6
(viii) மருவிப் பிரிய மாட்டேன்நான் †வழிநின்
றொழிந்தேன் ஒழிகிலேன் 77-3
(ix) வாடிநீயிருந் தென்செய்தி மனனே, வருந்தி யானுற்ற
வல்வினைக் கஞ்சி-ஊடினால் இனி ஆவதொன் றுண்டே
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே 54-8

3. மண்ணுலகில் நரனாக விதிக்கப்பட்டது

வறிதே நிலையாத இம் மண்ணுலகில் ‡நரனாக வகுத்தனை நான்
நிலையேன், பொறிவாயில் இவ்வைந்தினையும் அவியப் பொருது
உன் அடியே புகும் சூழல் சொல்லே 3-2

4. சுந்தரர் ஊர் நாவலூர் என்பது

திருநாவல் ஆரூரன் 19-11
நாதனுக் கூர் நமக்கு ஊர்...நாவலூர் என்றேத நற்றக்க
வன்றொண்டன் ஆரூரன் 17-11
நாவலூரன் 34-11

* அணுக்கன் - அகம்படித் தொண்டு செய்பவன். கயிலையில் அண்மையிலிருந்து தொண்டு செய்தவர். "சுந்தரனைத் துணைக்கவரி வீசக் கொண்டார்" —அப்பர், 6-96-5.

† கயிலையில் ஒழுக்கம் தவறினதால் உன்னைவிட்டுப் பிரிந்தேன்; இனிப் பிரியேன்.

‡ தலைப்பு 146-2, (viii) - பாடல் 77-3ன் கீழ்க் குறிப்பைப் பார்க்கவும்.

5. சுந்தரருடைய குலம்

அருங் குலத்து ஊரன்	72-11
அல்லியந் *தாமரைத்தார் ஆரூரன்	22-10

6. தந்தை தாய் இன்னாரெனல்

இசைஞானி †காதலன்	39-11
இசைஞானி சிறுவன்	38-10
சடையன்-இசைஞானி காதலன்	39-11
சடையன் காதலன்	57-12
சடையன்தன் காதலன்	58-10
சடையன் தன் சிறுவன்	34-11
சடையனவன் ‡சிறுவன்	7-11
நண்புடைய நன்சடையன் §இசைஞானி சிறுவன்	16-11

7. தமது பேயர் 'ஆரூரன்' என வந்ததின் காரணம்

ஆரூர்த் திருமூலட் டானத்தே அடிப்பே ராரூரன்	95-11
ஆரூரன் ஆரூரன்பேர் முடிவைத்த...புலவன்	41-9
சீராருந் திருவாரூர்ச் சிவன்பேர் சென்னியில் வைத்த ஆரூரன்	89-11

8. சுந்தரர் நல்ல அழகும், தேகக்கட்டும் உள்ளவர் என்பது

திருமருவுந் திரள் தோளான்	73-11
மலை மலிந்த தோளூரன்	30-11

9. நான்மறை, அங்கம் ஓதினவர் சுந்தரர் என்பது

நாளும் ஞாலந்தான் பரவப் படுகின்ற நான்மறை அங்கம் ஓதிய நாவன் வன்றொண்டன்	54-10

10. நல்ல சீலத்தவர் சுந்தரர் என்பது

சீலந்தான் பெரிதும் மிகவல்ல சிறுவன் வன்றொண்டன்	54-10
நீதியில் ஒன்றும் வழுவேன்	73-5

11. சிறு வயதினர் என்பது

(திருவொற்றியூரிற் சங்கிலியாரை மணஞ் செய்து, பின்பு) கண்ணிழந்த காலத்தில் சுந்தரர் சிறு வயதினர் என்பது

சீலந்தான் பெரிதும் மிகவல்ல சிறுவன் வன்றொண்டன் [திரு ஒற்றியூர்ப் பதிகம்] 54-10

---

* தாமரைத்தார் அந்தணருக்கு உரியது.

†, ‡, § தலைப்பு 146-12ல் செய்யுள் 17-7ன் கீழ்க்குறிப்பைப் பார்க்க.

12. சிவபிரான் வேதிய விருத்தனாக வந்து, வாதாடி, ஓலை உண்டுபண்ணிக் காட்டித் திருவெண்ணெய் நல்லூரில் வலிய ஆட்கொண்டதும், பின் ஒளித்ததும்

அடக்கங்கொண் டாவணங் காட்டி,நல் வெண்ணெயூர்
ஆளுங் கொண்டார் 17-10

அன்று வந்தெனை அகலிடத் தவர்முன் ஆளதாகவென் றாவணங்
காட்டி நின்று வெண்ணெய் நல்லூர்மிசை ஒளித்த
நித்திலத்திரள் தொத்தினை 62-5

ஆத்த மென்றெனை ஆளுகந்தானை 62-4

ஆவணஞ்*செய் தாளுங் கொண்டு 5-10

†ஒட்டியாட் கொண்டுபோய் ஒளித்திட்ட உச்சிப் போதனை 59-10

ஓர் ஆவணத்தால் எம்பிரானார் வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை ஆளுங்கொண்ட நம்பிரானார் 17-5

காண்டனன் காண்டனன் காரிகையாள் தன் கருத்தனாய்
ஆண்டனன் ஆண்டனன் 45-1

செய்யவனாகிவந் திங் கிடரானவை தீர்த்தவனே 26-6

‡தாயவளாய்த் தந்தை ஆகிச் சாதல் பிறத்தலின்றிப்,
போயகலாமைத் தன் பொன்னடிக் கென்னைப் பொருந்த
வைத்த வேயவனார் 17-7

---

* செய்து - உண்டு பண்ணி.

† இது 'அடிமையிவன் எனக்கு' என்னும் சபதத்துடன் போய்ச் சுந்தரரைத் தடுத்தாட்கொண்டு திருவெண்ணெய் நல்லூர்த் திருக்கோயிலுள் உச்சிப்போதில் சிவபிரான் (வேதியர்) ஒளிந்து மறைந்ததைக் குறிக்கும்போலும், 62-5ம் பார்க்க.

பெரிய புராணம் விரிவுரை (விறன்மிண்ட-புரா. பக்கம் 63 கீழ்க் குறிப்பு பின்வருமாறு உளது: 'திருவாரூரரையும்......தியாகேசரையும் புறகென்று விறன்மிண்ட நாயனார் சொல்லியபின், "திருவாரூர்த் திருக்கோயில் இரண்டாம் ஆவரணத்தில் மதிற்சுவரை ஒட்டி வடக்குத் திருவாயிலுக்கு நேரே தியாகேசர் வன்றொண்டர்க்குக் காட்சி தந்தருளினர். அதனைக் குறிக்க இப்போது அங்கு 'ஒட்டுத் தியாகர் கோயில்' என்றொரு சிறு ஆலயம் உண்டு. இதனை நினைந்தே நம்பிகள் 'ஒட்டியாட் கொண்டு போயொளித்திட்ட உச்சிப் போதனை' எனக் குறித்தனர் போலும்.'

‡ ஆங்காங்கு, சடையன் இசைஞானி சிறுவன், காதலன் என்றாரே ஒழிய, 'மகன்' 'பிள்ளை' எனக் கூறாததாலும், எம்மான் எம் அ(ன்னை) என்னாது 'எம்மான் எம்அ(ன்)னை என்றவர்' (21-5) என்று கூறினதாலும், சிவனே தமக்குத் தாய் தந்தையாய்-இசை ஞானியாரின் கருவில் அமைந்து பிறவாமல், சடையனார் - இசை ஞானியார் இல்லத்திற்

நம்பனே அன்று வெண்ணெய் நல்லூரில் நாயினேன் தன்னை
ஆட்கொண்ட சம்புவே 69-8
நேசத்தினால் என்னை ஆண்டு கொண்டார் 19-2
படுவிப்பாய் உனக்கே ஆள் 29-9
பலரையும் பணியாமே தொடுவிப்பாய் 29-9
போந்தனை தரியாமே 29-7
மண்ணின்மேல் மயங்கிக் கிடப்பேனை வலிய வந்தெனை
ஆண்டு கொண்டானே 70-2
முன்செய்த வல்வினைகள் களை களைந்தெனை ஆளல்லுறு கண்டன் 71-7
வந்தொருநாள் இடமாடியார் வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை ஆளுங்கொண்ட நடமாடியார் 17-9
வாயாடி மாமறை யோதி ஓர் வேதியனாகி வந்து...வெண்ணெய்
நல்லூரில் வைத்தெனை ஆளுங்கொண்ட நாயாடியார் 17-8
விருத்தனாய வேதன் 6 10
விலை ஆவணம் உடையாய் 23-5
வெண்ணெய் நல்லூரில் அற்புதப்பழ ஆவணங் காட்டி அடியனா
என்னை ஆளது கொண்ட நற்பதத்தை நள்ளாறனை 68-6
வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை ஆளும்கொண்ட *(ஏவலனார்) 17

சிறுவனாகத் தோன்றினரோ சுந்தரர்!; பிறத்தல் இல்லாமையால் தான் சுந்தரர் இறத்தல் இல்லாது கயிலைக்குக் 'களையா உடலோடு' சென்றனர் போலும்.

மேலும், "சாதலும் பிறத்தலும் தவிர்த்து என்னை
வகுத்துத், தன்னருள் தந்தஎம் தலைவனை" (58-1)
"சாதல் பிறத்தலின்றி" (17-7)
"மண்ணுலகில் நரனாக வகுத்தனை" (3-2)

என வருவனவும் கவனிக்கற்பாலன.

"மனைவி இசைஞானியொடு மணங்கமழ்மென் மலரணையில்
வதிந்து கெஞ்சங், கனிவினொடு மகப்பேறிலாமையினைக்
குறித்துருகிக் கழறுங்காலை...ஒளிர்சோதியில் இருவர்
நாப்பண்...மூன்று வயதொடு மதலை பற்பல பூடணமிலங்க
முக்கட்தேவன் தோன்றினன் என்றுள மகிழ்ந்து சடையனார்
கரத்தெடுத்துத் தோளிற் சேர்த்தார்.. வான்தரு மென்மலர்
சொரிந்து வளவார் துந்துமி முழக்கு வானோர் ஆர்த்தார்"
சுந்தரர் அவதார-89, 90.—திருநாவலூர்ப் புராணம்.

* "எனது ஏவலைச் செய்யவேண்டிய அடிமை இவன்" எனச் சொல்லி வெற்றிகரமாக வாதாடித் தமக்கு நன்மை செய்வித்த காரணத்தால் பெருமானை—ஏவலனார், நாவலனார், நன்மையினார், நம்பிரானார், நாயனார், நாயாடியார், நடமாடியார் என்றெல்லாம் ஆரூரர் குறிப்பிடுகின்றார். (நாயாடியார் - வேட்டை ஆடினவர்)

13. உனக்கு ஆளாய் விட்டேன்; இனி 'அல்லேன்' என மாட்டேன், நீயே எனது குரு, உனக்குக் குற்றேவல் செய்வேன் என்றது

(அத்சா) உனக்காளாய் இனி அல்லேன் எனல் ஆமே 1
ஆமாத்தூரெம் அடிகட்கு ஆட்பூண்டனன் பூண்டனன் பொய்யன்று 45-1
ஆமாத்தூரெம் அடிகளைக் கூடுவன் கூடுவன் குற்றமதற்றென் குறிப்பொடே 45-2
குறியே என்னுடைய குருவே! உன் குற்றேவல் செய்வேன் 26-4

14. சிவனுக்கு அடிமை பூண்டேன், அவர் என்தலைவர், அவர் என்னை ஆட்கொண்டார், பிறரோடு சேரேன்—என்றது

அடையுடையன் 89-2
ஆண்ட நம்பி முன்னை 63-6
ஆண்டவன் ஆண்டவன் ஆமாத்தூரையும் என்னையுமாட் பூண்டவன் பூண்டவன் 45-6
ஆணையூரல் அடியேன் அடிநாயேன் 57-1
*ஆரூரன் தம்பிரான் ஆரூரன் 90-10
இங்ஙனம் வந்திடர்ப் பிறவிப் பிறந்தயர்வேன் அயராமே அங்ஙனம்வந் தெனையாண்ட அருமருந்து 51-4
எத்தான் மறவாதே நினைக்கின்றேன், மனத்து உன்னை வைத்தாய் 1-1
என்னை ஆளுடை நம்பி 63
என்னை இன்னருள் எய்துவிப்பானை 56-2
என்னை உடையான் 91-6
எனை உடையான் 89-2
ஏழேழு படிகால் எமையாண்ட பெம்மான் 52-9
கூடுமாறெங்ஙனமோ வென்று கூறக் குறித்துக் காட்டிக் கொணர்ந்தெனை யாண்டு வாடிநீ வாளா வருந்த லென்பானை 67-6
சரண மென்பேன் அடையுடையன் 89-2
தொண்டனேன் அறியாமை அறிந்து, கல்வியன் மனத்தைக் கசிவித்துக் கழலடி காட்டி என் களைகளை அறுக்கும் (வானவர் வணங்க நின்றானை) 67-5
தொண்டாடித் திரிவேனைத் தொழும்பு தலைக்கேற்றும் சுந்தரனே 46-5
நமை யாளுடையான் 50-3
பொய்யே செய்து புறம்புறமே திரிவேன் தன்னைப் போகாமே மெய்யே வந்திங் கெனையாண்ட மெய்யா! 52-2

* ஆரூரனை ஆண்ட பிரான்: 'தம்மானை அறியாத சாதியாருளரே' 38-1.

முன்னை நம்பி...வார்சடை நம்பி முழுதிவை யித்தனையுந்
தொகுத்தாண்ட தென்னை நம்பி 63-7
வாழ்விப்பன் என ஆண்டீர் வழியடியேன் உமக்கு 46-8
வீண் அடிமை உகந்தீர் 46-4

15. 'வன்றொண்டன்' எனத் தமக்குப் பெயர் வந்த காரணம்

தன்மையி னால்அடி யேனைத் தாம் ஆட்கொண்ட நாட்சபைமுன்
வன்மைகள் பேசி வன்றொண்டன் என்பதோர் வாழ்வு
தந்தார் 17-2

தலயாத்திரைத் தொடக்கம்

16. துறையூரில் "தவநெறி" தா என வேண்டியது

துறையூர்த் (தலைவா) உனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே 13

17. திருவடி தீக்ஷைபெற விரும்பியதும், வந்தவர் இறைவர் என்பதை அறியாது அவரை மதியாது பேசினதும், அதற்காக வருந்தியதும்

ஆரூரன் மதியாது சொன்ன அன்பனை...அதிகை மாநகருள்
வாழ்பவனை இறைபோதும் இகழ்வன் போலியானே 33-10
*தம்மானை அறியாத சாதியார் உளரே...அறிவிலா நாயேன்
எம்மானை கெடிலவட வீரட்டானத் துறைவானை
இறைபோதும் இகழ்வன்போலியானே 38-1
எம்மான் தன் அடிக்கொண்டென் முடிமேல் வைத்திடும்
என்னும் ஆசையால் வாழ்கின்ற...நாயேன் 38-1

18. காழிப் பெருமானின் காட்சிபெற்றது

(கடவுளை)...கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே 58

19. திருவாரூரிற் சுந்தரருக்கு இருந்த பற்றும், திருவாரூர்த் தொண்டர்கள் தம்மை எதிர்கொண்டு அழைத்தபோது அவர்களை நோக்கிப் பாடினதும்

(அரையன்) இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர் 73

---

* திருஅதிகைக்கு அடுத்த சித்தவட மடத்தில் தூங்கும்போது இறைவர் சுந்தரரின் முடிமீது தமது தாளை நீட்டி வைக்க, இறைவர் என்று அறியாது நீர் யார், சும்மா மிதிக்கிறீர் என்று சுந்தரர் கேட்க, என்னை அறிந்திலையோ என்று கூறி இறைவர் மறைந்த வரலாறு இங்குக் குறிக்கப்பட்டுளது.

எந்தை இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ என்று
சிந்தை செயுந் திறம் வல்லான் நாவலாரூரன் 73-11
திருவாரூரே சிந்திப்பன் 77-11

20. பரவைச் சிவனருளால் மணஞ்செயப் பெற்றது

மாழை யொண்கண் பரவையைத் தந்தாண்டானை 51-10

21. அடியேன், அடியார்க் கடியேன் எனத் திருத்தொண்டத் தொகை பாடினது

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்...ஆரூரன்
ஆரூரில் அம்மானுக் காளே...ஆரூரன் அடிமை கேட்
டுவப்பார் ஆரூரில் அம்மானுக் கன்பராவாரே 39

22. திருத்தொண்டத்தொகை பாடினதற்கு முன்னரே, *கச்சியைத் தரிசித்தற்கு முன்னரே, சுந்தரருடைய தாய்தந்தையார் சிவனடி கூடிவிட்டார் என்பது

†எம்மான் எம்(அ)ன்னை யென்றவரிட் டிறந்தொழிந்தார் 21-5
என்னவனும் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி (சிறுவன்) 39-11

23. பரவையின் வருத்தம் நீங்கக் குண்டையூரில் நெல் பெற்றதும், திருவாரூருக்கு நெல் வந்துசேர ஆள்வேண்டிப் பாடினதும்

கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
,, அல்லல் களைந்தடியேற் கவை அட்டித்தரப் பணியே 20-4, 5
,, அவை அட்டித்தரப் பணியே 20-2, 3, 6, 9
,, அன்பதுவா யடியேற் கவை அட்டித் தரப் பணியே 20-7
, ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப் பணியே 20-1
,, இரக்கமதா யடியேற் கவை அட்டித் தரப் பணியே 20-8
உமைநங்கை ஓர் பங்குடையாய்...பரவை பசி வருத்தம் அது
நீயும் அறிதியன்றே 20-6

---

* கச்சியைத் தரிசித்ததற்கு முன்பே தாய்தந்தையர் இருவரையும் இழந்திருந்தனர் சுந்தரர் என்பது "எம்மான் எம்(அ)ன்னை என்றவரிட் டிறந் தொழிந்தார்" எனக் கச்சி மேற்றளிப் பதிகத்தில் (21-5) வருவதால் அறியக்கிடக்கின்றது.

† எம்மான் - என்தந்தை ; எம்மனை - எம்அன்னை 24-3-ம் பார்க்க.

திருநாவல ஊரனவன் நெல்லிட ஆட்கள் வேண்டி
நினைந்தேத்திய பத்து 20-10
மாதர் நல்லார் வருத்தமது நீயும் அறிதியன்றே 20-3
வாளன கண் மடவாள் அவள் வாடி வருந்தாமே, கோளிலி
எம்பெருமான் குண்டையூர்ச் சில நெல்லுப் பெற்றேன்,
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே 20-1

24. வனப்பகை, சிங்கடி இவர்தம் தந்தையாகத் தம்மைக் கூறுவது

கோட்புலி சேடார் பூங்குழற் சிங்கடியப்பன் திருவாரூரன் 15-10
(நங்கை) சிங்கடி தந்தை 27-10, 37-11, 47-10, 57-12, 68-10, 7[illegible]-10, 98-11
வனப்பகை அப்பன் (வன்றொண்டன்) 12-11, 29-10, 30-11, 33-10, 34-11, 44-10, 57-12, 68-10, 87-10

25. வலிவலத்திற் பெருமானைக் கண்டு களித்தது

வலிவலந் தனில் வந்து கண்டேனே 67

26. திருப்புகலூரிற் (பொன் பெற்று) புகலூர் பாடுமின் புலவீர்காள் என்று உபதேசித்தது

புகலூர் பாடுமின் புலவீர்காள் (இம்மையே தரும்
சோறுங் கூறையும்) 34, 34-1

27. திருப்பனையூரிற் பரமனது திருக்கூத்தைத் தரிசிக்கப் பெற்றது

அரங்கி லாட வல்லார் அவரே அழகியரே 87-7
தொண்டர்கள் துள்ளிப் பாடநின்று ஆடுமாறு வல்லார்
அவரே அழகியரே 87-1
துரங்கன் வாய்ப் பிளந்தானும் தூமலர்த் தோன்றலும்
அறியாமற் றோன்றிநின் றரங்கில் ஆட வல்லார் 87-7
தோளும் ஆகமும் தோன்ற நட்டமிட் டாடுவார் 87-4

28. பாச்சிலாச்சிராமத்தில் பொன்பெறாத காரணத்தால் புழுங்க அழுங்கி, 'இவரலா தில்லையோ பிரானார்' என்று ஏசினதுபோலப் பாடியது

ஏசின அல்ல இகழ்ந்தன அல்ல எம்பெருமான் 14-12

பாச்சிலாச்சிராமத் தடிகள் என்றிவர்தாம் பலரையும்
ஆட்கொள்வர், பரிந்தோர் பேச்சிலர், ஒன்றைத் தரவில
ராகில் இவரலா தில்லையோ பிரானார் 14-4
பிணிப்பட ஆண்டு பணிப்பிலராகில் இவரலா தில்லையோ
பிரானார் 14-10
பித்தரே ஒத்தோர் நச்சிலராகில் இவரலா தில்லையோ பிரானார் 14-1
பிழைத்தது பொறுத்தொன் றீகிலராகில் இவரலா தில்லையோ
பிரானார் 14-9
பின்னையே அடியார்க் கருள்செய்வதாகில் இவரலா தில்லையோ
பிரானார் 14-2
பெருமைகள்பேசிச் சிறுமைகள் செய்யில் இவரலா தில்லையோ
பிரானார் 74-11
பெற்றபோ துகந்து பெறாவிடில் இகழில் இவரலா தில்லையோ
பிரானார் 14-3
மெய்யரே ஒத்தோர் பொய்செய்வ தாகில் இவரலா தில்லையோ
பிரானார் 14-7
யாது சொன்னாலும் பிரிந்திறைப் போதிற் பேர்வதே யாகில்
இவரலா தில்லையோ பிரானார் 14-5

29. பொன்னும் போகமும் விரும்பிக் கேட்டதும், தரப்பெற்றதும்

['வேண்டுகோள்' என்னும் தலைப்பு 141 பார்க்க]

கந்தமுதல் ஆடை ஆபரணம் பண்டாரத்தே எனக்குப் பணித்தருள
வேண்டும், பண்டுதான் பிரமாணம் ஒன்றுண்டே 46-5
படுவிப்பாய் உனக்கேஆள் பலரையும் பணியாமே
தொடுவிப்பாய் துகிலொடு பொன் 29-9
புன்மைகள் பேசவும் பொன்னைத் தந்தென்னைப் போகம்
புணர்த்த நன்மையினார் 17-2
பொன்னவன் பொன்னவன் பொன்னைத்தந் தென்னைப்
போகவிடா மின்னவன் மின்னவன் 45-8
பொன்னு மெய்ப் பொருளும் தருவானை 59-1
போகமும் திருவும் புணர்ப்பானை 59-1
மாதிமையேல் உடையீர் மா நிதியந் தருவனென்று வல்லீராய்
ஆண்டீர் 46-10
வாட்டமெலாந்தீரக் கட்டியை யெமக்கீவதுதான் எப்போது
சொல்லீர், கடல் நாகைக் காரோணம் மேவி யிருந்தீரே 46-4

30. ஆறைமேற்றளி தரிசித்த பின்பு திருஇன்னம்பர் தரிசித்துப் புறம்பயம் தொழப்போந்தார் என்பது

*ஆறைமேற்றளி நின்றும் போந்து வந்து இன்னம்பர்த் தங்கினேனையும், *இன்ன தென்றிலர் ஈசனார், எழு நெஞ்சமே...புறம்பயந் தொழப் போதுமே* 35-1

31. கூடலையாற்றூருக்குப் போகும் வழியை இறைவன் காட்டிய விவரம்

i. வழியிற் போந்த அதிசயம் :

கூடலையாற்றூரில் அடிகள், அத்தன், அந்தணன், அழகன், அறவன், ஆதி, ஆர்வன், ஆலன், ஐயன்—இவ்வழி போந்த அதிசயம் அறியேனே 85

ii. வழிவந்தபோது, எங்கு, எங்ஙனம், யாருடன் இறைவர் வந்தார் என்பது

†உமையோடும்...வழிபோந்த அதிசயம் அறியேனே 85-1, 5
ஏந்திழையாளோடும்...வழிபோந்த அதிசயம் அறியேனே 85-7
குறள்படை யதனோடும்...வழிபோந்த அதிசயம் அறியேனே 85-8
கூடலையாற்றூரில் கொடியிடை யவளோடும் ஆடல் உகந்தானே 85-10
கூடலையாற்றூரில்...வழிபோந்த அதிசயம் அறியேனே 85
கூர்நுனை மழுவேந்தி...வழிபோந்த அதிசயம் அறியேனே 85-3
‡கோலம துருவாகி...வழிபோந்த அதிசயம் அறியேனே 85-9
சோதிய துருவாகி...வழிபோந்த அதிசயம் அறியேனே 85-5
பாவையொடும் உடனே...வழிபோந்த அதிசயம் அறியேனே 85-2, 4-9
பேய்க்கணமுஞ் சூழ...வழிபோந்த அதிசயம் அறியேனே 85-8
பொடியணி திருமேனி...யோடும் வழிபோந்த அதிசயம் அறியேனே 85-1
மங்கையொடும் உடனே...வழிபோந்த அதிசயம் அறியேனே 85-3, 6, 8

---

* கவனித்து இன்ன இடத்துக்குப் போ என்று குறிப்பித்தாரிலை.

† தேவியுடன் பெருமான் வந்ததைப் பாடல்தோறும் குறிக்கின்றாராதலின் மறையவர் கோலத்துடன் சிவபிரான் வரத், தேவியார் அவருடன் பார்ப்பனிக் கோலத்துடன் வந்தனர் போலும். 'வடிவுடை மழுவேந்தி மதகரி உரிபோர்த்து' முதலிய பிற காட்சிகளைத் தாம் மறைந்த பின் சுந்தரருக்குக் காட்டினர் போலும்.

‡ கோலம் - வேதியர் கோலம்.

மதகரி உரிபோர்த்து...வழிபோந்த அதிசயம் அறியேனே 85-1
மதியமொடு வாளரவும் சடைமேல்...வழிபோந்த அதிசயம் அறியேனே 85-7
மழுவேந்தி...வழிபோந்த அதிசயம் அறியேனே 85-1, 3
மறைமுதல் வானவரும் மாலயன் இந்திரனும்...சூழ வழிபோந்த அதிசயம் அறியேனே 85-8
மாலொடு நான்முகனும் உடனே-இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே 85-2
விடையது தானேறி...வழிபோந்த அதிசயம் அறியேனே 85-9
வித்தக வீணையொடும்...வழிபோந்த அதிசயம் அறியேனே 85-6
வெண்புரி நூல்பூண்டு...வழிபோந்த அதிசயம் அறியேனே 85-6
வேதியர் விண்ணவரும் மண்ணவரும் தொழ...வழிபோந்த அதிசயம் அறியேனே 85-5

32. தில்லையைத் தரிசித்ததும், *பேரூரின் பெருமையைத் தில்லைவாழ் அந்தணர்க்கு ஆரூரர் எடுத்துரைத்ததும்

மீகொங்கில் அணிகாஞ்சிவாய்ப் பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றாமன்றே 90-10

33. காஞூட்டுமுள்ளூரிற் கண்டு தோழுதது

காணூட்டு முள்ளூரிற் கண்டு கழல்தொழுது 40-11
காணூட்டு முள்ளூரிற் கண்டு தொழுதேனே 40

---

* பேரூரர் பெருமானை........சிற்றம்பலத்தே பெற்றாம்—என்று பேரூரைத் தில்லைப்பதிகத்திற் சிறப்பித்ததென்னை எனத் தில்லைவாழ் அந்தணர்கள் சுந்தரரைக் கேட்டார்கள். அதற்கு நம்பிகள் தில்லையிற் போலவே பேரூரிலும் பெருமான் ஆனந்த நடனம் புரிந்தருளுகின்றார்—என விடை கூறினர்.

(தில்லைவாழ் அந்தணர்) "நம்பிபே ரூர்ச்சிறப்ப நயந்தெடுத்த தென்?" என்றார்; மாண்ட குணத் தந்தணர்கள் வினவுதலும் வன்றொண்டர் நீண்டமகிழ்வினராகி நிலைமையவர்க் கருள்செய்வார், ஈண்டு நடம் புரிவதுபோல் எம்பிரான் †போதிவனத் தாண்டுமன வரதமுநல் லானந்த நடம்புரியும்" —பேரூர்ப் புராணம், அழகிய திருச்சிற்றம்பலப் படலம், 2, 3

இதை உணர்ந்த தில்லைவாழ் அந்தணர்கள் பேரூருக்குச் சென்று பெருமானை வணங்கினர்.

† போதி வனம் - பேரூர்.

34. (1) திருமுதுகுன்றத்தில் (பரவையின் பொருட்டுப்) பொன்வேண்டிப் பெற்றதைத் திருவாரூர்க் குளத்தில் எடுத்தது

இவள் வாடுகின்றாள், ஐயா தந்தருளாய் அடியேன் இட்டளங்
கெடவே 25-5
உம்பரும் வானவரும் உடனே நிற்கவே எனக்குச் செம்பொனைத்
தந்தருளித் திகழும் முதுகுன்றமர்ந்தீர் 25-2
பரவை குணங்கொண்டிருந்தாள் முகப்பே, அங்கணனே அருளாய்
அடியேன் இட்டளங் கெடவே 25-4
பரவையிவள் தன்முகப்பே அடிகேள் தந்தருளீர் அடியேன்
இட்டளங் கெடவே 25-6
பரவையிவள் தன்முகப்பே அர்த்தனனே யருளாய் அடியேன்
இட்டளங் கெடவே 25-7
பரவையிவள் தன்முகப்பே அரசே தந்தருளாய் அடியேன்
இட்டளங் கெடவே 25-8
பரவையிவள் தன்முகப்பே என்செய்த வாறடிகேள் அடியேன்
இட்டளங் கெடவே 25-1
பரவையிவள் தன்முகப்பே கூத்தா தந்தருளாய் கொடியேன்
இட்டளங் கெடவே 25-9
பரவையிவள் வாடாமே அத்தா தந்தருளாய் அடியேன்
இட்டளங் கெடவே 25-3
பரவையிவள் வாடுகின்றாள் எம்பெருமான் அருளீர் அடியேன்
இட்டளங் கெடவே 25-2

(2) பரவைக்குச் சிவபிரான் ஏன் உதவினர் என்பது

[நகைச்சுவைக் காரணம்]

*முன்றான் கடல் நஞ்சம் உண்ட அதனாலோ பின்றான் பரவைக்
குபகாரம் செய்தாயே 32-2

35. திருக்கோலக்காவினில் இறைவனைக் காணப்பெற்றது

கோலக் காவினிற் கண்டுகொண்டேனே 62

36. குருகாவூரில் தமது கொடிய பசிதீர உணவுபெற்றது

ஆவியைப் போகாமே தவிர்த்தென்னை ஆட்கொண்டாய் 29-2
இத்தனை யாமாற்றை அறிந்திலேன் எம்பெருமான் 29-1
சாந்தனை வருமேலுந் தவிர்த்தென்னை ஆட்கொண்ட வேந்தனே 29-7
பாடுவார் பசிதீர்ப்பாய் 29-3

* இது ஒரு நகைச்சுவைக் காரணம் போலும், தலைப்பு 146-67 பார்க்க.

போர்த்தனை தரியாமே 29-7
*வெப்பொடு †பிணியெல்லாம் தவிர்த்தென்னை ஆட்கொண்டாய் 29-4

37. திருக்கச்சூரைத் தரிசிக்கத் தாம் விரும்பியதும், திருக்கச்சூரில் இறைவன் பலி ஏற்று உணவளித்ததும்

i. கச்சூர் ஆலக்கோயில் அம்மானை உன்ன முன்னும்
மனத்தாரூரன் 41-10
ii. ‡கதுவாய்த் தலையிற் பலிநீ கொள்ளக் கண்டால் அடியார்
கவலாரே, அதுவா ஆமாறிதுவோ கச்சூர் ஆலக்கோயில்
அம்மானே 41-1
iii. காதல் செய்து களித்துப் பிதற்றிக் கடிமா மலரிட் டுனை எத்தி,
ஆதல் செய்யும் அடியார் இருக்க ஐயங்கொள்வ தழகிதே,
ஓதக் கண்டேன் உன்னை மறவேன் உமையாள் கணவா!
எனையாள்வாய்...கச்சூர் ஆலக்கோயில் அம்மானே 41-9

38. ஓணகாந்தன் தளியில் போன் வேண்டிப் பாடினது

எம்மைப் பெற்றால் ஏதும் வேண்டீர், ஏதுந் தாரீர், ஏதும் ஓதீர்...
உம்மை அன்றே எம்பெருமான் 5-7
கையில் ஒன்றும் காணம் இல்லைக் கழலடிதொழுது உய்யின்
அல்லால்...உய்யுமாறென் றருளிச் செய்யீர் 5-1
தேடித் தேடித் திரிந்தெய்த்தாலும் சித்தம் என்பால் வைக்கமாட்டீர்
ஓடிப்போகீர் பற்றுந் தாரீர்! ஓணகாந்தன் தளியுளீரே 5-5
மெய்ம்மை சொல்லி ஆளமாட்டீர் மேலை நாளொன் றிடவும் இல்லீர் 5-7

39. திருவொற்றியூரைச் சார்ந்ததும், இறைவன் திருவருளால் சங்கிலியாரை மணந்ததும்

ஓர்ந்தனன் ஓர்ந்தனன் உள்ளத்துள்ளே நின்ற ஒண்பொருள்,
சேர்ந்தனன் சேர்ந்தனன் சென்று திருவொற்றியூர் புக்குச்
சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலிமென்தோள் தடமுலை
ஆர்ந்தனன் ஆர்ந்தனன் ஆமாத்தூர் ஐயன் அருளதே 45-4
நொய்யேனைப் பொருட்படுத்துச் சங்கிலியோ டெனைப்
புணர்த்த தத்துவனை 51-11

---

* வெப்பு - வெயிலின் கொடுமை.

† பிணி - பசிப்பிணி.

‡ இன்றும் என்பொருட்டுப் பலி ஏற்பதாயிற்றே எனச் சுந்தரர் வருந்துகின்றார்.

40. (1) திருவாரூரைவிட்டுப் பிரிந்திருக்க முடியவில்லை என்பதும்; (2) திருவாரூரில் அவருக்கு இருந்த பற்றும்

(1)

இங்கலக்கு முடற்பிறந்த அறிவிலியேன் செறிவின்றி, எங்குலக்கப்
பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே 51-3
இருவர் நினைந்தினிதேத்தப் பெற்றுளனும் பெருமையனைப்
பெரிதடியேன் கையகன்றிட் டெற்றுளனைப் பிரிந்திருக்கேன்
என்னாரூர் இறைவனையே 51-9
சங்கிலியோ டெனைப்புணர்த்த தத்துவனைச் சழக்கனேன்
எங்குலக்கப் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே 51-11
சடையானை விடையானை அடைவின்றி என்செயநான் பிரிந்
திருக்கேன் என் ஆரூர் இறைவனையே 51-7
செப்பரிய அயனொடுமால் சிந்தித்தும் தெரிவரிய
அப்பெரிய திருவினையே அறியாதே அருவினையேன்
ஒப்பரிய குணத்தானை இணையிலியை அணைவின்றி
எப்பரிசு பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே 51-5
தேவர் குலக்கொழுந்தை மறந்திங்ஙனம் நான், என்னறிவான்
பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே 51-8
பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் பாவியேன், *பொத்தி
னநோ யதுவிதனைப் பொருளறிந்தேன் போய்த்தொழுவேன்,
...எத்தனைநாள் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே 51-1
பரவையைத் தந்தாண்டானை மதியில்லா ஏழையேன் பிரிந்
திருக்கேன் என்னாரூர் இறைவனையே 51-10
புரமெரித்த தன்மையனை முன்னாக நினையாத மூர்க்கனேன்
ஆக்கை சுமந்தென்னாகப் பிரிந்திருக்கேன் என்னாரூர்
இறைவனையே 51-6
மான்மருவுங் கையானை எங்ஙனம் நான் பிரிந்திருக்கேன்
என்னாரூர் இறைவனையே 51-4
முத்தினை மாமணிதன்னை வயிரத்தை மூர்க்கனேன் எத்தனைநாள்
பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே 51-1
வளர்சடையெம் ஆரமுதை எவ்வணம் நான் பிரிந்திருக்கேன்
என்னாரூர் இறைவனையே 51-2

(2)

சித்தமாக நினைந்துள்ளம் ஏத்தித் தொழும் அத்தன் அம்பொற்
கழல் அடிகள் ஆரூரரைச் சித்தம் வைத்த புகழ்...ஊரன் 37-11

---

* நோய் பொதிந்த உடற்கிடமாய பிறவி.

41\. கண்ணிழந்ததும், நோயுற்றதும், கண்ணை மறைப்பித்தாய், கண் ஒளியைத் தா, ஊன்றுகோலாவது தா, உற்றநோயைத் தீர்த்தருள் என வேண்டுவது; கண்ணிழந்த நிலையில் முறையீடு—அந்த நிலையிலும் தலங்களைத் தேடிச்சென்றது

அத்தா என்னிடர் ஆர்க்கெடுத் துரைக்கேன் 54-3
அழுக்குமெய் கொடுன் திருவடி யடைந்தேன் அதுவுநான் படப்பால
தொன்றானால், பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்பனாகிலும் திருவடிப் பிழையேன், வழுக்கி வீழினும்
திருப் பெயரல்லால் மற்றுநான் அறியேன் மறுமாற்றம்,
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய் ஒற்றியூரெனும்
ஊருறைவானே 54-1
*ஈன்று கொண்டதோர் சுற்றமொன் றன்றால் யாவராகிலென்
அன்புடையார்கள், தோன்றநின் றருள் செய்தளித்திட்டாற்
சொல்லுவாரை யல்லாதன சொல்லாய், மூன்று கண்ணுடை
யாய் அடியேன் கண் கொள்வதே கணக்கு வழக்காகில்,
ஊன்றுகோல் எனக்காவதொன் றருளாய் ஒற்றியூரெனும்
ஊருறைவானே † 54-4
உடம்பில் அடுநோயால் கருத்தழிந்து உனக்கே பொறையானேன் 70-2
உனைநான் மறவேனேல் உற்றநோய் உறுபிணி தவிர்த்தருளாய்
ஒற்றியூரெனும் ஊருறைவானே 54-7
உறவிலேன் உனை அன்றி மற்றடியேன் ஒருபிழை பொறுத்தால்
இழிவுண்டோர் 70-6
என்செய்வான் அடியேன் எடுத்துரைக்கேன் 54-2
கட்டனேன் பிறந்தேன் உனக்காளாய்க் காதற் சங்கிலி காரண
மாகப், †பெட்டனாகிலும் திருவடிப் பிழையேன், பிழைப்ப
னாகிலும் திருவடிக்கடிமை ஒட்டினேன், ‡எனைநீ செய்வ
தெல்லாம் ஒற்றியூரெனும் ஊருறைவானே 54-2

---

* கருத்துரை: நாம் படைத்ததால் நமக்குச் சுற்றம் இவன் என்னும் கணக்கு ஒன்று மாத்திரம் அன்று; யாராயிருந்தாலும் அன்புள்ளவரா யிருந்தால் நம்மாட்டு அன்புள்ளவரே நமக்குக் கணக்கு என்றுநீ கொண்டு அவர் எதிரில் நீ தோன்றி அவருக்கு அருள் செய்கின்றாய்; அருள் பெற்ற அந்தப் பாக்கியத்தால் அவர் உன்னைப் புகழ நீ அவரைக் கடுஞ் சொல் ஒன்றும் சொல்லாமல் பொறுத்தருளுகின்றாய்; இது உன் தன்மை; உன் கருணை அப்படியிருக்க, மூன்று கண்ணை உடைய நீ என் கண்ணைப் பிடுங்கிக்கொண்டாயே; இதுதான் நீதிக் கணக்கு வழக்கு என்றால் எனக்குத் தக்கதொரு ஊன்றுகோலைத் தந்தருள்—என்றபடி.

† பெட்டன் - பொய்யன். ‡ எனை - என்னை - யாது.

கண்ணிலேன் உடம்பில் லடுநோயால் கருத்தழிந்து
உனக்கே பொறையானேன், அண்ணலே! எனை அஞ்சல்
என்றருளாய் ஆர் எனக்குற வமரர்கள் ஏறே 70-2

கூடினாய் மலைமங்கையை நினையாய் கங்கை ஆயிரமுகமுடையாளைச்
சூடினாய் என்று சொல்லிய புக்கால் தொழும்பனேனுக்கும்
சொல்லலுமாமே 54-8

திருமுல்லைவாயில் தேடியான் திரிதர்வேன் கண்ட பைம்பொனே 69-8

படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே 69

*பெற்றிருந்து பெருதொழிகின்ற பேதையேன் பிழைத்திட்டதை
அறியேன்...முற்றும் நீளனை முனிந்திட அடியேன் கடவதென் 54-7

பேதையேன் பிழைத்திட்டதை அறியேன் 54-7

†மகத்திற் புக்கதோர் சனிஎனக் கானாய் மைந்தனே மணியே
மணவாளா!, அகத்திற் பெண்டுகள் நானொன்று சொன்னால்
அழையேல் போ குருடா எனத் தரியேன், முகத்திற் கண்
இழந்தெங்ஙனம் வாழ்கேன் முக்கண் மூறையோ மறையோதீ!
உகைக்கும் தண்கடல் ஓதம்வந்துலவும் ஒற்றியூர் எனும்ஊர்
உறைவானே 54-9

மதியிலேன் உடம்பில் அடுநோயால் மயங்கினேன், மணியே!
மணவாளா!......திருவாவடு துறையுள், அதிபனே! எனை
அஞ்சலென் றருளாய் ஆர்எனக்குற வமரர்கள் ஏறே 70-4

மற்றுத் தேவரை நினைந்துனை மறவேன் நெஞ்சினாரொடு
வாழவுமாட்டேன் 54-7

‡மானை நோக்கியர் கண்வலைப்பட்டு வருந்தியானுற்ற வல்வினைக்
கஞ்சித், தேனையாடிய கொன்றையினாய் உன்சீலமும் குணமும்
சிந்தியாதே, நானும் இத்தனை வேண்டுவதடியேன்,
§உயிரொடு நரகத் தழுந்தாமை, ஊனம் உள்ளன தீர்த்தருள்
செய்யாய் ஒற்றியூர் எனும் ஊருறைவானே 54-6

முற்றும் நீளனை முனிந்திட அடியேன் கடவதென் 54-7

---

* உன் அருளைப் பெற்றிருந்த நான் இப்போது அந்த அருளைப் பெறவில்லையே; கண்ணை இழக்கும்படியான அத்துணைப் பெரும்பிழை செய்ததை நான் அறியேன்.

† மகத்துச்சனி: ஒப்புமைப் பகுதி, பக்கம் ௪௧ பாட்டு 54-9-ன் கீழ்க் குறிப்பைப் பார்க்க.

‡ மானை நோக்கியர்: கயிலையில் இருந்த கமலினி, அநிந்திதையார், அவர்தம் கண்வலைப்பட்டதனால் வினைசூழ, நானக வகுத்தார் இறைவர் இவரை. (தலைப்பு 146-3 பாடல் 3-2 பார்க்க)

§ உயிரொடு நரகத் தழுந்தல்: கண்ணிழந்து வாழ்தல் நரக வேதனையாம் என்றபடி.

*வழித்தலைப் படுவான் முயல்கின்றேன் †உன்னைப்போல என்னைப்
பாவிக்கமாட்டேன், சுழித்தலைப்பட்ட நீரதுபோலச் சுழல்கின்றேன்
சுழல்கின்றதென் உள்ளம், ‡கழித்தலைப்பட்ட நாயதுபோல
ஒருவன் கோல்பற்றிக் கறகற இழுக்கை, ஒழித்துநீ யருளாயின
செய்யாய் ஒற்றியூரெனும் ஊருறைவானே 54-5
வாடிநீயிருந் தென்செய்தி மனனே வருந்தி யானுற்ற வல்வினைக்
கஞ்சி, ஊடினால் இனி ஆவதொன் றுண்டே ஒற்றியூர்
எனும் ஊர் உறைவானே 54-8

42. (i) வடதிருமுல்லைவாயிலில் 'படுதுயர் களையாய்' என வேண்டினர்

திருமுல்லைவாயிலாய்! வாயினால் உன்னைப் பரவிடும் அடியேன்
படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே 69-1

(ii) கண்ணிழந்த காரணம்

ஒற்றிமா நகருடையாய் சங்கிலிக்கா என்கண் கொண்ட பண்ப 69-3
காதற் சங்கிலி காரணமாகப் பெட்டன் 54-2

43. வெண்பாக்கத்தில் முறையீடும், ஊன்றுகோல் பெற்றதும்

இடையறியேன் தலையறியேன் எம்பெருமான் சரணமென்பேன்
அடையுடையன் நம்மடியான் என்றவற்றைப் பாராதே
விடையுடையான் விடநாகன் வெண்ணீற்றன் புலியின்தோல்
உடையுடையான் எனையுடையான் உளோம்போகீர்
என்றானே 89-2
கண்மணியை மறைப்பித்தாய் இங்கிருந்தா யோஎன்ன
ஒண்ணுதலி பெருமானார் உளோம் போகீர் என்றானே 89-6
கார் நிலவு மணிமிடற்றீர் இங்கிருந்தீ ரேயென்ன,
ஊர் அரவம் அரைக்கசைத்தான் உளோம்போகீர் என்றானே 89-7
செய்வினையொன் றறியாதேன் திருவடியே சரணென்று
பொய்யடியேன் பிழைத்திடினும் பொறுத்திடநீ
வேண்டாவோ, பையரவா இங்கிருந்தா யோஎன்னப்

---

* திருவாரூருக்குப் போவதற்கு மேற்கொண்ட பயணத்தை நிறுத்த மாட்டேன்; அங்குப் போகவேண்டிய வழியையே தொடர்ந்து செல்ல முயல்கின்றேன்.

† உன்னை நான் தியானித்துப் பொருட்படுத்துவதுபோல என்னை நான் பொருட்படுத்துவதில்லை.

‡ கழித்தலைப்பட்ட, நாய் - ஒதுக்கப்பட்ட நாய்; கோலின் நுனியைக் கௌவிச் செல்லும் நாய்—எனலுமாம்.

பரிந்தென்னை, உய்ய அருள் செய்ய வல்லான் உளோம்
போகீர் என்றானே 89-3
சேயிழையோ டடனுகி, நம்பியிங்கே இருந்தீரே என்று நான்
கேட்டலுமே, உம்பர் தனித் துணை எனக்கு உளோம்
போகீர் என்றானே 89-4
திருஒற்றி யூரிடங்கொண் டிருந்தபிரான் உளோம் போகீர்
என்றானே 89-8
துன்னியிரு பாலடியார் தொழுதேத்த அடியேனும், உன்னதமாய்க்
கேட்டலுமே உளோம் போகீர் என்றானே 89-5
பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலமென்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயிலுளா யேஎன்ன
உழையுடையான் உள்ளிருந் துளோம் போகீர் என்றானே 89-1
பொன்னவிலுங் கொன்றையினாய் போய் மகிழ்க்கீழ் இருஎன்று
சொன்ன எனைக் காணாமே சூளறவு மகிழ்க்கீழே
என்னவல்ல பெருமானே இங்கிருந்தா யோஎன்ன
ஒன்னலரைக் கண்டாற்போல் உளோம் போகீர் என்றானே 89-9
மான் றிகழுஞ் சங்கிலியைத் தந்துவரு பயன்களெல்லாம்
தோன்ற அருள் செய்தளித்தாய் என்றுரைக்க உலகமெலாம்
ஈன்றவனே வெண்கோயில் இங்கிருந்தா யோஎன்ன
ஊன்றுவதோர் கோலருளி உளோம் போகீர் என்றானே 89-10

44. காஞ்சியில் ஒருகண் பெற்றது - அல்லல் ஒருவாறு தீரப்பெற்றது - ஆண்டவன் அருளை வியந்தது

அல்லல் தீர்த்தருள் செய்ய வல்லானை...காணக் கண்
அடியேன் பெற்றவாறே 61-5
உற்றவர்க் குதவும் பெருமானை...காணக் கண் அடியேன்
பெற்றவாறே 61-2
கம்பனெம்மானைக் காணக்கண் அடியேன் பெற்றவாறே 61
*கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக் காணக் கண் அடியேன்
பெற்றவாறே 61-10
காணக் கண் அடியென் பெற்றதென்று...கம்பன் எம்மானை
ஆரூரன் நற்றமிழ் இவை ஈரைந்து 61-11
நண்ணினார்க் கென்றும் நல்லவன் தன்னை...காணக்கண்
அடியேன் பெற்றவாறே 61-7
*நல்ல கம்பனை எங்கள் பிரானைக் காணக் கண் அடியேன்
பெற்றவாறே 61-5

* தலைப்பு 161-18 'கச்சி' என்பதன் கீழ்க்குறிப்பைப் பார்க்க.

பந்தித்த வினைப்பற் றறுப்பானை காணக்கண் அடியேன்
பெற்றவாறே 61-8
பற்றினார்க் கென்றும் பற்றவன் தன்னைக்...காணக் கண் அடியேன்
பெற்றவாறே 61-2
பெரியஎம் பெருமான் என்றெப்போதும் கற்றவர் பரவப்
படுவானைக் காணக் கண் அடியேன் பெற்றதென்று 61-11
*பெரிய கம்பனை எங்கள் பிரானைக் காணக் கண் அடியேன்
பெற்றவாறே 61-3

45. இடது கண்பெற்ற ஆரூரர், திருஆரூரை நினைந்து பாடியது

ஆதியை மாதினொடும் ஆரூர்புக்கு என்றுகொல் எய்துவதே 83-9
ஆரூரை நன்னெடுங் காதன்மையால் நாவலர்கோன் ஊரன்
பன்னெடுஞ் சொன்மலர் கொண்டிட்டன பத்தும் 83-10
(தென்திரு)வாரூர் புக்கு—இடுபலி கொள்ளியை நான் என்றுகொல்
எய்துவதே 83-5
,, —எண்ணிய கண்குளிர என்றுகொல் எய்துவதே 83-9
,, —எந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே 83-1
,, எல்லை மிதித்தடியேன் என்றுகொல் எய்துவதே 83-4
,, என்பொனை என்மணியை என்றுகொல் எய்துவதே 83-7
,, என்றன் மனங்குளிர என்றுகொல் எய்துவதே 83-2
,, என்னுயிர்க் கின்னமுதை என்றுகொல் எய்துவதே 83-3
,, —ஏழுலகாளியை நான் என்றுகொல் எய்துவதே 83-6
,, ஏறணி எம்மிறையை என்றுகொல் எய்துவதே 83-8
நின்ற வினைக்கொடுமை நீங்கத்...தென் திருவாரூர்புக்கு...என்று
கொல் எய்துவதே 83-2
முந்தி எழும் பழைய வல்வினை மூடாமுன், சிந்தை பராமரியாத்
தென் திருவாரூர்புக்கு...என்றுகொல் எய்துவதே 83-1
முன்னை முதற்பிறவி மூதறியாமையினால், பின்னை நினைந்தனவும்
பேசுறவும் ஒழியத், தென்திருவாரூர்புக்கு...என்றுகொல்
எய்துவதே 83-3

46. நெல்வாயில் (அரத்துறை) தரிசித்தபோது ஒரு கண் பார்வைதான் இருந்தது

எற்றே ஒரு கண்ணிலன்...நெல்வாயில் அரத்துறை நின்மலனே 3-3

* பெரிய கம்பன்-கள்ளக் கம்பன்-நல்ல கம்பன்—விவரம் 'தலங்கள்' என்னும் தலைப்பில் 18-'கச்சி' பார்க்க.

47. திருவாவடுதுறையைத் தரிசித்து (ஒரு) கண் இலாது வேதனைப்படுதலையும், நோயால் உடம்பு வேதனைப் படுதலையும் கூறித் துதித்தார்

உடம்பில் அடுநோயால் மயங்கினேன் 70-4
உறவிலேன் உனையன்றி மற்றடியேன் ஒருபிழை பொறுத்தால்
இழிவுண்டே 70-6
எனை அஞ்சலென் றருளாய் ஆரெனக்குறவு அமரர்கள் ஏறே 70
கண்ணிலேன் உடம்பில் அடுநோயால் கருத்தழிந்து உனக்கே
பொறையானேன் 70-2

48. திருத்துருத்தியில் வினை—பிணி—நோய் நீங்கப்பெற்றது

அம்மைநோய் இம்மையே ஆசறுத்தானை 74-8
அருவினை யுள்ளன ஆசறுத்தானை 74-4
இழித்தநோய் இம்மையே ஒழிக்க வல்லானை 74-6
என்னைநான் மறக்குமா றெம்பெருமானை என் உடம்பு அடும்பிணி
இடர்கெடுத்தானை 74-1
உலகறி பழவினையற ஒழித்தானை 74-7
உற்றநோய் இற்றையேயுற வொழித்தானை 74-5
தொடர்ந்தடும் கடும்பிணித் தொடர்வறுத்தானை 74-3
பழவினை யுள்ளன பற்றறுத்தானை 74-2
மேலைநோய் இம்மையே வீடுவித்தானை 74-9

49 ஆரூர்ப் பரவையுண் மண்டளியில் மற்றைக் கண்ணையும் தரும்படி வேண்டுதல்

கண்டுகொண்டார் ஐவர் காக்கினும், நாவாயால் உன்னையே நல்லன
சொல்லுவேற்(கு), ஆவா*என் பரவையுண் மண்டளி அம்மானே 96-1
கண்தனைக் கொண்டிட்டுக் காட்டாயே—பரவையுண் மண்டளி
அம்மானே 96-7
நாமாறு துன்னையே நல்லன சொல்லுவார், போமாறென்
புண்ணியா ..இடுகாடு உகந்து ஆடுவாய்க்கு ஆமாறென்
பரவையுண் மண்டளி அம்மானே 96-3
நெஞ்சார நின்னையே யுள்கி நினைவாரை, அஞ்சேலென் பரவையுண்
மண்டளி அம்மானே 96-5
நோக்குவே னுன்னையே நல்லன நோக்காமைக்,
காக்கின்றார் கண்டு கொண்டார் ஐவர் காக்கினும்
வாக்கென்னும் மாலைகொண் டுன்னையென் மனத்
தார்க்கின்றேன் பரவையுண் மண்டளி யம்மானே 96-4

---

* என் - என்பாயாக. ஆவா என்று அபயம் கூறுக.

50. ஆரூர்ப் பெருமானை இரு கண்ணாலும் காண்பதற்கு இல்லையே என வருந்தி ஏசறவால் தமது காதலைக் காட்டும் திருப்பதிகம் கைக்கிளைத் தூது வகையிற் பாடியது

அன்னப் பெடைகாள் ! கிள்ளைகாள் ! குயில்காள் ! குருகுகாள் !
கொண்டல்காள் ! சக்ரவாளப் பேடைகாள் ! நாரைகாள் !
பூவைகாள் ! வண்டுகாள் !
ஆரூரர்க்குக் கலைகள் சோர்கின்றதும், கனவளை கழன்றதும்,
முலைகள் பீர்கொண்டதும் மொழிய வல்லீர்களே 37-5
ஆரூரர்க்குப் பற்றுமற் றின்மையும் பாடுமற்றின்மையும், உற்றுமற்
றின்மையும் உணர்த்த வல்லீர்களே 37-8
ஆரூரர்க்குப் பானலங் கொண்டவெம் பணைமுலை பயந்துபொன்,
ஊனலங் கொண்டதும் உணர்த்தவல்லீர்களே 37-7
ஆரூரர்க்கு வக்ரம் இல்லாமையும் வளைகள் நில்லாமையும், உக்ரம்
இல்லாமையும் உணர்த்தவல்லீர்களே 37-4
ஆரூரர்க்கு வாழுமாறும் வளைகழலுமாறும் எனக் கூழுமாறும்
இவை உணர்த்தவல்லீர்களே 37-3
ஆரூரரைக் கண்டவாறும் காமத்தீக் கனன்றெரிந்து மெய், உண்ட
வாறும் இவை உணர்த்தவல்லீர்களே 37-6
ஆரூரரைப் பாவி நாடும்மதும், பாடிநாடும்மதும், உருகி நாடும்மதும்
உணர்த்தவல்லீர்களே 37-9
ஆரூரரைப் பருகுமா றும்பணிந் தேத்துமா றுந்நினைந், துருகுமா
றும்மிவை உணர்த்தவல்லீர்களே 37-1
ஆரூரரைப் பாடுமாறும் பணிந்தேத்துமா றுங்கூடி, ஊடுமாறும்
இவை உணர்த்தவல்லீர்களே 37-10
ஆரூரரை மறக்க கில்லாமையும் வளைகள் நில்லாமையும், உறக்க
மில்லாமையும் உணர்த்தவல்லீர்களே 37-2

51. மற்றைக் கண் பார்வையையும் பெறவேண்டி, ஆரூர் மூலட்டானத்தில் பாடினதும் (கண் பெற்றதும்)

இருந்தும் நின்றும் கிடந்தும் உம்மை இகழாதேத் தொழுவோம், வருந்தி
வந்தும் உமக்கொன் றுரைத்தால் வாழ்ந்து போதீரே 95-10
இழியாக் குலத்திற் பிறந்தோம் உம்மை இகழாதேத் தொழுவோம்,
பழிதானாவ தறியீர் அடிகேள் பாடும் பத்தரோம்,
வழிதான் காணாது அலமந்திருந்தால் வாழ்ந்து போதீரே 95-8
என்றும் முட்டாப் பாடும் அடியார் தங்கண் காணாது, குன்றின்
முட்டிக் குழியில் விழுந்தால் வாழ்ந்து போதீரே 95-3
சந்தம் பலவும் பாடும் அடியார் தங்கண் காணாது,
வந்தெம்பெருமான் முறையோ என்றால் வாழ்ந்துபோதீரே 95-5

தனத்தா லின்றித் தாந்தாம் மெலிந்து தங்கண் காணாது, மனத்தால்
வாடி அடியார் இருந்தால் வாழ்ந்து போதீரே 95-6
பாரூர் அறிய என்கண் கொண்டீர் நீரே பழிபட்டீர், வாரூர்
முலையாள் பாகங்கொண்டீர் வாழ்ந்து போதீரே 95-11
பேயோடேனும் பிரிவொன் றின்னா தென்பர் பிறரெல்லாம்
காய்தான் வேண்டிற் கனிதானன்றோ கருதிக்கொண்டக்கால்
நாய்தான் போல நடுவே திரிந்தும் உமக்காட் பட்டோர்க்கு
வாய்தான் திறவீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே 95-9
மாயங்காட்டிப் பிறவிகாட்டி மறவா மனங்காட்டிக்,
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால் வாழ்ந்து போதீரே 95-7
மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளா யிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே
விற்றுக்கொள்வீர் ஒற்றியல்லேன் விரும்பி யாட்பட்டேன்
குற்றம் ஒன்றும் செய்ததில்லை கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிபட்டீர்
மற்றைக்கண் தான் தாராதொழிந்தால் வாழ்ந்து போதீரே 95-2

52. தமக்காக இறைவன் தூது சென்றது

அடியேற்கு எளிவந்த அத்தனை 68-8
அத்தனை என்றனையாள் தோழனை நாயகனை 84-9

53. தமக்குத் தோழர், நேசர், எளிவந்தவர், பிழைபொறுப்பவர், சிவபிரான் என்பது

அடியேற் கெளியானை 59-7
எம்மானை எளிவந்த பிரானை 59-1
என்றனை யாள் தோழனை 84-9
*என்னுடைய தோழனுமாய் யான் செய்யும் துரிசுகளுக் குடனாகி 51-10
எனக் கெளிவந்த பாவநாசனை 62-1
ஏழையேற் கெளிவந்த பிரானை 68-5
தன்னைத் தோழமை அருளித் தொண்டனேன் செய்த
துரிசுகள் பொறுக்கும் நாதனை 68-8
நேசத்தினால் என்னை ஆண்டு கொண்டார் 19-2
யான் செய்யும் துரிசுகளுக் குடனாகி 51-10

---

* 'என்னுடைய தோழனுமாய்' என்ற திருப்பாட்டின், நன்னெறியைக் கண்டுரிமை நாம் செய்வ தெந்நாளோ'—என இப்பகுதி தாயுமனாரால் 'அறிஞருரை' என்னும் தலைப்பில் எடுத்தாளப்பட்டுளது.

54. பரவையார் சங்கிலியார் இருவருக்கும் தமக்கும் பற்றுய பெருமான் சிவபிரான் என்றது

பண்மயத்த மொழிப் பரவை சங்கிலிக்கும் எனக்கும்
பற்றாய பெருமானே மற்றாரை உடையேன் 46-11

55. ஏயர்கோனுக்கு உற்றநோயை இறைவர் தீர்த்ததும், அவர் பொருட்டு பெருமழையைத் தந்ததும், தவிர்த்ததும்

ஏத நன்னிலம் ஏயர்கோன் உற்ற இரும் பிணி தவிர்த்து 55-3
**வையக முற்றும் மாமழை மறந்து வயலில் நீரில் மாநிலம்*
தருகோம், உய்யக் கொள்கமற் றெங்களை என்னப்...
பெய்யு மாமழைப் பெருவெள்ளம் தவிர்த்துப், பெயர்த்தும்
பன்னிரு வேலி கொண் டருளும் . திருப்புன் கூருளானே 55-2

56. மூவேந்தர் முன்னிலையில் திருப்பரங்குன்றத்திற் பாடினது

அடிகேள் உமக்காட்செய அஞ்சுதுமென் றமரர் பெருமானை
ஆரூரன் அஞ்சி, முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே
மொழிந்தாறும் ஓர் நான்கும் ஓர் ஒன்றினையும், படியா இவை
கற்று வல்ல அடியார் பரங்குன்றம் மேய பரமன் அடிக்கே
குடியாகி...விண்முழுதாள்பவரே 2-11

57. கானப்பேர் (காளையார் கோயில்) காளையைத் தரிசிக்க விரும்பியது

என்னை மதித் துய்யும் வணம் அருளும் கண்ணுதலைக் காண்பதும்
என்று கொலோ கானப்பேருறை காளையையே 84-6
எய்துவ தென்று கொலோ கானப்பேருறை காளையையே 84
கண் குளிரக் கண்டுதொழப் பெறுவ தென்று கொலோ
அடியேன் கானப்பேருறை காளையையே 84-1
காண்பதும் என்று கொலோ கானப்பேருறை காளையையே 84-6
காணுவ தென்று கொலோ கானப்பேருறை காளையையே 84-5
காதலுறத் தொழுவ தென்று கொலோ அடியேன் கானப்
பேருறை காளையையே 84-2
கைதொழல் என்று கொலோ கானப்பேருறை காளையையே 84-4

---

* பொன்னம் பலத்துறை புண்ணியன் என்பர், புயல் மறந்த கன்னன்மை தீரப் புனிற்றுக் கலிக்காமற் கன்றுபுன்கூர், மன்னு மழை பொழிந் தீரறு வேலிகொண் டாங்கவற்கே, பின்னும் மழை தவிர்த் தீராறு வேலிகொள் பிஞ்ஞகனே—கோயிற் திருப்பண்ணியர் - 54.

தொண்டர் அடித் தொழலும், சோதி இளம் பிறையும், சூதனமென்
முலையாள் பாகமும்.. புண்டரிகப் பரிசாம் மேனியும்,
கொண்டல் எனத் திகழும் கண்டமும், எண்டோளும்
கோல நறுஞ்சடைமேல் வண்ணமும் கண்குளிரக் கண்டு
தொழப் பெறுவதென்று கோலோ அடியேன் கார் வயல் சூழ்
கானப் பேருறை காளையே 84-1

58. திருவையாற்றில் காவிரி வெள்ளத்தைக் கடந்து நீந்த முடியாத நிலையிற் பாடினது

வெள்ளம் பரந்து நுரை சிதறி அதிர்க்கும் திரைக் காவிரிக்
கோட்டத்து, ஐயாறுடைய அடிகளோ! கதிர்க்கொள்
பசியை ஒத்தே நான் கண்டேன் உம்மைக் காணாதேன்
*†எதிர்த்து நீந்த மாட்டேனான்...அம்மானே 77-9

59. ஆரூரர் சேரமானுடன் கொடுங்கோளூரில் இருந்தபோது திருவாரூர்ப் பெருமானுடைய நினைவு வர அப்போது பாடினது

ஆரூரானை மறக்கலு மாமே 59
‡ஊரொன் றுலகங்களுக் கெல்லாம் உரைக்கலாம் பொருளாயுடன்
கூடிக், காரூருங் கமழ் கொன்றை நன்மாலை முடியன்
காரிகைக் காரணமாக ஆரூரைம் மறத்தற் கரியானை
அம்மான் தன் திருப்பேர் கொண்ட தொண்டன் ஆரூரன்
அடிநாயுரை வல்லார் அமரலோகத் திருப்பவர் தாமே 59-11

---

* வெம்பசி உடையான் ஒருவனைப்போல அதிதீவிர ஆசையுடன் உன் (தலத்தைக்) கண்டேன்; ஆனால் உன் சந்நிதானத்தை அணுகி உன்னைக் காணமுடியாதிருக்கின்றேன்.

† காவிரியின் பெருக்கு எதிர்த்து நீந்தமுடியாத பெருக்காயுள்ளது, பெருமானே.

‡ காரிகை - பரவை. "பரவையைத்தந் தாண்டானை" என்றார் பிறி தோர்டத்து 51-10. இறைவன் [காரிகை] பரவையைத் தந்து தன்னை யாண்ட காரணத்தால் ஆரூரை மறத்தற்கில்லை என்றபடி.

தாம் வீற்றிருப்பதால் உலகங்களில் உள்ள ஊர்களுக்குள் ஒப்பற்ற ஊர் திருவாரூர் என்று சொல்லும்படியான (பொருளாய்) பொருளினராய் அத்தலத்தில் கூடினவராய், கொன்றை மாலை முடியினராய் உள்ள சிவபிரான் காரணமாகவும், (அவர் எனக்குத் தந்த) காரிகையார் பரவையார் காரணமாகவும், ஆரூரை மறத்தற் கரியனாகிய நான், அம்மான் (பெருமான்) பெயரை - ஆரூரன் என்னும் பெயரைக் கொண்டுள்ள தொண்டனாகிய நான், அடிநாயாகிய நான் - உரைத்த இப்பதிகத்தை ஓதவல்லார் அமரலோகத்திருப்பார் என்றபடி.

60. திருமுருகன் பூண்டியில் வேடுபறி

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர் விரவலாமை சொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண் டாறலைக்கும்
இடம் . முருகன் பூண்டி 49-1
பசுக்களே கொன்று தின்று பாவிகள் பாவமொன் றறியார்
உசிர்க் கொலைபல நேர்ந்து நாடொறும் கூறை
கொள்ளும் இடம்.. முருகன் பூண்டி 49-3
பீறற் கூறை யுடுத்தோர் பத்திரம் கட்டி வெட்டனராய்ச், சூறைப்
பங்கியராகி நாடொறுங் கூறைகொள்ளுமிடம் முருகன்பூண்டி 49-4
முசுக்கள் போற் பலவேடர் வாழ் முருகன்பூண்டி 49-3
முடவரல்லீர் இடரிலீர்...எத்துக் கிங்கிருந்தீர் எம்பிரானிரே 49-8
முடுகு நாறிய வடுகர் வாழ் முருகன்பூண்டி மாநகர்வாய்...மங்கை
தன்னொடும் எத்துக் கிங்கிருந்தீர் எம்பிரானிரே 49-1
முருகன் பூண்டி மாநகர்வாய் இசுக்கழியப் பயிக்கங் கொண்டுநீர்
எத்துக் கிங்கிருந்தீர் எம்பிரானிரே 49-3
முருகன்பூண்டி மாநகர்வாய் இட்டபிச்சை கொண்டுண்ப
தாகில் நீர் எத்துக் கிங்கிருந்தீர் எம்பிரானிரே 49-6
முருகன்பூண்டி மாநகர்வாய் இடவ மேறியும் போவதாகில்நீர்
ஏத்துக் கிங்கிருந்தீர் எம்பிரானிரே 49-8
முருகன்பூண்டி மாநகர்வாய் இயங்கவும் மிடுக்குடைய
ராய்விடில் எத்துக் கிங்கிருந்தீர் எம்பிரானிரே 49-5
முருகன்பூண்டி மாநகர்வாய் நீர் எத்துக் கிங்கிருந்தீர் எம்பிரானிரே 49
முருகன்பூண்டி மாநகர்வாய் எல்லைக் காப்ப தொன் றில்லை
யாகில் நீர் எத்துக் கிங்கிருந்தீ ரெம்பிரானிரே 49-2
முருகன்பூண்டி மாநகர்வாய் ஏதுகாரணம், ஏதுகாவல்கொண்
டெத்துக் கிங்கிருந்தீர் எம்பிரானிரே 49-7
முருகன்பூண்டி மாநகர்வாய் ஏந்து பூண்முலை மங்கை
தன்னொடும் எத்துக் கிங்கிருந்தீர் எம்பிரானிரே 49-9
முருகன்பூண்டி மாநகர்வாய் ஏறுகால் இற்ற தில்லையாய் விடில்
எத்துக் கிங்கிருந்தீர் எம்பிரானிரே 49-4
மோதி வேடுவர் கூறை கொள்ளும் முருகன்பூண்டி 49-7
மோறை வேடுவர் கூடிவாழ் முருகன்பூண்டி 49-4
வில்லைக் காட்டி வெருட்டி வேடுவர் விரவலாமை சொல்லிச்,
கல்லினால் எறிந்திட்டும் மோதியுங் கூறைகொள்ளுமிடம்
முருகன்பூண்டி 49-2

61. வேடனாக வந்து இறைவன் உதவினது

*செங்கண் வேடனாய் என்னொடும் வந்து மருவினான் தனை 57-6

---

* கோயமுத்தூர் ஜில்லா துடியலூர் என்னும் தலத்தின் அருகே சுந்தரர் காட்டுவழியே செல்லும்போது, இறைவர் வேடனாக எழுந்

62 முதலை உண்ட பிள்ளையை மீள்விக்கப் பாடியது

*காணாத கண்கள் காட்டவல்ல கறைக் கண்டனே 92-3
கூத்தா உனக்குநான் ஆட்பட்ட †குற்றமும் குற்றமே 92-6
புக்கொளியூர் அவிநாசியே! கரைக்கால் முதலையைப் பிள்ளை
தரச் சொல்லு காலனையே 92-4
புக்கொளியூரிற் குளத்திடை இழியாக் குளித்த மாணி
‡எனைக்கிறி செய்ததே 92-2
புக்கொளியூரிற் குளத்திடை உள்ளாடப் புக்க மாணி
எனைக்கிறி செய்ததே 92-9
வழிபோவார் தம்மோடும் வந்துடன் கூடிய §மாமணி நீ
ஒழிவ தழகோ சொல்லாய் $அருளோங்கு சடையானே! 92-2

63. திருஅஞ்சைக்களத்தீசர் முன்னிலையில் மனைவாழ்க்கையை வெறுத்தேன் என்றது

வெறுத்தேன் மனைவாழ்க்கையை விட்டொழிந்தேன்...
அஞ்சைக்களத்தப்பனே 4-8

தருளிச் சுந்தரருக்கு வழிகாட்டினர் என்பது ஒரு வரலாறு (பெரியபுரா. விரிவுரை ஏயர்கோன் 113 பதிகக் குறிப்பு பக்கம் 123.)

(1) "வேட்டுவ வேடம் எடுத்து வழித்துணை மேவி" - கொங்கு மண்டல சதகம்.

(2) சொல்லருங் கிராத வேடம் துணைவியும் தானும் கொண்டு,
மெல்லவே நடந்து வந்து மேதினி புகழ அன்று
ஒல்லுநர் தம்மை நோக்கி உயங்குதல் ஒழித்தி என்று
வல்லுரர் தன்னில் நல்ல வழிதனைக் காட்டி யாங்கே
—துடிசைப் புராணம்.

* உன் திருவருளின் பெருமையைக் காணாதாரும் (இன்று பிள்ளை உயிர்பெற்றெழும் நிகழ்ச்சியால்) காணும்படி அருள்செய்ய வல்லவனே!

† ஆட்பட்டது குற்றம் ஆகாது, ஆதலால் என் வேண்டுகோளும் குற்றம் ஆகாது என்றபடி.

‡ எனை - என்னை! என்ன காரணம்.

§ மாமணி - முதலை உண்ட பாலன். 'மாணி நீ' என்றும் பாடம்.

$ 'அருளோங்கு சடையான்' என்பது அந்தச் சிறுவன் பெயர் என்றும், இது அவனை விளித்துக் கூறியதென்றும் உரைப்பர் (கர்ண பரம்பரை) —பெரியபுராண விரிவுரை, வெள்ளானை, பக்கம் சுo௬.

"'அருட்சடை' என்பது அப்பிள்ளையின் பெயர் போலும்; 'அருட் சடை!' போய்விட்டாயே என்று அவனது பெற்றோர் அழுதது ஆரூரரின் உள்ளத்தைப் பெரிதும் இளக்கியது போலும்.

64. வெள்ளை யானையைத் தேவர்களுடன் இறைவன் அனுப்பக், கயிலைக்குச் சென்றது

அந்தரமால் விசும்பில் அழகானை அருள்புரிந்த துந்தரமோ
நெஞ்சமே நொடித்தான்மலை உத்தமனே 100-3
அரவொலி ஆகமங்கள் அறிவார் அறி தோத்திரங்கள், விரவிய வேத
ஒலி விண்ணெலாம் வந்தெதிர்ந்திசைப்ப, வரமலி வாணன்
வந்து வழிதந்தெனக் கேறுவதோர், சிரமலி யானை தந்தான்
நொடித்தான்மலை உத்தமனே 100-3
இந்திரன் மால்பிரமன் எழிலார் மிகுதேவரெல்லாம், வந்தெதிர்
கொள்ள என்னை மத்தயானை அருள்புரிந்து, மந்திர மாமுனிவர்
இவனாரென எம்பெருமான், நந்தமர் ஊரன் என்றான்
நொடித்தான்மலை உத்தமனே 100-9
ஊழிதோ றூழிமுற்றும் உயர்பொன் நொடித்தான் மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவைநாவல ஆரன்சொன்ன
ஏழிசை யின்தமிழால் இசைந்தேத்திய பத்தினையும்
ஆழிகடலரையா அஞ்சையப்பர்க் கறிவிப்பதே 100-10
ஊனை உயிர்வெருட்டி ஒள்ளியானை நினைந்திருந்தேன் 100-2
நாயினேனைப் பொருட்படுத்து வானனைவந் தெதிர்கொள்ள
மத்தயானை அருள்புரிந்து, *ஊனுயிர் வேறுசெய்தான்
நொடித்தான்மலை உத்தமனே 100-1

---

* "ஊன் உயிர் வேறு செய்தலாவது அவை இவ்வுலகிற் சரித்த நிலையினின்றும் வேறு தன்மையனவாகச் செய்தல். ஊன் வேறு செய்தல் - பசுகரணங்கள் பதிகரணங்களாகச் செய்தல்; உயிர்வேறு செய்தல் - மாயா கருவிகளானறிந்து ஏகதேசப்படாமல் அருளொளியி னடங்கி வியாபகமாக அறியச் செய்தல்". ஆரூரர் கனாயா உடலோடு கயிலைக்குச் சென்றார் என்பதை 'யானையின்மேல் என்னுடல் காட்டுவித்தான்'—100-5. 'கனாயா உடலோடு சேரமான ஆரூரன்... வெள்ளானைமேல் கொள்ள"— திருவிசைப்பா., 13-5. 'ஞான ஆரூரரைச் சேரரை யல்லது நாமறியோம், மானவ யாக்கை யொடும்புக்கவரை வளரொளிப் பூண், வானவ ராலும் மருவற் கரிய வடகயிலைக், கோனவன் கோயிற் பெருந்தவத்தோர் தங்கள் கூட்டத்திலே (திருத்தொண். திருவந்தாதி-86) என வருவதால் அறிக. "நீறுபட்ட மேனியார் நிகரில் பாதம் ஏத்துவார் வேறுபட்ட சிந்தையார் விண்ணில் எண்ண வல்லரே" —சம்பந்தர்-ஆனைக்கா. 3-53-2.—பெரியபுராண விரிவுரை-வெள்ளானை. பக்கம் 631.

" ஊன் உயிர் வேறுசெய்தான் "

—ஒப்புமைப் பகுதி பக்கம் ௬௬ பார்க்க.

நிலைகெட விண்ணதிர நிலமெங்கும் அதிர்ந்தசைய, மலையிடை
யானை ஏறி வழியே வருவேன் எதிரே, அலைகட லாலரையன்
அலர்கொண்டு முன்வந்திறைஞ்ச, உலையணையா தவண்ணம்
நொடித்தான்மலை உத்தமனே 100-7
மண்ணுலகிற் பிறந்து நும்மை வாழ்த்தும் வழியடியார், பொன்
னுலகம் பெறுதல்தொண்டனேன் இன்று கண்டொழிந்தேன் 100-5
வஞ்சனை என்மனமே வைகி வான நாடர்முன்னே, துஞ்சுதல்
மாற்றுவித்துத் தொண்டனேன் பரமல்லதொரு, வெஞ்சின
ஆனைதந்தான் நொடித்தான்மலை உத்தமனே 100-6
வாழ்வை யுகந்த நெஞ்சே மடவார்தங்கள் வல்வினைப்பட், டாழ
முகந்தஎன்னை யதுமாற்றி அமரரெல்லாம், சூழ அருள்புரிந்து
தொண்டனேன் பரமல்லதொரு, வேழம் அருள்புரிந்தான்
நொடித்தான்மலை உத்தமனே 100-4
வானைமதித்தமரர் வலஞ்செய்தெனை யேறவைக்க, ஆனை அருள்
புரிந்தான் நொடித்தான்மலை உத்தமனே 100-2
*விண்ணுலகத் தவர்கள் விரும்ப வெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான்மலை உத்தமனே 100-5

65. கயிலைக்கு அழைத்துச் சென்ற யானையின் வர்ணனை

அந்தர மால்விசும்பின் அழகானை 100-3
அமரர் வலஞ்செய்தெனை ஏறவைக்க ஆனை 100-2
அழகானை 100-3
எனக்கு ஏறுவதோர் சிரமலி யானை 100-8
சிரமலி யானை 100-8
தொண்டனேன் பரமல்லதொரு (வேழம் - ஆனை) 100-4, 6
மத்தயானை 100-1, 9
வெஞ்சின ஆனை 100-6
வெள்ளை யானை 100-5

66. என் யானையை அனுப்பினர்

†ஆனை யுரித்தபகை அடியேனொடு மீளக்கொலோ...எனை ஏற
வைக்க ஆனை அருள்புரிந்தான் 100-2

---

* 'என்னுடல் காட்டுவித்தான்' என்பதால் 'களையா உடலோடு' சயிலைக்குச் சென்றார் ஆரூரர் என்பது தெளிவு. 100-1 பக்கம் சoகூ கீழ்க் குறிப்பைப் பார்க்க.

† இது ஒரு நகைச்சுவைக் காரணம் போலும். தலைப்பு 146-34(2) பார்க்க.

சுந்தரரைப் பற்றிய பிற விவரங்கள்

1. தம்முடைய உடலிடம் கொண்டார் இறைவர் என்றது

சிரக்கண் வாய்செவி மூக்குயர் காயமாகித் தீவினை தீர்த்த
எம்மானை 62-9
நானேல் உன்னடியே நினைந்தேன், நினைதலுமே ஊனேர்
இவ்வுடலம் புகுந்தாய் என் ஒண்சுடரே 21-6

2. இறைவரைத் தாம் எங்கே நினைத்தாலும் அங்கே அவர் வருவார், உதவுவார் என்றது

எங்கே போவேனுயினும் அங்கே வந்தென் மனத்தீராய் 77-2
எங்கேனும் இருந்துன் அடியேன் உனை நினைந்தால், அங்கே
வந்தென்னொடும் உடனாகி நின்றருளி 23-2
எங்கேனும் போகினும் எம்பெருமானை நினைந்தக்கால், கொங்கே
புகினும் கூறைகொண் டாறலைப் பாரிலை 92-3

3. தந்தை, தாய், சுற்றம் எல்லாம் நீயே; உற்றார், சுற்றத்தை விட்டுவிட்டேன் என்றது

அன்னையே என்னேன், அத்தனே என்னேன், அடிகளே
அமையுமென் றிருந்தேன் 14-2
உற்றார் சுற்றமெனும் அதுவிட்டு நுன் அடைந்தேன், உற்றால்
என்குறைவன் இடரைத் துறந்தொழிந்தேன் 21-4
எம்மான் எந்தை மூத்தப்பன் 52-9
எம்மான் எம்மனை என்றவரிட் டிறந்தொழிந்தார் 21-5
எம்மான் எம்மனை என்றனக் கெட்டனைச் சார்வாகார் 24-3
சுற்றிய சுற்றமும் துணையென் றுகருதேன் 58-2
பற்றாய பெருமானே! மற்றாரை உடையேன் 46-11

4. ஞானசம்பந்தர்—நாவுக்கரசர் பாடின பாடல்களைப் பயின்றவர்—ஓதிவந்தவர் என்பது

*நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக் கரசரும் பாடிய நற்றமிழ்
மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை 67-5

* "ஆதியன் ஆதிரையன்" எனத் துவக்கும் சுந்தரரது திருநனி பள்ளித் தேவாரப் பதிகம் (97) பண் பஞ்சமம். சம்பந்தப் பெருமானது 'ஆதியன் ஆதிரையல்' எனத் துவக்கும் திருவெண்டுறைப் பதிகமும் (3-61-) பண் பஞ்சமம். இதனுல் சுந்தரர் சம்பந்தப் பெருமானது

5. சுந்தரருடைய தமிழ்—அவர் தம்மைப் 'புலவன்' என்றது

அருந்தமிழ் ஊரன் 72-11
ஆரூரன் பேர் முடிவைத்த மன்னு புலவன் 41-10

6. இறைவன் திருப்புகழை விருப்போடு நல்ல தமிழாற் பாடினர் என்பது

திருப்புகழ் விருப்பால் பன்னலந் தமிழாற் பாடுவேற்கு 69-4
திருப்புகழ் விருப்பால் பாடிய அடியேன் 69-2

7. எழிசையின் தமிழால் பாடினரென்பது

எழிசை யின் தமிழால் இசைந்தேத்திய பத்தினையும் 100-10

8. அடிக்கடி தம்மைச் சிவபிரான் திருத்தியது

திருத்தித் திருத்தி வந்தென் சிந்தை இடங்கொள் கயிலாயர் 47-8

9. நோய்—பிணி—உலக இன்பத்தினர் செய்யும் செயல்கள்—வினை—இவை வாராமைக் காத்தருளுதல்

உம் கருத்தறியோம் கண்ணும் மூன்றுடையீர் கண்ணேயா யிருந்தால் அங்கத்துறுநோய் களைந்தாள கில்லீர், அடிகேள் உமக்காட்செய அஞ்சுதுமே 2-7
பிணி வண்ணத்த வல்வினை தீர்த்தருளீர் 2 8
பொள்ளல் இவ்வுடலைப் பொருள் என்று பொருளும் சுற்றமும் போகமும் ஆகி, மெள்ள நின்றவர் செய்வன எல்லாம் வாராமே தவிர்க்கும் விதியானை 59-6
வெப்பொடு பிணியெல்லாம் தவிர்த்தென்னை ஆட்கொண்டாய் 29-4

10. தம் குற்றங்களைப் பிழைகளை இறைவர் பொறுத்ததும், பிழைதவிர அருளுவதும், பழியைத் தவிர்த்ததும்

என் பிழையைப் பொறுப்பானை 59-1
ஒறுத்தாய் நின்னருளில் அடியேன் பிழைத்தனகள் பொறுத்தாய் எத்தனையும் நாயேனைப் பொருட்படுத்திச் செறுத்தாய் 23-3
தேவதேவன் என்சொல் முனியாதே வந்தெனுள்ளம் புகும் வாளொளி புற்றூர் மாணிக்கத்தை மறந்தென்னினைக்கேனே 57-3

தேவாரத்தில் நல்ல பயிற்சி கொண்டிருந்தார் என்பதற்கு இடம் இருக்கின்றது.

'குயிலும் மயிலும் பயிலும்' என இருவரும் கூறுவதும் காண்க. சம்பந்தர், 1-67-5; சுந்தரர், 99-11.

தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும் நாதனை 68-8
நான் செய்த குற்றங்கள் பொறுக்கும்...நள்ளாறனை 68-7
*பட்ட வார்த்தை படநின்ற வார்த்தை வாராமே தவிரப்
பணிப்பானை 59-2
பிழை எலாம் தவிரப் பணிப்பானை 59-1
பின்னை என் பிழையைப் பொறுப்பானை 59-1
வரும்பழி வாராமே தவிர்த்தென்னை ஆட்கொண்டாய் 29-5

11. வினை தீரப் பெற்றது

அருவினை யுள்ளன ஆசறுத்தானை 74-4
உலகறி பழவினையற ஒழித்தானை 74-7
எங்கேனும் இருந்துன் அடியேன் உனை நினைந்தால்
அங்கே வந்தென்னொடும் உடனாகி நின்றருளி
இங்கே என் வினையை அறுத்திட் டெனையாளும்
கங்காநாயகனே கழிப்பாலை மேயானே 23-2
என் செய்வினை அறுத்திடும் செம்பொனை 58-3
தீவினை தீர்த்த எம்மானை 62-9
பந்தித்த வினைப் பற்றறுப்பானை 61-8
பழவினை யுள்ளன பற்றறுத்தானை 74-2

12. பல கோயில்களைத் தரிசித்தேன் என மகிழ்வது

சாலக்கோயில் உளநின் கோயில் அவையென் தலைமேற்கொண்டாடி
மாலைத் தீர்ந்தேன் வினையுந் துரந்தேன் 41-3

13. இறைவனது காட்சியைப் பெற்ற தலங்களும்—விவரமும்

1. கடம்பூர்

கல்லால் நிழற்கீழ் ஒருநாள் கண்டதும், கடம்பூர்க் கரக்
கோயிலின் முன் கண்டதும் அல்லால் விரகொன்றிலம்
எம்பெருமான் 2-5

2. காழி (கழுமலம்)

எங்கள் பிரானைக்...கழுமல வளநகர்க் கண்டுகொண்டேனே 53

3. காணாட்டுமுள்ளூர்

†காணாட்டுமுள்ளூரிற் கண்டு கழல் தொழுது 40-11
காணாட்டுமுள்ளூரிற் கண்டு தொழுதேனே 40

---

* இது ஏயர்கோன் கலிக்காமர், பரவையார் - இவர்கள் பழித்த வார்த்தைகளைக் குறிக்கும்போலும்.

† ‘காணாட்டுமுள்ளூரிற் சாரும்போது கண்ணுதலார் எதிர்காட்சி கொடுப்பக் கண்டு’—பெரிய புராணம் - ஏயர்கோன். 120.

4. கோலக்கா (தேவியுடன் தரிசனம்)
*(குன்ற வில்லியை மெல்லியலுடனே) கோலக் காவினிற்
கண்டு கொண்டேனே (62-5), 62

5. நாட்டியத்தான்குடி
அஞ்சாதே உமக்காட்செய வல்லேன் 15-3
†பூணாண் ஆவதோர் அரவங்கண் டஞ்சேன், கச்சேர்
பாம்பொன்று கட்டி, ஐவாய் அரவினை மதியுடன்
வைத்த அழகா 15-1, 2, 7

6. வலிவலம்
வலிவலந்தனில் வந்துகண்டேனே 67
வலிவலந்தனில் கண்டு (கொண்டேனே) 67-6, 11

14. தாம் பெற்ற பேறும், தம் அனுபவங்களும்

உணர்வு பெற்றேன் உய்யுங் காரணம் தன்னால் 58-3
எத்தான் மறவாதே நினைக்கின்றேன், மனத்துன்னை வைத்தாய் 1-1
எம்பெருமான் அருளாய் என்றபின்னை, வவ்விஎன் ஆவி
மனங்கலந்தானை 67-8
ஐயனை யரவனென் பிறவி வேரறுக்கும் கரும்பினை 58-6
குண்டலங் குழைதிகழ் காதனே என்றும்...கொன்றையனென்றும்
வாய்வெருவித் தொழுதேன் விதியாலே, பண்டைநம் பல
மனமுங் களைந்தொன்றாய்ப் பசுபதி பதிவினவிப் பலநாளும்
...கழுமல வளநகர்க் கண்டுகொண்டேனே 58-5
எங்கே போவேன் ஆயிடினும் அங்கே வந்தென் மனத்தீராய்ச்,
சங்கை ஒன்றும் இன்றியே தலைநாள் கடைநாள் ஒக்கவே 77-2
‡சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை வகுத்துத், தன்னருள்
தந்தஎந் தலைவனை 53-1
தன்னை என்னை நினைக்கத் தருவானை 57-1
காறுறு குறையறிந் தருள் புரிவானை 67-2
நிலையாய் நின்னடியே நினைந்தேன் நினைதலுமே, தலைவா
நின்னினையப் பணித்தாய் §சலமொழிந்தேன் 21-9

---

* 'திருக்கோலக்கா அணையக், கங்கை சடைக்கரந்தவர்தாம் எதிர் காட்சி கொடுத்தருள'—பெரியபுரா. ஏயர்கோன் - 153.

† நாட்டியத்தான் குடியில் இறைவர் பாம்பு தரித்தது முதலாக அச்சம் தரும் வடிவுடனே சுந்தரருக்குக் காட்சி தந்தருள, அதுகண்டு நம்பிகள் இவ்வாறு பாடி அருளினர் என்று வரலாறு கூறுவர்.
—(பெரியபுரா, விருத்தியுரை - ஏயர்கோன் - பக். 35.)

‡ தலைப்பு 146-12 பக்கம் ௩அ௫-௩அ௬ கீழ்க்குறிப்பைப் பார்க்க.

§ சலம் - பொய்ம்மை, வஞ்சனை.

மழைக் கரும்பும் மலர்க் கொன்றையினானை வளைக்கலுற்றேன்
மறவாமனம் பெற்றேன், பிழைத்தொரு காலினிப் போய்ப்
பிறவாமைப் பெருமை பெற்றேன், பெற்றதார்பெறுகிற்பார்,
குழைக்கருங் கண்டனைக் கண்டுகொள்வானே பாடுகின்றேன்
சென்று கூடவும் வல்லேன் 58-4

மற்றொரு துணையில்லை மறுமைக்குங் காணேன், வருந்தலுற்றேன்
மறவாவரம் பெற்றேன், சுற்றிய சுற்றமும் துணையென்று
கருதேன், துணையென்று நான்தொழப் பட்டஒண் சுடரை,
முத்தியும் ஞானமும் வானவ ரறியா முறைமுறை பலபல
நெறிகளும் காட்டிக், *கற்பனை கற்பித்த கடவுளை அடியேன்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே 58-2

மறுபிறப்பென்னை மாசறுத்தானை 67-3

†மாத்தெனக்கு வைத்தானை 67-4

வரும்பெரும் வல்வினை யென்றிருந் தெண்ணி வருந்தலுற்றேன்
மறவா மனம் பெற்றேன், விரும்பியென் மனத்திடை
மெய்குளிர்ப் பெய்தி, வேண்டிநின் றேதொழுதேன் விதியாலே 53-6

15. கனவில் இறைவனைக் கண்டது

விருத்தனைப் பாலனைக் கனவிடை விரவி, விழித்தெங்கும் காண
மாட்டாது விட்டிருந்தேன்...கழுமல வளநகர்க்
கண்டுகொண் டேனே 58-3

16. அன்பர்களால் சூழப்பெற்றார், அடியாரால் தோழப் பட்டார், விரும்பப்பட்டார், பிறரால் பரவப்பட்டார் என்பது

அயலவர் பரவவும், அடியவர் தொழவும், அன்பர்கள் சாயலுள்
அடையலுற் றிருந்தேன் 58-7

எம்மானை மெய்ம்மானப் பாடரங்குடி யடியவர் விரும்பப்
பயிலு நாவலா ரூரன் 62-10

17. நாடெலாம் இவரைப் புகழ்ந்தது என்பது

நாடெலாம் புகழ் நாவலூராளி 64-10

* கற்பனை - உபதேசம்; போதனை.

† மாத்து - பெருமை.

147. சுந்தரருடைய பத்திநிலை, அவர் பெற்றபேறு, அவருடைய மனநிலை, குணம், அவர் தம்மைப் பற்றிக் கூறுவன

['சுந்தரரும் சிவனும்' என்னும் தலைப்பு-150 பார்க்க]

சுந்தரர் தமது குணம் குறைகளைக் கூறும் பதிகம் 73

இறைவனுடைய திருக்கோலங்களை ஒவ்வொன்றாக நினைந்து நினைந்து உருகி உருகிக் 'கண்டு தொழப் பெறுவதென்று கொலோ' எனப் பாடும் பதிகம் 84

அஞ்சல் என்றடித் தொண்டனேற் கருள் நல்கினாய்க் *கழிகின்றதென் 43-5

அஞ்சாதுன்னை யல்லால் அறிந்தேத்த மாட்டேனே 26-5

அஞ்சாதே உமக் காட்செய வல்லேன் யாதினுக் காசைப்படுகேன் 15-3

அஞ்சினார்க் கரண் ஆதி என்றடி யேனும் நான் மிக அஞ்சினேன் 48-5

அடிகளை அடிதொழப் பன்னாள் வாயினாற் கூறி மனத்தினால் நினைவான்...ஆரூரன் 14-12

அடிகளை...விலங்குமா றறிகிலேன் 74-9

அடிமைப் பட்டேனாகிலும் பாடுதல் ஒழியேன் 5-5

அடியவர்க் கடியனும் ஆவேன் 14-11

அடியார் அடியார்கட்கெல்லாம் தொண்டே பூண்டொழிந்தேன் 24-4

அண்மயத்தால்...ஆரூரன் சொன்ன அருந்தமிழ்கள் 46-11

அத்தன் அம்பொற் கழல்அடிகள் ஆரூரைச் சித்தம் வைத்த புகழ்ச் சிங்கடியப்பன் 37-11

அம்பொன் உன்னை அல்லால் அறியேன்மற் றொருவரையே 26-7

அம்பொன் ஒருத்தனை அல்லதிங் காரையும் உணரேன் உணர்வு பெற்றேன் உய்யுங் காரணம் தன்னால் 58-3

அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர் 73

ஆக்கும் அழிவும் ஐயநீ என்பன்நான், சொல்லுவார் சொற் பொருளவை நீ என்பன் நான், நாக்கும் செவியும் கண்ணும் நீஎன்பன் நான், நலனே இனி நான்உனை நன்குணர்ந்தேன் 4-7

ஆதியை மாதினொடும்...ஆரூர்புக் கெண்ணிய கண்குளிர என்றுகொல் எய்துவதே 83-9

ஆமாத்தூர் எம் அடிகளைக் கூடுவன் கூடுவன் குற்றமதற்றென் குறிப்பொடே 45-2

ஆமாத்தூர் ஐயனை ஆர்வத்தால் என்னவன் என்னவன் என்மனத் தின்புற் றிருப்பனே 45-8

ஆரூர்புக் கிடுபலி கொள்ளியை நான் என்றுகொல் எய்துவதே 83-5

---

* அழிகின்றது என் - குறைந்துபோவது என்ன.

ஆரூர்புக் கெண்ணிய கண்குளிர என்றுகொல் எய்துவதே 83-9
ஆரூர்புக் கெந்தை பிரானுரை என்றுகொல் எய்துவதே 83-1
ஆரூர்புக் கெல்லை மிதித்தடியேன் என்றுகொல் எய்துவதே 83-4
ஆரூர்புக் கென்பொனை என்மணியை என்றுகொல் எய்துவதே 83-7
ஆரூர்புக் கென்றன் மனங்குளிர என்றுகொல் எய்துவதே 83-2
ஆரூர்புக் கென்னுயிர்க் கின்னமுதை என்றுகொல் எய்துவதே 83-3
ஆரூர்புக் கேழுல காளியை நான் என்றுகொல் எய்துவதே 83-6
ஆரூர்புக் கேறணி எம்மிறையை என்றுகொல் எய்துவதே 83-8
ஆரூரானை மறக்கலு மாமே 59
ஆரூரை நன்னெடுங் காதன்மையால்... ஊரன் சொன்மலர் 83-10
ஆரூரை மறத்தற் கரியானை 59-11
ஆலங்காடன்றன் அடிமைத்திறமே அன்பாகிச் சித்தர்
சித்தம்வைத்த புகழ்ச்சிறுவன் ஊரன் 52-10
ஆளுடை ஆமாத்தூர் அண்ணல் 45-11
ஆனைக்காவுடை ஆதி பொன்னடியின் நீழலே சரணாக நின்றருள்
கூர நினைந்து வாழவல்ல வன்றொண்டன் 75-10
இகழுமா றறிகிலேன் எம்பெருமானை 74-6
இட்டனும்மடி ஏத்துவார் இகழ்ந்திட்டநாள் மறந்திட்டநாள்
கெட்டநாள் இவை என்றலாற் கருதேன் 48-2
இம் மாயப் பிறவி பிறந்தே இறந்தெய்த் தொழிந்தேன் 24-3
இலைமலிந்த மழுவானை மனத்தினால் அன்புசெய் தின்பம்
எய்தி...உரைத்த வண்டமிழ்களே 30-11
இறைகளோ டிசைந்த இன்பம் இன்பத்தோ டிசைந்த வாழ்வு...
பறைகிழித்தனைய போர்வை பற்றி யான் நோக்கினேற்கு 8-1
உகவீராகிலும் உகப்பன் 15-7
உரிமையால் உரியேன் உள்ளமும் உருகும் ஒண்மலர்ச்
சேவடி காட்டாய் 14-11
உள்ளம் உள்ளளவும் உய்வான் எண்ணிவந் தும்மடி அடைந்தேன் 15-7
உற்றனன் உற்றவர் தம்மை ஒழிந்துள்ளத் துள்பொருள்
பற்றினன் பற்றினன் பங்கயச் சேவடிக் கேசெல்ல
அற்றனன் அற்றனன் ஆமாத்தூர் மேயான் அடியார்கட்காள்
பெற்றனன் பெற்றனன் பெயர்த்தும் பெயர்த்தும்
பிறவாமைக்கே 45-10
உற்றாயென் றுன்னையே உள்குகின்றேன் உணர்ந்துள்ளத்தால்...
பற்றாக வாழ்வேன் 92-1
உன்னை அல்லால் அறிந்தேத்த மாட்டேனே 21-7, 8; 26
உன்னை அல்லால் இனிஏத்த மாட்டேனே 21-1, 3; 26-3
உன்னை அல்லால் இனி ஒன்றும் உணரேனே 26-9
உன்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே 26-3
உன்னை அல்லால் உகந்தேத்த மாட்டேனே

உன்னை அல்லால் உரையேன் ஆவதனால் உடலில் உயிர்
உள்ளளவும், உன்னை யல்லால் அறிந்தேத்த மாட்டேனே 21-8
உன்னை அல்லால் குளிர்ந்தேத்த மாட்டேனே 21-6
உன்னை அல்லால் பணிந்தேத்த மாட்டேனே 21-4
உன்னை அல்லால் பெரிதேத்த மாட்டேனே 21-5
உன்னை அல்லால் மகிழ்ந்தேத்த மாட்டேனே 21-2, 9
உனைநான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே 48
எங்கள தடிகள் 72-4
எங்கேனும் போகினும் எம்பெருமானை நினைந்தக்கால்
கொங்கே புகினும் கூறைகொண் டாறலைப் பாரிலை 92-3
(எத்தான்) மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை (வைத்தாய்) 1-1,3
எந்தை யிருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ என்று
சிந்தை செயும் திறம் வல்லான் 73-11
எந்தையை எந்தை தந்தை பிரானை 57-7
எம்பிரானாய நம்பி 63-7
எம்பெருமான் நினையே நினைந்தேத்துவன் எப்பொழுதும் 20-7
எம்மான் எம்மனை என்றனக் கெட்டனைச் சார்வாகார் 24-3
எம் சிரத்தான் 82-8
எய்வான் வைத்ததோர் இலக்கினை அணைதர நினைந்தேன்
உள்ளம் உள்ளளவும் 15-7
எருதேறுங் கண்ணா நின்னல தறியேன் 15-9
எல்லியும் பகலும் பணியது செய்வேன் 69-7
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே 63
எளிவாய் வந்தெனுள்ளம் புகுதவல்ல எம்பெருமான் 26-9
எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெருமானையே 92-1
எற்றே ஒரு கண்ணிலன நின்னையல்லால் மற்றேல் ஒரு
பற்றிலன் எம்பெருமான் 3-3
என் இடர்த்துணையே 26-2
என்மனக் கருத்தை 62-8
என்னவனாம் அரன் 39-11
என்னுடைய குருவே உன் குற்றேவல் செய்வேன் 26-4
என்னை நான் மறக்குமா றெம்பெருமானை 74-1
என்னைமதித் துய்யும்வணம் அருளும் கண்ணுதலைக் கனியைக்
காண்பதும் என்றுகொலோ...கானப் பேருறை காளையையே 84-6
எனக்கார் துணைநீ யலதே 28
எனக்கின் னமுதாயவனே 27-2
எனக்கினித் தினைத்தனைப் புகலிடம் அறிந்தேன் 72-1
எனக்கினியவன் 72-1
எத்தர் [illegible] அளிக்கும் மணிமிடற்றன 4-10
[illegible] நாயகனை 25-9

ஏதிலென் மனத்துக்கோர் இரும்புண்ட நீரை 58-1
ஒட்டீராகிலும் ஒட்டுவன் அடியேன்உம் அடி அடைந்தவர்க்கு 15-5
ஒண்பொருளை தண்டமிழால் உன்னி மனத்தயரா உள்ளுருகிப்
பரவும்...நாவலர்கோன் 84-10
ஒருமையே அல்லேன் எழுமையும் அடியேன் அடியவர்க்
கடியனும் ஆனேன் 14-11
ஒழிக்கிலேன் பிதற்றுமா றெம்பெருமானை 74-5
ஓதலுணர்ந்தடியார் உன் பெருமைக்கு நினைந், துள்ளுருகா
விரசும் ஓசையைப் பாடலுநீ, ஆதலுணர்ந்தவரோ டன்பு
பெருத்தடியேன், அங்கையின் மாமலர்கொண் டென்கண
தல்லல் கெடக், காதலுறத் தொழுவ தென்றுகொலோ
அடியேன்...கானப்பேருறை காளையையே 84-2
ஓர்ந்தனன் ஓர்ந்தனன் உள்ளத்துள்ளே நின்ற ஒண்பொருள் 45-4
*ஓவுநாள் உணர்வழியு நாள் உயிர்போகுநாள் உயர் பாடைமேல்,
காவுநாள் இவை என்றலாற் கருதேன்...சொல்லு நா
நமச்சிவாயவே 48-3
கட்டியின் கரும்போங்கிய நீடூர்க் கண்டு நாம் பணியா விடலாமே 56-7
கடியேன் காதன்மையாற் கழற்போதறியாத என்னுள் குடியாக்
கோயில்கொண்ட குளிர்வார்சடை எம் குழகா 26-7
கண்டுகொண்டார் ஐவர் காக்கிலும், நா வாயால் உன்னையே
நல்லன சொல்லுவேற்கு ஆவாஎன் 96-1
கணம்படிந்தேத்திக் கங்குலும் பகலும் கருத்தினாற் கைதொழு
தெழுவேன் 14-8
கருதீராகிலும் கருதினானேல் உம்மடி பாடுதல் ஒழியேன் 15-1
†கரையுங் கடலும் மலையும் காலையும் மாலையும் எல்லாம், ‡உரையில்
விரவி வருவான் ஒருவன் உருத்திர லோகன்...
அரையன் இருப்பதும் ஆரூர் அவரெம்மையும் ஆள்வரோ
கேளீர் 73-1
கலியேன் மானுட வாழ்க்கை ஒன்றாகக் கருதிடிற் கண்கள்நீர்
பில்கும் 15-8
காணாத கண்கள் காட்டவல்ல கறைக்கண்டனே 92-8
காணாதொழிந்தேன் காட்டுதியேல் இன்னம் காண்பன் நான் 92-8
காணீராகிலும் காண்பன் என் மனத்தால் 15-1

---

* ஓவும் நாள் - (உன்னை மறந்து) நீங்கும் நாள்.

† "திருத்தொண்டர் தம்மை நோக்கி 'எந்தை இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்" என்னும் சந்த இசைப் பதிகந்தன் பாடி'—பெரியபுரா. தடுத்தாட் - 123.

‡ தமது பேச்செல்லாம் 'இறைவன் புகழே, இறைவன் நாமமே இறைவனைப் பற்றிய பேச்சே' என்க.

காருருங் கமழ் கொன்றை நன்மாலை முடியன், காரிகை
காரணமாக ஆரூரை மறத்தற் கரியானை 59-11
காலமும் நாழிகையும் நனிபள்ளி மனத்தினுள்கிக், கோலம
தாயவனை...நாவலவூரன் சொன்ன மாலை 97-10
காலனைக் காலாற்கடந்த காரணம் கண்டு கண்டடியேன், இறைவன்
எம்பெருமான் என்றெப்போதும் ஏத்தி ஏத்தி நின்றஞ்சலி
செய்துன், அறைகொள் சேவடிக் கன்பொடும் அடைந்தேன்
ஆவடுதுறை ஆதி எம்மானே 66-1
குண்டாடிச் சமண் சாக்கியப் பேய்கள் கொண்டா ராகிலும்
கொள்ளக் கண்டாலும் கருதேன்...நின்னல தறியேன் 15-9
குற்ற நம்பி, குறுகார் எயில் மூன்றைக் குலைத்தநம்பி, சிலையாவரை
கையில், பற்று நம்பி, பரமானந்த வெள்ளம் பணிக்கும் நம்பி
எனப் பாடுதலல்லால், மற்று நம்பி உனக்கென்செய வல்லேன்
மதியிலேன் படுவெந்துயர் எல்லாம், எற்றுநம்பி, என்னை
ஆளுடைநம்பி, எழுபிறப்பும் எங்கள் நம்பி, கண்டாயே 63-5
சிந்தை என் தடுமாற்றறுப்பானை 57-3
சிலந்தி...தன்னைச் சோழன் ஆக்கிய தொடர்ச்சிகண் டடியேன்
புரண்டு வீழ்ந்து நின் பொன் மலர்ப்பாதம் போற்றி போற்றி
என்றன்பொடு புலம்பி, அருண்டென் மேல்வினைக் கஞ்சிவந்
தடைந்தேன் ஆவடுதுறை ஆதிஎம்மானே 66-2
சுரும்பார் விண்டமலர் அவைதூவித் தூங்குகண்ணீர், அரும்பா
நிற்குமனத் தடியாரொடும் அன்பு செய்வன் 23-4
செடித்தவஞ் செய்வார் சென்றுழிச் செல்லேன் 14-6
செத்தபோதினில் முன்னின்று நம்மைச் சிலர்கள் கூடிச் சிரிப்பதன்
முன்னம், வைத்த சிந்தையுண்டே, மனமுண்டே, மதியுண்டே,
விதியின் பயனுண்டே...எம்பிரானை ஆரூரானை
மறக்கலுமாமே 59-4
செறிவுண்டேல், மனத்தால் தெளிவுண்டேல், தேற்றத்தால் வரும்
*சிக்கனவுண்டேல், †மறிவுண்டேல் மறுமைப் பிறப்புண்டேல்,
வாணாள்மேற் செல்லும் வஞ்சனை உண்டேல்...அறிவுண்டே
உடலத் துயிர் உண்டே ஆரூரானை மறக்கலுமாமே 59-5
சென்னியில் எங்கள் பிரான் 22-1
சொல்லுவார் சொற்பொருளவை நீ என்பன் நான் 4-7
தஞ்சொலார் அருள்பயக்கும் தமியனேன் 8-10
தன்னை என்னை நினைக்கத் தருவானை 57-1
தனியனென் றெள்கி அறியேன் தம்மைப் பெரிதும் உகப்பன்
முனிபவர் தம்மை முனிவன் ‡முகம்பல பேசி மொழியேன் 73-2

---

* சிக்கனவு - மனவுறுதி. † மறிவு - இறத்தல்.

‡ முகம் - முகஸ்துதி.

தாயவனாய்த் தந்தை ஆகிச் சாதல் பிறத்தலின்றிப், போயகலாமைத்
தன் பொன்னடிக் கென்னைப் பொருந்த வைத்த வேயவனூர் 17-7
திரிபுரம் செற்ற அங்கையான் கழலடி அன்றிமற் றறியான்
அடியவர்க் கடியவன் தொழுவன் ஆரூரன் 74-10
திருப்புகழ் விருப்பாற் பன்னலந் தமிழாற் பாடுவேற்கு 69-4
திருப்புகழ் விருப்பாற் பாடிய அடியேன் 69-2
திருமருவு திரள் தோளான் 73-11
திருவுமெய்ப் பொருளும் செல்வமும் எனக்குன் சீருடைக் கழல்கள்
என்றெண்ணி, ஒருவரை மதியாது உறாமைகள் செய்தும்
ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன் 69-1
தீவினை செற்றிடும் என்று அடித்தவம் அல்லால் ஆரையும்
அறியேன், ஆவதும் அறிவர் எம் அடிகள் 14-6
துச்சேன் என்மனம் புகுந்திருக் கின்றமை சொல்லாய் 15-2
துஞ்சேன் நான்ஒருகால் தொழுதேன் 26-5
தேடுவன் தேடுவன் செம்மலர்ப் பாதங்கள் நாடொறும் 45-9
தேவதேவன் என்சொல் முனியாதே வந்தென் உள்ளம் புகும்
வாளொளிபுற்றூர் மாணிக்கத்தை மறந்தென் நினைக்கேனே 57-3
தேவனெனை ஆள்வான் திருக்கேதீச் சரத்தானே 80-9
தேறேன் உன்னை அல்லாற் சிவனே என் செழுஞ்சுடரே 23-8
தொடராமைத் துரிசறுத்தேன் 24-4
தொண்டாடித் தொழுவார் தொழக்கண்டு தொழுதேன்
என்வினை போக 15-9
நச்சேன் ஒருவரை நான் உமை அல்லால் காட்டியத்தான்குடி நம்பி 15-2
நடப்பீராகிலும் நடப்பன் உம் அடிக்கே 15-6
நமர்பிறர் என்பதறியேன் 73-9
நமன்தமர் புகுந்தென்னை நோந்தனை செய்தாலும் நுன்னல
தறியேன் நான் 29-7
நல்லன நோக்காமைக், காக்கின்றார் கண்டுகொண்டார் ஐவர்
காக்கிலும், வாக்கென்னும் மாலைகொண் டுன்னை என்மனத்
தார்க்கின்றேன் 96-4
நலியேன் ஒருவரை நான் உமை அல்லால் 15-8
நள்ளாறனை அமுதை நாயினேன் மறந்தென்னினைக்கேனே 68
நாக்கும் செவியும் கண்ணும் நீ என்பன் நான் 4-7
நாட்டியத்தான்குடி நம்பியை நாளும் மறவாத்...திருவாரூரன் 15-10
நாடுவன் நாடுவன் நாபிக்குமேலே ஓர் நால்விரல் 45-9
நாத்தான் உன்திறமே திறம்பாது நண்ணி அண்ணித்து அமுதம்
பொதிந்தூறும், ஆத்தானை அடியேன் தனக்கென்றும் 67-4
நாயடியேன் எய்துவதென்று கொலோ...கானப்பேருறை
காளையையே 84-9

நாவலூர்க்கோன் நலத்தமிழைப் பாடவல்ல பரமன் அடியார்க்
கடிமை வழுவா நாடவல்ல தொண்டன் ஆரூரன் 18-10
நாளுநாம் உகக்கின்ற பிரானை 56-3, 61-7
நானுடை மாடெம்பிரான் 97-3
நானுடை மாடெனவே நன்மை தரும் பரனை 84-3
நாளும் காதல் செய்கின்ற பிரானை 56-10
*நிட்கண்டகம் செய்து வாழ்வேன் 73-5
நித்தமாக நினைந்துள்ளம் எத்தித் தொழும் அத்தன் 37-11
நிணம்படும் உடலை நிலைமையென் றோரேன் நெஞ்சமே
தஞ்சமென் றிருந்தேன் 14-8
நிலையாய் நின்னடியே நினைந்தேன் நினைதலுமே, தலைவா
நின்னினையப் பணித்தாய் சலமொழிந்தேன் 21-9
நின்னை யல்லால் இனியாரை நினைக்கேனே 24
நினைந்தபோதவர் நமக்கினியவாறே 30
நினையன்றி மற்றுக் கூறேன் நா அதனால் 26-8
நீடூர் எத்தி நாம் பணியா விடலாமே 56-10
நீடூர்க் கண்டுநாம் பணியா விடலாமே 56-7
நீடூர்க் கூத்தனைப் பணியா விடலாமே 56-6
நீடூர்க் கேண்மையாற் பணியா விடலாமே 56-9
நீடூர்க் கொல்லை வெள்ளேறுதேற வல்லானைக் கூறிநாம் பணியா
விடலாமே 56-3
நீடூர்த் தோன்றலைப் பணியா விடலாமே 56-5
நீடூர்ப் (பரமனைப்) பணியா விடலாமே 56-1
நீடூர்ப் புனிதனைப் பணியா விடலாமே 56-2
நீடூர் வேடனாய பிரானவன் தன்னை விரும்பிநாம் பணியா
விடலாமே 56-4
நீடூர் வேந்தனைப் பணியா விடலாமே 56-8
நீதியில் ஒன்றும் வழுவேன் 73-5
நீள நினைந்தடியேன் உமை நித்தலும் கைதொழுவேன் 20-1
†நும்மடி ஏத்துவார் இகழ்ந்திட்டநாள் மறந்திட்டநாள் கெட்டநாள்
இவை என்றலாற் கருதேன் 43-2
நெஞ்சங் கொண்டார் 17-4
நைவானன்றுமக் காட்பட்ட தடியேன் 15-7
நொந்தா ஒண்சுடரே நுனையே நினைந்திருந்தேன் 21-1
நோக்குவேன் உன்னையே 96-4
பசுவே ஏறினும் பழியேன் 15-8
படப்பாற் றன்மையில் நான்பட்ட தெல்லாம் படுத்தாய் என்றல்லல்
பறையேன் 15-6

---

* நிட்கண்டகம் - ஒருபாற் கோடாமை.

† இது சுந்தரருடைய பக்தி வைராக்கியத்தைக் காட்டுகின்றது.

படிசெய் நீர்மையில் பத்தர்காள் பணிந்தேத்தினேன் பணியீரருள் 30-10
பண்டே நின்னடியேன் 21-4
பண்டே மிக நான் செய்த பாக்கியத்தாற் பரஞ்சோதீ நின்னாமம்
பயிலப் பெற்றேன் 3-8

பண்ணுதலைப் பயனார் பாடலும் நீடுதலும், பங்கய மாதனையார்
பத்தியும் முத்தியளித், தெண்ணுதலைப் பெருமான் என்றெழுவா
ரவர்தம், ஏசறவும் இறையாம் எந்தையையும் விரவி, நண்ணுதலைப்
படுமா றெங்ஙனம் என்றயலே, நைகிற என்னை மதித்துய்யும்
வணம் அருளும், கண்ணுதலைக் கனியைக் காண்பதும்
என்றுகொலோ, கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே 84-6
பாம்பரைக் காவல் எனக்கிறையென் றெய்துவ தென்றுகொலோ 84-7
பாமனையே பணியச் சித்தம் வைத்த தொண்டர் தொண்டன் 7-11
பலிதேர்ந் துண்பதோர் பண்புகண் டிகழேன் 15-8
பாடியும் நாடியும் அறிய நட்டேன் ஆதலால் நான் மறக்கில்லேன் 15-5
பிறவேனாகிலும் மறவேன் 15-1
புகழ்தக்க அடிமை போகுநாள் வீழுநாள் 14-5
புகழக் கற்றனவும் பரவிக் கைதொழல் என்றுகொலோ...கானப்
பேருறை காளையையே 84-4
புயலினைத் திருவினைப் பொன்னின தொளியை, மின்னின
துருவை என்னிடைப் பொருளைக்...கண்டுகொண்டேனே 58-7
புரமூன் றெரியச் சிலைதொட்டவனை உனைநான் மறவேன் 4-9
புலியூர்ச் சிற்றம்பலத் தெம்பெருமானைப் பெற்றாமன்றே 90
புறங்காட் டாடல்கண் டிகழேன் 15-1
பூணாண் ஆவதோர் அரவங்கண் டஞ்சேன் புறங்காட் டாடல்
கண்டிகழேன் 15-1
பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மைவந் தெய்தினேன் 48-1
பெறலாகா அருள் பெற்றேன் 1-2
பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றாமன்றே 90-10
பேணா தொழிந்தேன் உன்னையலாற் பிறதேவரை 92-8
பேணீராகிலும் பெருமையை உணர்வேன் 15-1
பொய்யா தென்னுயிருட் புகுந்தாய் இன்னம் போந்தறியாய் 28-5
பொன்னே நன்மணியே வெண்முத்தே செம்பவளக் குன்றமே
ஈசன் என்றுன்னையே புகழ்வேன் 38-2
மட்டார் பூங்குழல் மலைமகள் கணவனைக் கருதாதார் தமைக்
கருதேன் 15-5
மணிப்படு கண்டனை வாயினாற் கூறி மனத்தினால் தொண்டனேன்
நினைவேன் 14-10
மருவிப் பிரிய மாட்டேன்நான் *வழிநின் றொழிந்தேன் ஒழிகிலேன் 77-3

* கயிலையிற் பிரிந்தேன் - இனிப் பிரியேன்.

மற்றுத்தேவரை நினைந்துனை மறவே னெஞ்சினாரொடு
வாழவுமாட்டேன் 54-7
மற்றுநான் பெற்றதார் பெறவல்லார் வள்ளலே! கள்ளமே பேசிக்
குற்றமே செயினும் குணமெனக் கொள்ளும் கொள்கையால்
மிகைபல செய்தேன் 69-6
மற்றுப் பற்றெனக் கின்றிநின் திருப் பாதமே மனம் பாவித்தேன் 48-1
மறவேன் அடியேன் 41-5
மனக்கினியவன் 72-1
மனத்தினால் நினைந்தபோ தவர்நமக் கினியவாறே 30
மாட்டேன் மறுமையை நினையேன் 15-8
மாடுவன் மாடுவன் வன்கைபிடித்து மகிழ்ந்துளே-ஆடுவன் ஆடுவன்
ஆமாத்தூரெம் அடிகளே 45-9
மாலவன்...கண்ணிடந்திடலும், சக்கரம் கொடுத்தல்கண் டடியேன்
திகழும் நின் திருப் பாதங்கள் பரவித், தேவதேவ நின் திறம் பல
பிதற்றி, அகலும் வல்வினைக் கஞ்சிவந் தடைந்தேன் ஆவடு
துறை ஆதி எம்மானே 66-3
மாவேந்திய கரத்தான் எமசிரத்தான் 82-7
மிண்டர்க்கும் மிண்டலாற் பேசேன் 73-8
முடியேன் இனிப் பிறவேன் பெறின் மூவேன் 1-4
முயல்பவர் பின்சென்று முயல்வலை யானைபடுமென மொழிந்தவர்
வழிமுழுதெண்ணி...கண்டுகொண்டேனே 58-7
முன்னே எம்பெருமானை மறந்தென்கொல் மறவாதொழிந்தென்
கொல், மறவாத சிந்தையால் வாழ்வேன் 38-2
மூவர்...நின்சரணம் புக்கு மற்றவர் பொன்னுலகாள...அருள்
ஈந்தமை அறிந்து, மிக்கநின் கழலே தொழுதரற்றி வேதியா
ஆதிமூர்த்தி நின் அரையில், அக்கணிந்த எம்மான் உனை
அடைந்தேன் ஆவடுதுறை ஆதி எம்மானே 66-5
மெய்ப்பொருளன்றி உணரேன் 73-8
மெய்ம்மானப் பாடரங்குடி அடியவர் விரும்பப் பயிலும்
நாவலாரூரன் 62-10
மோரூந் தோரொருகால் நினையா திருந்தாலும், வேரு வந்தென்
னுள்ளம் புகவல்ல மெய்ப்பொருளே 21-3
வஞ்சமொன் றின்றி உய்த்தனன் தனக்கே திருவடிக் கடிமை...
உரைத்தக்கால் உவமனே ஒக்கும் 14-1
வந்தாய் போயறியாய் மனமே புகுந்துநின்ற, சிந்தாய்
எந்தை பிரான் 21-1
வலியே யாகிலும் வணங்குதல் ஒழியேன் 15-8
வாஞ்சியத்துள் ஏழைபாகனை யல்லால் இறையெனக் கருதல்
இலமே 76-9

வாஞ்சியத் துறையும் இருவரால் அறியொண்ணா இறைவனை
தறைகழல் சரணே 76-7
வாஞ்சியத் துறையும்...இறைவனை தறைகழல் பரவும் நாவலாரூரன் 76-10
வாயினால் உன்னைப் பரவிடும் அடியேன் 69-1
வாளொளி புற்றூர் மாணிக்கத்தை மறந்தென்னினைக்கேனே 57
வாளொளி புற்றூர் மாணிக்கத்தை மறந்தென்னினைக்கேனென்
றாளங்குளிர் தமிழ் ஊரன் வன்றொண்டன் 57-12
வானவர்தங் கண்டனை அன்பொடு சென்றெய்துவ தென்று
கொலோ 84-8
விசயன் தனக்கு...வான்படை கொடுத்தல் கண்டடியேன், வாரத்
தால் உன நாமங்கள் பரவி வழிபட்டுன் திறமே நினைந்துருகி,
ஆர்வத்தோடும் வந்தடியிணை அடைந்தேன் ஆவடுதுறை
ஆதி எம்மானே 66 4
விரும்பி நின்மலர்ப் பாதமே நினைந்தேன் வினைகளும் விண்டனன் 48-7
விரும்பேன் உன்னையல்லால் ஒருதெய்வம் என்மனத்தால்
...கழிப்பாலை மேயானே 23-4
வெருண்டவர்க்கும் துணையாகேன் 73-5
வேதியர் தம்மை வெகுளேன் 73-5
வேறா உன் அடியேன் 28-8
வைத்தனன் தனக்கே தலையும் என் நாவும் நெஞ்சமும் 14-1

148. சுந்தரரும் அடியார்களும்

1. அடியார்களை விளித்து, இறைவனுடைய அடையாளங்களைக் குறிப்பிட்டு வினவுதல் (பதிகம் 33)

1. அடியார்களை விளித்து வினவுதல்

(அரையன்) இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும்
ஆள்வரோ கேளீர் 73
இட்டிதாகவந் துரைமினோ நமக்கிசையுமா நினைந்தேத்துவீர் 33-2
ஒன்றி நீர்கள் வந்துரைமினோ நமக்கிசையுமா
நினைந்தேத்துவீர் 33-3
படிசெய் நீர்மையிற் பத்தர்காள் பணிந்தேத்தினேன்
பணியீர்-அருள், வடிவிலான் திருநாவலூரன்-
வனப்பகை யப்பன் வன்றொண்டன், செடியனாகிலும்
தீயனாகிலும் தம்மையே மனம் சிந்திக்கும், அடியன்
ஊரனை ஆள்வரோ நமக்கடிகளாகிய அடிகளே 33-10
மெய்யென் சொல்லுமின் நமரங்காள் உமக்கிசையுமா
நினைந்தேத்துவீர் 33-7
வந்து சொல்லுமின் மூடனேனுக்கு வல்லவா
நினைந்தேத்துவீர் 33-6

2. *இறைவனுடைய (நமக்கடிகளாகிய அடிகளுடைய) அடையாளங் களைக் கூறி வினவுதல் (பதிகம் 33)

அமணராற் பழிப்புடையரோ நமக்கடிகளாகிய அடிகளே	33-9
அயன் நெடிய மாலுக்கும் நெடியரோ	33-8
அன்றியே மிக அறவரோ	33-3, 6
ஆறு தாங்கிய சடையரோ	33-1
ஆனை யீருரி போர்ப்பரோ	33-4
இன்றியே யிலராவரோ அன்றி யுடையராய் இலராவரோ	33-2
கட்டி வாழ்வது நாகமோ	33-2
கடைதோறுஞ் சென்று ஐயங்கொள்ளும் அவ்வடிகளோ நமக்கடிகளாகிய அடிகளே	33-7
கரி காடரோ	33-7
கறைக் கண்டரோ	33-7
காடுதான் அரங்காகவே கைகள் எட்டினோ டிலயம்பட ஆடுவாரெனப் படுவரோ	33-8
குழைக் காதரோ	33-1
குறிப்பாகி நீறுகொண் டணிவரோ	33-3
குறுங்கோட்டிள ஏறுதாங்கிய கொடியரோ	33-1
குன்றிபோல்வதோர் உருவரோ	33-3
கையிற் சூலமதுடையரோ	33-7
கொடுகொட்டி காலர் கழலரோ	33-5
கோணல் மாமதி சூடரோ	33-5
சடைமேலு நாறு கரந்தையோ	33-2
சுடு பொடியரோ	33-1
ஞமண ஞாஞண ஞாணஞோணமென் றோதியாரையும் நாணிலா அமணராற் பழிப்புடையரோ	33-9
தம்மை வாழ்த்தினோர்கட்கு நல்லரோ	33-6
தமைப் பற்றினோர்கட்கு நல்லரோ	33-4, 8
தேனையாடு முக்கண்ணரோ	33-4
நலமார்தர ஆனையாக நம்மடிகளோ நமக்கடிகளாகிய அடிகளே	33-5
நாணதாகவோர் நாகங்கொண் டரைக்கார்ப்பரோ	33-5
நீடுவாழ்பதி உடையரோ	33-8
பட்டியேறுகந் தேறரோ	33-2
படுதலையரோ	33-1
படுவெண்டலைப் பலிகொண்டுவந் தட்டியாளவும் கிற்பரோ	33-2
பாடுவாரையும் உடையரோ	33-8
பால்நெய் யாடலும் பயில்வரோ	33-4
பாறு தாங்கிய காடரோ	33-1

* அப்பர் - வினாவிடைத் திருத்தாண்டகம் VI-97(1-5) போன்றது.

புந்தியால் உரை கொள்வரோ 33-6
பொய்யின் மெய்யுரைத் தாள்வரோ 33-6
மலைப்பாவையோர் கூறுதாங்கிய குழகரோ 33-1
மானைமேவிய கண்ணினாள் மலைமங்கை நங்கையை அஞ்சவோர்
ஆனையீருரி போர்ப்பரோ 33-4
மிக அறவரோ 33-3, 6
மிகச் செய்யரோ 33-4
வந்த சாயினை அறிவரோ 33-6
விடையேறரோ 33-7
விடையேறு வேதமுதல்வரோ 33-5
விளங்கும் பிறை...தாங்கிய சடையரோ 33-1
வீணைதான் அவர் கருவியோ 33-5
வெய்ய பாம்பரை ஆர்ப்பரோ 33-7
வெள்ளை நீற்றரோ 33-4

2. அடியார் பொருட்டு இறைவனிடம் முறையீடும் விண்ணப்பமும்

அருகற் பிணிநின் அடியார்மேல அகல அருளாயே 47-5
அருத்தித் துன்னை அடைந்தார் வினைகள் அகல அருளாயே 47-8
அருத்தியுடைய அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து மறுமை பணித்தால் வாழ்ந்து போதீரே 95-4
ஆளாயிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே 95-1
இருந்து நின்றுங் கிடந்து மும்மை இகழா தேத்துவோம்
வருந்தி வந்து முமக்கொன் றுரைத்தால் வாழ்ந்து போதீரே 95-10
இழியாக் குலத்திற் பிறந்தோம் உம்மை இகழா தேத்துவோம்
பழிதான் ஆவ தறியீர் அடிகேள் பாடும் பத்தரோம்
வழிதான் காணா தலமந் திருந்தால் வாழ்ந்து போதீரே 95-8
உமக்காட் பட்டோர்க்கு மாயங் காட்டிப், பிறவி காட்டி,
மறவா மனம் காட்டிக், காயங் காட்டிக் கண்ணீர்
கொண்டால் வாழ்ந்து போதீரே 95-7
எந்தம் அடிகள் இதுவே யாமா றுமக்காட் பட்டோர்க்கு 95-5
எயெம் பெருமான் இதுவே யாமா றுமக்காட் பட்டோர்க்கு 95-7
கங்குற் புறங்காட் டாடீ அடியார் கவலை களையாயே 47-2
கன்றுமுட்டி யுண்ணச் சுரந்த காலி யவைபோல, என்று முட்டாப்
பாடும் அடியார் தங்கண் காணாது, குன்றின் முட்டிக் குழியில்
விழுந்தால் வாழ்ந்து போதீரே 95-3
காலை எழுந்து தொழுவார் தங்கள் கவலை களைவாய் கறைக்கண்டா 41-5
சந்தம் பலவும் பாடும் அடியார் தங்கண் காணாது, வந்தெம்
பெருமான் முறையோ என்றால் வாழ்ந்து போதீரே 95-5

தாங்கூர் பிணிநின் அடியார் மேல அகல அருளாயே 47-6
தனத்தா லின்றித் தாந்தாம் மெலிந்து தங்கண் காணாது,
மனத்தால் வாடி அடியார் இருந்தால் வாழ்ந்து போதீரே 95-6
தூவாயா தொண்டு செய்வார்படு துக்கங்கள் காவாயே 96-1
*நஞ்சி யிடையின்று நாளையென் றும்மை நச்சுவார்
துஞ்சியிட்டாற் பின்னைச் செய்வதென் அடிகேள் சொலீர் 43-1
நா மாறு துன்னையே நல்லன சொல்லுவார், போமாறென்
புண்ணியா! 96-3
நாய்தான் போல நடுவே திரிந்து மூமக்காட் பட்டோர்க்கு,
வாய்தான் திறவீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே 95-9
நெஞ்சேர நின்னையே யுள்கி நினைவாரை, அஞ்சேலென்
பரவையுண் மண்டளி அம்மானே 96-5
பருகப் பணியாய் அடியார்க் குன்னைப் பவளப் படியானே 47-5
பொய்யே உன்னைப் புகழ்வார் புகழ்ந்தால் அதுவும் பொருளாக்
கொள்வானே, மெய்யே...உன்னை நினைவார் அவரை
நினைகண்டாய் 41-7
மலக்கில் நின்னடியார்கள் மனத்திடை மால்தீர்ப்பாய் 29-8
மனத்தால் வாடி அடியார் இருந்தால் வாழ்ந்து போதீரே 95-6
மெய்யே எங்கள் பெருமான் உன்னை நினைவார் அவரை
நினைகண்டாய் 41-7

3. சுந்தரருக்கு அடியாரிடத்திலும், அடியார்க்கடியாரிடத்திலும் பத்தி

1. அடியார்களே தம்மை ஆளுடையார் என்பது:

ஆனைக்காவுடை ஆதியை நாளும்
,, இணைகொள் சேவடி சேர்வார் எம்மையும்ஆளுடையாரே 75-5
,, இரவும் எல்லியும் பகலும் ஏத்துவார் எமை யுடையாரே 75-8
,, இலங்கு சேவடி சேர்வார் எம்மையும் ஆளுடையாரே 75-9
,, இறைவ னென்றடி சேர்வார் எம்மையும் ஆளுடையாரே 75-1
,, ஈரமுள்ளவர் நாளும் எம்மையும் ஆளுடையாரே 75-7
,, எங்கள் ஈசன் என்பார்கள் எம்மையும் ஆளுடையாரே 75-2
,, எண்ணுமாறு வல்லார்கள் எம்மையும் ஆளுடையாரே 75-6
,, எந்தை என்றடி சேர்வார் எம்மையும் ஆளுடையாரே 75-4
,, ஏலுமாறு வல்லார்கள் எம்மையும் ஆளுடையாரே 75-3
,, வன்றொண்டன் வண்டமிழ் மாலை வல்லார் போய்
எழுமா பிறப்பற்று எம்மையும் ஆளுடையாரே 75-10

* 'வருந்தி வேண்டுப்வர்க்கு, ஆயுள் வரையும் கொடாமல் இருந்தால் அவர்கள் வேண்டுவது பெறாதே இறந்துபடின் அப்புறம் அவர்களுக்கு என்ன செய்யப் போகிறீர்"

—பெரிய புராண விரிவுரை, ஏயர்கோன் பக்கம், 113.

4. தமது பாடலில் வல்லாரிடத்திற் சுந்தரருக்கு இருந்த பக்தி

வன்றொண்டன் பன்னு தமிழ்நூல் மாலை வல்லார் அவர்எந்
தலைமேற் பயில்வாரே 41-10
வன்றொண்டன் வண்டமிழ்மாலை வல்லார் போய் ஏழுமா
பிறப்பற்று எம்மையும் ஆளுடையாரே 75-10

5. சிவன் அடியார்க்கு அடியான் தான் என்பது

(i) திருத்தொண்டத்தொகை 39ஆவது பதிகம்
(ii) ஆலங்காடா வுன் அடியார்க் கடியேன் ஆவேனே 52
(iii) நாவின்மிசை யரையன்னொடு தமிழ்ஞான சம்பந்தன்
யாவர் சிவனடியார்களுக் கடியான் அடித்தொண்டன் 73-10
(iv) முற்று மதிசேர் முதல்வன் பாதத் தற்று ரடியா ரடிநாவூரன் 94-10

6. தமது பாமாலையைப் பாடுங்கள் என்று அடியார்களுக்கு உபதேசம்

திருவாரூரன் உரைத்த பாடலாகிலும் பாடுமின் தொண்டீர்
பாடநும் பாவம் பற்றறுமே 15-10
நாவலூரன் பன்னலங்கள் நன்மாலை பாடுமின் பத்தருளீரே 76-10
*பகைஞானி யப்பன் அடித்தொண்டன்தான் ஏசின பேசுமின்
தொண்டர்காள் எம்பிரானையே 44-10

7. அடியாரிடத்து அன்பு

சுரும்பார் விண்டமலர் அவைதூவித் தூங்கு கண்ணீர்,
அரும்பா நிற்குமனத் தடியாரொடும் அன்பு செய்வன் 23-4

149. சுந்தரரும் அடியார் அல்லாதாரும்

1. அவர் பொருட்டு இரங்கல் - அவர்க்குபதேசம்

பனங்காட்டூர் உறையும் எங்கள் பிரானை உணராதார்
உணர்வென்னே 86-2
பனங்காட்டூர் ஐயன் எங்கள் பிரானை அறியாதார் அறிவென்னே 86-7
பனங்காட்டூர்ச் சடையிற் கங்கை தரித்தானைச் சாராதார்
சார்வென்னே 86-1
பனங்காட்டூர் நெஞ்சத் தெங்கள் பிரானை நினையாதார்
நினைவென்னே 86-8

* பகை - வனப்பகை.

பனங்காட்டூர்ப் பரமன் எங்கள் பிரானைப் பரவாதார் பரவென்னே 86-5
பனங்காட்டூர்ப் பெண்ணாணாய பிரானைப் பேசாதார் பேச்சென்னே 86-3
பனங்காட்டூர்ப் பெற்றொன்றேறும் பிரானைப் பேசாதார்
பேச்சென்னே 86-4
பனங்காட்டூர் பதியாகத் திகழ்கின்ற குழைகாதற் கடிமைக்கட்
குழையாதார் குழைவென்னே 86-9
பனங்காட்டூர் பயில்வானுக் கடிமைக்கட் பயிலாதார்
பயில்வென்னே 86-6
வாளாநின்று தொழும் அடியார்கள் வானாளப்பெறும்
வார்த்தையைக் கேட்டும்
நாணாளும் மலரிட்டு வணங்கார் நம்மை ஆள்கின்ற
தன்மையை ஓரார்
கேளா நான்கிடந்தே உழைக்கின்றேன் கிளைக்கெலாம்
துணையா மெனக்கருதி
ஆளாவான் பலர்முன் பழைக்கின்றேன் ஆரூரானை
மறக்கலுமாமே 59-8

2. அடியார் அல்லாதாரோடு சேரேன் என்றது

மீண்டனன் மீண்டனன் வேதவித் தல்லாதவர்கட்கே 45-1

150. சுந்தரரும் சிவனும்

1. 'கோடி' என்னும் தலத்தில் இறைவன் தனியாய் இருப்பதைக் கண்டு வருந்துதல்

கடிதாய்க் கடற்காற்றுவந் தெற்றக் கரைமேல், குடிதான் அயலே
இருந்தாற் குற்றம் ஆமோ!, கொடியேன் கண்கள் கண்டன
கோடிக் குழகீர், அடிகேள் உமக்கார் துணையாக இருந்தீரே 32-1
காடேல் மிக வாலிது காரிகை யஞ்சக், கூடிப் பொந்தில்
ஆந்தைகள் கூகை குழற, வேடித் தொண்டர் சாலவும்
தீயர் சழக்கர், கோடிக் குழகா இடங் கோயில் கொண்டாயே 32-4
கொடியார் பலர் வேடர்கள் வாழுங் கரைமேல், அடிகேள்
அன்ப தாயிடங் கோயில் கொண்டாயே 32·9
கோடிக் குழகா! இரவே துணையா யிருந்தாயெம் பிரானே 32-6
,, இறைவா! தனியே யிருந்தாயெம் பிரானே 32-7
,, எத்தால் தனியே யிருந்தாயெம் பிரானே 32-3
,, எற்றால் தனியே யிருந்தாயெம் பிரானே 32-8
,, என்தான் தனியே யிருந்தாயெம் பிரானே 32-2

திருவனார் பணிந்தேத்தும்......ஒருவனார் 76-1

திருஆனைக்காவில் திருமாலுக்கு அருளியது :—

திருவின் நாயகனாகிய மாலுக் கருள்கள் செய்திடும் தேவர்பிரானை 57-6
நிலந்தரு மாமகள் கோன் நெடுமாற்கருள் செய்த பிரான் 98-5
நெடியோன் நான்முகனும்...முடியால் வந்திறைஞ்ச
முதுகுன்றம் அமர்ந்தவனை 25-6
நெடுமால் போற்றி செய்யும் குறியே 24-9
மால் அயன் ஏத்த நாடொறும் வீழிகொண்டீர் 88-4
மால் மந்திரத்தால் வணங்க 19-9
மாலவன் போற்றி செய்யும் கனவே 27-8
வணங்கித் தொழுவாரவர் மால் பிரமன் 9-5

---

* ராமேசுரத்திற் பூசித்து ராவண ஹத்தி நீங்கப் பெற்றார் இராமமூர்த்தி. கும்பகர்ணனைக் கொன்ற சாயை நீங்கின தலம் திருஆனைக்கா. சீரங்கத்தில் இருந்து நாளும் திருமால் வழிபடுதலம் திருஆனைக்கா.

“வெருவக், கொண்ட ஆக்கையராய்க் கும்பகன்னனும் கொற்ற
மண்டிராவணப் பதகனும் வளைத்திடக் கண்டான்;
சாயையே இவை தம்மையும் தாக்குதும் என்றே,
நாயனார் உருச் சேதுவி னிறீஇ நயந் தெழுந்தான்;
கொன் னிராவணச் சாயையே ஒழிதாக் கும்ப
கன்ன னேர்வரும் கதழுருச் சாயை கையகலாப்
பின்னரே தொடர்ந் தலைசெயப், பிணிப்புறு மனத்தான்.
...நாவல்மா நகரி...எல்லையை அடுத்தான்
...சாயையும் தணந்திடக் கண்டான்.”

—திருஆனைக்காப் புராணம் - நீலவிண்டுவீச்சுரப்படலம் (5)-(8).

“இங்கண் நாடொறும் முழுதும் இருந்து வெண்ணுவல்,
பொங்கு நீழல்வாழ் புனிதரைப் போற்றிட வலித்தேன்.”

—திருமால் விபீடணற்கு உரைத்தது - திருமால் வழிபடு படலம் 22.

வந்துநாளும் வணங்கி மாலொடு நான்முகன்
சிந்தை செய்த மலர்கள் நித்தலும் சேரவே
கந்த நாறும் புறவில் தண் கழுக்குன்றமே 81-8

9. திருமாலின் தலைவர் சிவபிரான்

அருள்மால் நம்பி 63-2
திருமால் பிரமன்...தானவர்க்கும் பெருமான் 53-1
மாற்கும் பிரான்...... 4-9

10. திருமாலாகவும் விளங்குவர் சிவபெருமான்

வளர் சடையினானை...புன் வாயைக் கீண்டுலகம் விழுங்கி
உமிழ்ந்தானை 40-1

11. திருமாலுக்கும் அரியர், பெரியர் சிவபெருமான்

[‘இருவர்க்கரியர்’ என்னும் தலைப்பு 76 பார்க்க.]

அயன் மால் அறிதற் கரிய சோதியன் 97-1
கான ஆனையின் கொம்பினைப் பீழ்ந்த கள்ளப் பிள்ளைக்கும்
காண்பரிதாய, வான நாடனை 57-8
செப்பரிய அயனொடு மால் சிந்தித்தும் தெரிவரிய...திருவினை 51-5
செல்வன் தன் கழலை அரிய திருமாலோடயன்தானும்
அவரறியார் 79-8
செய்யானும் கரிய நிறத்தானும் தெரிவரியான் 23-9
நெடிய மாலுக்கும் நெடியனோ 33-8
நெடியானொடு நான்முகனும் அறிவொண்ணாப் படியான் 32-9
பாரளித் துண்டுகந்தவர்கள் பாவியும் பணிதற் கரியான் 62-9
மண்ணளந்தான்...காண்பரியாய் 3-9
மாலயனும் அறியாச்...சோதி 7-10

12. திருமால் முதலானோர் சூழக் கூடலை யாற்றூரில் வழிபோந்தது

மாலயன் இந்திரனும்...சூழ...கூடலை யாற்றூரில், அறவனிவ்வழி
போந்த அதிசயம் அறியேனே 85-9
மாலொடு நான்முகனும் பாவையொடும் உடனே, கூடலை
யாற்றூரில் வழிபோந்த அதிசயம் அறியேனே 85-2

13. திருமாலின் உதிரத்தைப் பிரம கபாலத்தில் ஏற்றது

என்ற அந்தணன் தலையினை அறுத்து நிறைக்க மால்
உதிரத்தினை யேற்றுத், தோள்மிசைக் களேபரந் தன்னைச்
சுமந்த மாவிரதத்த கங்காளன் 67-10

14. திருமால் முதலானோர் தடுமாற்றத்தைச் சிவபிரான் அறுப்பர்

ஆழியான் மலருறைவான் தம் பரம் அல்லவர் சிந்திப்பவர் தடுமாற்றறுப்பார் 18-8

176. திருவிளையாடற் சரிதங்கள்

1. இரசவாதம் செய்த திருவிளையாடல்

*மின்னனையாள் திருமேனி விளங்கவோர், தன்னமர் பாகமதாகிய சங்கரன், முன்னினையார் புரமூன் றெரியூட்டிய, பொன்னனையான் உறை பூவணமீதோ 11-6

2. தென்னவனாய் உலகாண்ட திருவிளையாடல்

†நெடுமாறன் முடிமேல் தென்னனை 38-8

3. செட்டியாய் வளையல் விற்ற, மாணிக்கம் விற்ற திருவிளையாடல்

‡செட்டி நின்காதலி ஊர்கள் தோறும் அறம்செய, அட்டுமின் சில் பலிக்கென் றகங்கடை நிற்பதே 43-9

4. §பன்றியாய திருவிளையாடல்

$கோலமதாயவன் 97-10

5. ¶விருத்த (குமார) பாலரான திருவிளையாடல்

"விருத்தனைப் பாலனை" 53-3

---

* திருப்பூவணத்திற் பொன்னனையாள் என்னும் உருத்திர கணிகையிடம் சிவபிரான் சென்று ரசவாதம் செய்து சிவனது அழகிய உருவத்தை வார்ப்பித்த திருவிளையாடல் (36 ஆவது திருவிளையாடல்).

† மணஞ்செய்த திருவிளையாடல், சிவபிரான் பாண்டியனாய் அரசாண்டது, (5-ஆவது திருவிளையாடல்.)

‡ வளையல் விற்ற திருவிளையாடல்—32 ஆவது திருவிளையாடல். மாணிக்கம் விற்ற திருவிளையாடல்—17 ஆவது திருவிளையாடல்.

§ பன்றிக் குட்டிகளுக்கு முலைகொடுத்த திருவிளையாடல், 45-ஆவது திருவிளையாடல்.

$ கோலமதாயவன். கோலம் - பன்றி.

¶ விருத்த குமார பாலரான திருவிளையாடல்—23 ஆவது திருவிளையாடல்.

6. வெள்ளை யானையின் சாபம் தீர்த்த திருவிளையாடல்

*கோடு நான்குடைக் குஞ்சரம் குலுங்க நலங்கொள் பாதநின்
றேத்திய பொழுதே, பீடு விண்மிசைப் பெருமையும்
பெற்ற பெற்றி 65-7

7. †வேதத்துக்குப் பொருள் அருளிச்செய்த திருவிளையாடல்

ஒரு நான்மறை நூல் உரை பெருக உரைத்து அன்று
உகந்தருள் செய்த தென்னே... 99-5

177. தீர்த்தங்கள்

1. குமரி 78-6
2. குளியீருளங் குருக்கேத்திரம் கோதாவிரி குமரி
தெளியீர் உளம் 78-6
3. தவஞ்செய்யும் போகரும் யோகரும் புலரிவாய் மூழ்கச்
செல்லுமா காவிரி 74-3

178. தென்றல்

கலயநல்லூர்

கண் கமுகின் பூம்பாளை மதுவாசம் கலந்த, கமழ்
தென்றல் புகுந்துலவு கலயநல்லூர் காணே 16-10

திருவாரூர்

தென்றல் மணங்கமழும் தென்திரு வாரூர் 83-2

திருநாகேச்சரம்

முன்றில் இளங்கமுகின் முதுபாளை மது அளைந்து,
தென்றல் புகுந்துலவும் திருநாகேச் சரத்தானே 99-4

179. தேச சரித்திரம்

1. காஞ்சியிற் பல்லவர் ஆட்சி (சுந்தரர் காலத்தில்)

பாரூர் பல்லவன் ஊர் மதிற் காஞ்சி மாநகர் 21-10

---

* வெள்ளை யானையின் சாபந் தீர்த்த திருவிளையாடல்—2 ஆவது திருவிளையாடல்.

† 16 ஆவது திருவிளையாடல்.

2. பல்லவர்க்குத் திறை

*மண்ணுலகம் காவல்பூண்ட உரிமையாற் பல்லவர்க்குத்
திறைகொடா மன்னவரை மறுக்கம் செய்யும்
பெருமையார் புலியூர் 90-4

3. மூவேந்தர் முன்னிலையில் திருப்பரங்குன்றத்தில் 'கோத்திட்டை' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினது

'அடிகேள் உமக்காட்செய அஞ்சுதும் என்றமரர்
பெருமானை ஆரூரன் அஞ்சி முடியால் உலகாண்ட
மூவேந்தர் முன்னே மொழிந்தாறும் ஓர்நான்கும்
ஒ்ரொன்றினையும் 2-11

180. தேவதைகள்

1. காடுகாள் (மோடி)

கையார் வளைக் காடுகாளோடு முடனாய்...கோடியே
கோயில் கொண்டாயே 32-5

2. காளி

(1) கொதியினால்வரு காளிதன் கோபம் குறைய ஆடிய
கூத்துடையானே 70-4

(2) பொரும்பலம துடையசுரன் தாரகனைப் பொருது
பொன்றுவித்த †பொன்னினை முன் படைத் துகந்த
புனிதன் 16-9

3. மோடி

போகங் கொண்டார் கடற்கோடியின் மோடியை 17-3

181. தேவர் முதலியோர்

1. பொது

1. அண்டர் 16-3, 20-10, 34-8

* இதைப் பற்றிய குறிப்பு விவரத்தை 'நாயன்மார்' என்னும் தலைப்பு 194-ல் '50—தில்லைவாழ் அந்தணர்' என்பதற்குரிய கீழ்க்குறிப்பிற் காண்க.

† 'பொன்னினை', 'பொருளினை'—பாடபேதங்கள். பொன்-காளி. 'பொன்நடி மாது'—சம்பந்தர் 1-127-3. பொருள் - மகனும் முருகவேள். தாரகன் - காளியாற் சங்கரிக்கப்பட்ட ஓர் அசுரன். "தாரகன் துஞ்ச காளியைத்தரும் சிரபுரத்துளான்"—சம்பந்தர் 3-110-7.

2. (1) அமரர்(கள்) 3-3, 4-3, 6-2, 9-10, 16-5, 19-3, 25-10, 38-8, 40-7, 51-3, 8; 55-5, 60-4, 61-1, 62-4, 7; 63-3, 64-1, 68-7, 100-2, 4

(2) மால் விசும்பாளும் அமரர் 63-2

(3) *அமரர்...தேவர் 63-2

3. இமையவர் 6-2, 61-10, 82-2, 97-5

4. (1) இமையோர்(கள்) 10-2, 22-8, 23-7, 25-9, 26-2, 63-9, 70; 93-11

(2) ஏரார் இமையோர் 93-11

5. இயக்கர் 55-6

6. உம்பர் 55-10, 61-2, 62-5, 64-9, 89-4, 97-1

7. உம்பரார் 69-8, 88-1

8. †உம்பரும் வானவரும் 25-2

9. (1) கின்னரர் 55-6

(2) ‡காது பொத்தரைக் கின்னரர் 65-6

10. (1) தேவர்(கள்) 8-1, 35-1, 40-5, 51-8, 52-1, 53-1, 57-8, 10; 63-2, 67-8, 72-4, 73-9, 92-6, 8

(2) அளவிறந்த பல தேவர்கள் 67-4

(3) எழிலார் மிகுதேவர் 100-9

(4) கோடி தேவர்கள் 56-6

(5) சீரூர் தருதேவர் கணங்கள் 9-11

(6) தேவர் கணங்கள் 24-8

(7) §தேவர் வானவர் 35-1

(8) நாட்டகத் தேவர் 62-3

(9) பல தேவர்கள் 67-4

(10) பிற தேவர் 92-8

(11) பெருந்தேவர் 16-6

(12) பேரெண்ணாயிர கோடி தேவர் 48-9

(13) மற்றுத் தேவர் 54-7

11. வஞ்சர்கள் (சிவபிரானை நஞ்சை உண்ணவைத்த படியால்) 75-2

12. (1) வானவர்(கள்) 9-5, 27-2, 35-1, 40-1, 11; 44-6, 49-10, 51-8, 11; 55-6, 58-2, 65-3, 73-1, 84-1, 8

---

* அமரர் வேறு, தேவர் வேறு போலும்.

† உம்பர் வேறு, வானவர் வேறு போலும்.

‡ உபதேச மொழியை - ரகசிய மொழியைக் கவனத்துடன் கேட்பதற்குக் காதை வேற்றொலி விழாத வகைக்கு ஒருவிதமாகக் குவித்து மூடிக்கொள்ளுதல் வழக்கம்.—பெரிய புராணம் (சிவக்கவிமணி) - விருத்தியுரை, ஏயர்கோன் 150—பக்கம் 170, 407—பக்கம் 442 பார்க்க.

§ தேவர் வேறு, வானவர் வேறுபோலும்.

(2) நீணீள் முடி வானவர் 8-9
(3) *மருத வானவர் 50-2
(4) மறைமுதல் வானவர் 85-8
(5) வல்லியல் வானவர் 67-5
(6) வான் (வானவர்) 100-1
(7) வானநன் னாடர் 100-6
(8) வானநாடர் 6-4
(9) †வானவர்... அமரர் 51-8

13. வானுலகத்தவர் மெலிவில்வானுலகத்தவர் 67-11
14. வானைக்காவல் கொண்டு நின்றார் 47-7
15. வானோர் 22-5, 23-10, 41-3, 47-2, 58-8, 59-4, 64-7, 69-2, 97-10
16. விஞ்சை வானவர் 68-4
17. விண் (விண்ணோர்) 69-3
18. விண்ணவர் 27-7, 40-6, 45-5, 61-7, 73-7, 81-6, 85-5, 87-8
19. விண்ணுலகத்தவர்கள் 100-5
20. விண்ணுளார் 62-2
21. விண்ணோர் 53-2

2. சிறப்பு

‡ அங்கம் மொழி அன்னாரவர் (ராகு கேதுக்கள்)...... 80-3
அங்கி (அக்கினி) (தீ) 51-6, 55-6
(ஆதி)சேடன் 42-8
இந்திரன் தனித்தலைப்பு 16 பார்க்க.
உருத்திர(ர்) 73-1
§கலி 16-4, 67-11
$கொம்பைப் பிடித்தொருக் காலர்கள் 78-3
சூரியன் தனித்தலைப்பு 158 'ஞாயிறு' பார்க்க.
யமன் - தலைப்பு 52-ம் பார்க்க. 55-6
வசுக்கள் 55-6

---

* மருதப் பண் பாடி வழிபடும் வானவர், மருதநிலத்துப் பெருமையாளர். மருதநிலத்துக்கு உரிய இந்திரன், மருத்துக்கள் என்னும் தேவசாதியர்.—பெரியபுராண விருத்தி உரை, கழறிற்றறிவார் 118.

† வான்வர் வேறு, அமரர் வேறுபோலும்.

‡ தலைப்பு 224 கீழ்க்குறிப்பைப் பார்க்க.

§ கலியுகத்துக்கு அதிதேவதை.

$ ஒருக் காலர் - தேவசாதியர்களுள் ஒருவகையினர்.—(பெரிய புராணம் விரிவுரை, ஏயர்கோன் 198, பக்கம் 22.)

வருணன் (ர்) 55-6
அலைகடலா ரையன் 100-7
ஆழிகடல் அரையா 100-10
வாயு (வளி) 55-6

182. தேவாரம் ஓதும் முறை, கற்கும் முறை இவை சம்பந்தமான உபதேசம்

[பதிக எண் மாத்திரம் குறிப்பிட்ட இடங்களில், பாடல் எண் பதிகத்தின் ஈற்றுப் பாடலின் எண்]

1. அழகாய் உரைக்க
அருந்தமிழ் ஐந்திேனா டைந்து அழகாய் உரைப்பார்கள் 9-11

2. இசையுடன் பாட
ஆரூரன் சந்தம் இசையொடும் வல்லார் தாம்புகழ் எய்துவர்தாமே 73-11
ஆரூரன் பன்னும் இசைக்கிளவி பத்திவை பாடவல்லார் 84-10
ஊரன் சந்தம் இசையொடும் வல்லார் தாம்புகழ் எய்துவர்தாமே 73-11
வன்றொண்டன் வாய்மொழி பாடல்பத்து...இன்னிசை பாடுவார் 36-11

3. உரைக்க, ஏத்த, ஓத, கற்க கேட்க, சொல்ல, பாட 7, 9, 13, 18, 21-28, 32, 34, 40, 43, 46, 48, 53, 57, 59, 71, 75, 78, 79, 84, 86, 87, 88, 89, 92-94, 99

4. உள்குளிர்ந் தேத்த
நாவலாரூரன் உரைதரு மாலையோர் அஞ்சினோ டஞ்சும் உள்குளிர்ந் தேத்த வல்லார்கள் 69-11

5. உள்ளத்தால் உகந்து ஏத்த
ஊரன்...ஒளிதிகழ் மாலை உள்ளத்தால் உகந்தேத்த வல்லார்கள் 60-10
வன்றொண்டன் ஒலிகொள் இன்னிசைச் செந்தமிழ் பத்தும் உள்ளத்தால் உகந்தேத்த வல்லார் 67-11

6. உள்ளுருகிச் செப்ப
வன்றொண்டன் சிறந்த மாலைகள் அஞ்சினோ டஞ்சும் சிந்தை உள் உருகிச் செப்ப வல்லார் 68-10

7. உன்னி இசையுடன் பாட

வன்றொண்டன் வாய்மொழி பாடல் பத்து உன்னி
இன்னிசை பாடுவார் 36-11

8. ஊர் ஊராகச் சென்று பாட

"அடியன் சொல் அடிநாய் சொல் *ஊரூரன் உரை செய்வார்
உயர்வானத் துயர்வாரே" 86-10
†பார் ஊரும் பரவித் தொழ வல்லார் 56-11

9. கற்றுப் பாட

ஒற்றியூர்மேல் ஊரன் உரைத்த கற்றுப் பாடக் கழியும்
வினையே 91-10

10. காதலித்துக் கற்க, கேட்க

ஆரூரன்...தமிழ் காதலித்துங் கற்றுங் கேட்பவர் 17-11

11. குடியாகப் பாடி நின்றாட

நாவலவூரன் உரைத்தன...குடியாகப் பாடிநின் றாட
வல்லார் 50-10

12. கேட்டுகக்க

வன்றொண்டன் செஞ்சொற் கேட்டுகப்பார் 87-10

13. கையால் தொழுது நாவாற் பாட

ஆரூரன் அருத்தியார் வேள்விக் குடியுளார் அடிகளைச்
சேர்த்திய பாடல் தங்கையால் தொழுது தம்
நாவின் மேற் கொள்வார் 74-10

14. சிந்தித்து ஏத்த

ஊரன்...பாடல் சிந்தியா ஏத்த வல்லார் 8-10

15. செம்மாந்திருந்து பாட

ஊரன்...தமிழ்மாலை செம்மாந்திருந்து திருவாய் திறப்பார் 47-10

16. சொல்லித் தொழுவாரைத் தொழு

ஊரன் வனப்பினால் சொல்லல் சொல்லித் தொழுவாரைத்
தொழுமின்களே 81-10

---

* "ஞானசம்பந்தன்...சொன்மாலைகள் பத்தும் ஊரூர் நினைவார் உயர்வாரே"—சம்பந்தர் - பனையூர். இதனுடன் ஒப்பிடத்தக்கது.

† பாரில் உள்ள - ஊர்தோறும்.

17. சொல்லியவே சொல்லி ஏத்துதல்
நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக் கரசரும் பாடிய
நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி
ஏத்துகப்பானை 67-5

18. தமிழ் மாலைகள் கொண்டடி வீழ
தமிழ் மாலைகள் கொண்டடி வீழ வல்லார் 4-10

19. தெரித்த வண்ணம் மொழிய
ஆரூரன்...*கேட்ட மாலை பத்தும் தெரித்த வண்ணம்
மொழிய வல்லவர் செம்மையாளர் 6-10

20. நித்தம் பாடுக
பத்தும் இவை பத்திசெய்து நித்தம் பாட வல்லார் 16-11

21. படித்துக் கற்க
படியா இவை கற்றுவல்ல அடியார் 2-11

22. பத்திசெய்து நித்தம் பாடுக
ஆரூரன்...பத்தும் இவை பத்திசெய்து நித்தம் பாட வல்லார் 16-11

23. பத்தும் தொழுது மலர் எடுத்த கையினராக
பாடிய பத்தும் தொழுமலர் எடுத்தகை அடியவர் 58-10

24. பத்தும் பாட 2, 3, 5, 6, 9, 10, 19, 20, 32, 34, 36, 42, 49, 52, 54, 55, 58, 61, 62, 64, 67, 68, 69, 70, 80, 82, 83, 84, 85, 96, 98

25. பரவித் தொழ
இம்மாலை பாரூரும் பரவித் தொழ வல்லார் 56-11

26. பாடியாட
ஆலங்காடன்தன் அடிமைத் திறமே அன்பாகி, ஊரன்
ஒண்டமிழ்கள் பத்தும் பாடி ஆடுவார் 52-10
குடியாகப் பாடிநின் றாட வல்லார் 50-10

27. பாடுமின்
ஆரூரன் பன்னலங்கல் நன்மாலை பாடுமின் பத்தருளீரே 76-10
ஊரன் சொன்ன பாடுமின் பத்தரே 37-11
திருவாரூரன் உரைத்த பாடலாகிலும் பாடுமின் தொண்டீர் 15-10

28. பாணியால் ஏத்துக
வன்றொண்டன் சொல் பாணியால் இவை ஏத்துவார் 12-11

---

* கேட்ட - கேட்பித்த.

29. பெருங்குலத்தவரொடு (அடியாரொடு) பிதற்ற
வன்றொண்டன் சொல் பெருங்குலத்தவரொடு
பிதற்றுதல் பெருமையே 72-11

30. பேசுமின்
தொண்டன்தான் ஏசின பேசுமின் தொண்டர்காள்
எம்பிரானையே 44-10

31. பொய்யொன்று மின்றிப் புலம்ப
ஊரன் சொல் பொய்யொன்றும் இன்றிப் புலம்புவார் 45-11

32. மடியாது கற்க
ஊரன் உரைத்தன மடியாது கற்று இவை ஏத்த வல்லார் 50-10

33. மதித்து உரைக்க
ஊரன் சொன்ன மாலை மதித்துரைப்பார் 97-10

34. வஞ்சியாது உரைசெய்ய
ஊரன்...நினைத்தன வஞ்சியா துரைசெய்ய வல்லார் 35-10

35. விரும்ப
ஊரன் உரைத்தன பத்திவை விரும்புவார் 96-10

183. தேவாரம் ஓதுவதால், கேட்பதால் வரும் பயன், பேறு; ஓதுதலின் சிறப்பு

1.

1. அமரலோகத்திருப்பர்
ஆரூரன் அடிநாய் உரைவல்லார் அமரலோகத் திருப்பவர்
தாமே 59-11

2. அமருலகாள்வர்
ஆரூரன்...அடிகளைச் சேர்த்திய பாடல் தங் கையால்
தொழுது தம் நாவின்மேற் கொள்வார் தவநெறி
சென்றமருலகம் ஆள்பவரே 74-10
தண்மயத்தால் அணிநாவலா ரூரன் சொன்ன அருந்
தமிழ்கள் இவை வல்லார் அமருல காள்பவரே 46-11

3. அல்லல் அறும்
ஆரூரன் நாவில் நயந்துரைசெய் பண்பயிலும் பத்துமிவை
பத்திசெய்து நித்தம் பாடவல்லார் அல்லலொடு
பாவமிலர் தாமே 16-11

சீபர்ப்பத மலையை அல்லல் அவை நீரச் சொன்ன தமிழ்
மாலைகள் வல்லார், ஒல்லை செல உயர் வானகம்
ஆண்டங் கிருப்பாரே 79-10
நினைந்தேத்திய பத்தும் வல்லார் அல்லல் களைந்துலகின்
அண்டர் வானுல காள்பவரே 20-10

4. அழகியர்

வன்றொண்டன் செஞ்சொற் கேட்டுகப்பார் அவரே
அழகியரே 87-10

5. இடர் இல்லை

ஆரூரன் உரைத்த தமிழ் சொல்லுதல் கேட்டல் வல்லார்
அவர்க்கும் தமர்க்கும் கிளைக்கும் எல்லியும் நண்பகலும்
இடர் கூருதல் இல்லையன்றே 22-10
ஊரன் பிதற்றிவை...தத்துவ ஞானிகள் ஆயினர்
தடுமாற்றிலார், எத்தவத்தோர்களும் எத்துவார்க்கு
இடர் இல்லையே 43-11
சிந்தையிற் சிவதொண்டன் ஊரன் உரைத்தன பத்துங்
கொண்டெந்தம் அடிகளை எத்துவார் இடர் ஒன்றும்
தாமிலரே 49-10

6. இமையோர் உலகு

ஆரூரன் சொல் இவை வல்லவர்கள் ஏரார் இமையோர்
உலகெய்துவரே 93-11

7. இறப்பு பிறப்பு இல்லை

அணுக்க வன்றொண்டன் ஆர்வத்தால் உரைத்த
தண்டமிழ் மலர் பத்தும் வல்லார்கள் சாதலும்
பிறப்பும் அறுப்பாரே 70-10
மறந்தான் மற்றும் நினைப்பதே தென்று வனப்பகை
யப்பன்...வன்றொண்டன் சிறந்த மாலைகள்
அஞ்சினோ டஞ்சும் சிந்தை உள்ளுருகிச் செப்ப
வல்லார்க்கு இறந்து போக்கில்லை வரவில்லை
யாகி இன்ப வெள்ளத்துள் இருப்பார்கள் இனிதே 68-10
வன்றொண்டன் வண்டமிழ் மாலை வல்லார்போய் ஏழுமா
பிறப்பற்று எம்மையும் ஆளுடையாரே 75-10

8. இன்பவெள்ளத்துள் இருப்பர்

ஊரன்...சிறந்த மாலைகள் அஞ்சினோ டஞ்சும் சிந்தை
யுள்ளுருகிச் செப்ப வல்லார்க்கு இறந்து போக்கில்லை
வரவில்லை யாகி இன்பவெள்ளத்துள் இருப்பார்கள்
இனிதே 68-10

ஊரன் சொன்ன மாலை மதித்துரைப்பார் சால நல்
லின்பம் எய்தித் தவலோகத் திருப்பவரே 97-10

9. உலகவர்க்கு மேலார்

ஆரூரன் அடித்தொண்டன் அடியன் சொல் அகலிடத்தே
ஊரூரன் இவைவல்லார் உலகர்க்கு மேலாரே 51-12

10. எம் தலைமேற் பயில்வார் என்றது

வன்றொண்டன் பன்னுதமிழ் நூல்மாலை வல்லார்
அவரெந் தலைமேற் பயில்வாரே 41-10

11. எம்மையும் ஆளுடையார் என்றது

வன்றொண்டன் வண்டமிழ் மாலை வல்லார் போய்
ஏழுமா பிறப்பற்று எம்மையும் ஆளுடையாரே 75-10

12. கழல் சேர்வர்

ஊரன் சொல் பொய்யொன்று மின்றிப் புலம்புவார்
பொற்கழல் சேர்வரே 45-11

13. குற்றம் இல்லை

நாவலஆரன் உரைத்தன மடியாது கற்றிவை ஏத்தவல்லார்
வினை மாய்ந்து போய்க் குடியாகப், பாடிநின்
றாடவல்லார்க் கில்லை குற்றமே 50-10

14. சிவகதி

வன்றொண்டன் ...நவின்ற பத்திவை விளம்பிய மாந்தர்
காடரங்கென நடம் நவின்றான்பாற் கதியும்
எய்துவர் பதியவர்க் கதுவே 62-10

15. சிவலோகம் எய்துவர், சிவலோகப் பேறு; சிவலோகத்திருப்பது

ஆரூரன் அருந்தமிழ் ஐந்திரண்டைந் தழகால் உரைப்
பார்களும் கேட்பவரும், சீரூர்தரு தேவர் கணங்க
ளொடும் இணங்கிச் சிவலோகமெய்துவரே 9-11

ஆரூரன் உரைத்தன பத்திவை வல்லார் சீரார்
சிவலோகத் திருப்பவர் தாமே 32-10

ஆரூரன் சொன்ன இறையார் பாடல் வல்லார்க்
கெளிதாம் சிவலோகமதே 25-10

ஆரூரன் சொன்ன சீரூர் பாடல் வல்லார் சிவலோகம்
சேர்வாரே 21-10

ஆரூரன் நவின்ற பத்திவை விளம்பிய மாந்தர் நடம்
நவின்றான்பாற் கதியும் எய்துவர் பதியவர்க்கதுவே 62-10

ஊரன் தமிழ்மாலை செம்மாந்திருந்து திருவாய்திறப்பார்
சிவலோகத்தாரே 47-10

வன்றொண்டன் சொன்ன செஞ்சொற் றமிழ்மாலைகள்
பத்தும் வல்லார் சிவலோகந் திருப்பது
திண்ணமன்றே 42-10

16. சிவனடி கூடுவர், நண்ணுவர்; சிவனொடு கூடுவர்

ஆரூரன் உரைத்த...தமிழ் பத்தும் வல்லார் வினைபோய்ப்
பாரும் விசும்பும் தொழப் பரமன்னடி கூடுவரே 19-11
ஊரன் ஒளிதிகழ் மாலை உள்ளத்தால் உகந்தேத்த
வல்லார்கள், நரைப்பு மூப்பொடு நடலையும் இன்றி
நாதன் சேவடி நண்ணுவர் தாமே 60-10
ஊரன்சொல் பொய்யொன்று மின்றிப் புலம்புவார்
பொற்கழல் சேர்வரே 45-11
ஊரன் பாடிய பாடல் பத்திவை வல்லவர் அறவனூர்
அடிசென்று சேர்வதற் கியாதும் ஐயுற வில்லையே 34-11
வன்றொண்டன் நற்றமிழ் பாதம் ஓதவல்லார் பரனோடு
கூடுவரே 88-10
வன்றொண்டன் வாய்மொழி பாடல்பத் தன்னின்
இன்னிசை பாடுவார் உமைகேள்வன் சேவடி
சேர்வரே 36-11

17. சிவனது பாதம் பணிவார்

ஊரன் பாடல்வல்லார் பாதம் பணிவாரே 7-11

18. சிவனுக்கு அன்பர் ஆவார்

ஆரூரன் அடிமைகேட் டுவப்பார் ஆரூரில் அம்மானுக்
கன்பராவாரே 39-11

19. சிவனை நணுகுவர்

ஊரன் அஞ்சிச், செஞ்சொலால் நயந்த பாடல் சிந்தியா
ஏத்த வல்லார், நஞ்சுலாம் கண்டத் தெங்கள் நாதனை
நணுகுவாரே 8-10

20. சிவனொடு கூடுவர்

வீழிகொண்டீர்...அடியேற்கும் அருளுகென்று நாவலூரன்
...நற்றமிழ் பாதம் ஓதவல்லார் பரனோடு கூடுவரே 88-10

21. தடுமாற்றம் இலர்

ஊரன் பிதற்றிவை தத்துவ ஞானிகள் ஆயினர்
தடுமாற்றிலார் 43-11
நம்பியூரன் சொன்ன, சந்தம்மிகு தண்டமிழ் மாலைகள்
கொண்டடி வீழ வல்லார் தடுமாற்றிலரே 4-10

22. தவநெறி பெறுவர்

ஊரன் உரைத்தன வல்லார் மெய்யே பெறுவார்கள்
தவநெறி தானே 13-11

23. தவலோகத் திருப்பர்

ஊரன் சொன்ன மாலை மதித் துரைப்பார் மண் மறந்து
வானோர் உலகில் சாலநல் லின்பம் எய்தித்
தவலோகத் திருப்பவரே 97-10

24. திருவடி சேர்வர்

ஊரன் பாடிய பாடல் பத்திவை வல்லவர், அறவனார்
அடிசென்று சேர்வதற் கியாதும் ஐயுறவில்லையே 34-11

25. துயர் இலர்

ஆரூரன் தமிழ்மாலை பத்தறிவார் துயர் இலரே 82-10

26. துன்பம் (இடும்பை) இல்லை

ஆரூரன் கருதிய சீரேறு பாடல்கள் செப்பவல்லார்க்
கில்லை துன்பமே 92-10
ஊரன் சொல்லிவை சொல்லுவார்க் கில்லை துன்பமே 48-10
ஊரன் சொற்றான் இவை கற்றார் துன்பிலரே 94-10
சடையன்தன் காதலன் பாடிய பத்தும் தொழுமலர்
எடுத்தகை அடியவர் தம்மைத் துன்பமும்
இடும்பையும் சூழகிலாவே 58-10

27. தேவர்கள் தொழுவர்

ஆரூரன் உரைத்த தமிழ் பத்தும் வல்லார்...விசும்பும்
தொழப் பரமன்னடி கூடுவரே 19-11

28. நரை, திரை, மூப்பு, நடலை, இல்லாமை

நாவலாரூரன், உரைதரு மாலையோர் அஞ்சினோ டஞ்சும்
உள்குளிர்ந் தேத்த வல்லார்கள், நரை திரை மூப்பு
நடலையு மின்றி நண்ணுவார் விண்ணவர்க் கரசே 69-11
ஊரன் ஒளிதிகழ் மாலை உள்ளத்தால் உகந்தேத்த
வல்லார்கள் நரைப்பு, மூப்பொடு, நடலையும்
இன்றி நாதன் சேவடி நண்ணுவர் தாமே 60-10

29. நன்னெறி உலகு எய்துவர்

ஆரூரன் நற்றமிழ் இவை ஈரைந்தும் வல்லார் நன்னெறி
உலகெய்துவர் தாமே 61-11

30. நிலம் பெறுவர்

ஆரூரன் தமிழ் மாலைகள் பாடும் அடித்தொண்டர்
நீரூர்தரு நிலனோடுயர் புகழாகுவர் தாமே 71-10

31. பத்தர்கட்கு உரை

ஆரூரன்...உளங்குளிர் தமிழ்மாலை பத்தர்கட்கு
உரையாமே (உரைக்கத் தக்க பொருள்) 29-10

32. பரகதிப் பயன்
ஊரன் உரைத்த பாடலாம் தமிழ் பத்திவை வல்லார்
முத்தியாவது பரகதிப் பயனே 64-10

33. பரகதி பெறுதல்
ஊரன் உரைத்த பாடல் பத்திவை வல்லவர் தாம்
போய்ப் பரகதி திண்ணம் நண்ணுவர் தாமே 54-10

34. பரமன் அடியே பணிவார்
ஊரன் ஒண்டமிழ்கள் பத்தும் பாடி யாடுவார் பரமன்
அடியே பணிவாரே 52-10
ஊரன் பாடல் வல்லார் பாதம் பணிவாரே 7-11

35. பரலோகம் கூடும்; பரலோகத் திருப்பர்
ஆரூரன் ஆட்படுமாறு சொல்லிப் பாடவல்லார்
பரலோகத் திருப்பது பண்டமன்றே 18-10
ஆரூரன் உரைத்த தமிழ் பாடோர் ஏத்த வல்லார்
பரலோகத் திருப்பாரே 24-10, 28-10
ஊரன் உரைசெய்த பாவின் தமிழ் வல்லார்
பரலோகத் திருப்பாரே 78-10
திருவாரூரன் பாடிய பத்தும் வல்லார் புகுவார்
பரலோகத்துளே 98-11
வன்றொண்டன் சொல் பாணியால் இவை ஏத்துவார் சேர்
பரலோகமே 12-11

36. பரனொடு கூடுவர்
நாவலூரன்...நற்றமிழ் பாதம் ஓதவல்லார் பரனோடு
கூடுவரே 88-10

37. பாவம் அறும், பறையும்
ஆரூரன் சொன்ன பாவணத் தமிழ் பத்தும் வல்லார்
பறையும் தாம்செய்த பாவம் தானே 5-10
ஆரூரன் நாவின் நயந்துரைசெய் பண் பயிலும்
பத்துமிவை பத்திசெய்து நித்தம் பாடவல்லார்
அல்லலொடு பாவம் இலர் தாமே 16-11
ஊரன் உரைத்த சொன் மாலைகள் பத்திவை பாரில்
உரைப்பவர் பாவம் அறுப்பரே 11-10
சிங்கடி தந்தை பயந்த பலங்கிளர் தமிழ்பாட வல்லார்மேற்
பறையுமாம் செய்த பாவங்கள் தானே 57-12
திருவாரூரன் உரைத்த பாடலாகிலும் பாடுமின்
தொண்டர் பாட நும் பாவம் பற்றறுமே 15-10
நாவலாரூரன் நம்பி சொன்ன நற்றமிழ்கள் பாடும்
அடியார் கேட்பார் மேல் பாவமான பறையுமே 53-10

38. **பிழைப்பு**

ஆரூரன் .. செந்தமிழ்கள் செப்புவார்...பேரா
விண்ணுலகம் பெறுவார் பிழைப்பொன்றிலரே 26-10

39. **பிறப்பறும்**

வன்றொண்டன் ஆர்வத்தால் உரைத்த தண்டமிழ் மலர்
பத்தும் வல்லார்கள்...(சாதலும்) பிறப்பும் அறுப்பாரே 70-10
வன்றொண்டன் வண்டமிழ் மாலை வல்லார் போய் எழுமை
பிறப்பற்று எம்மையும் ஆளுடையாரே 75-10

40. **புகழ் பெறுவர்**

ஆரூரன் சந்தம் இசையொடும் வல்லார் தாம்புகழ்
எய்துவர் தாமே 73-11
ஆரூரன தமிழ்மாலைகள் பாடும் அடித்தொண்டர், நீரூர்தரு
நிலனோடுயர் புகழாகுவர் தாமே 71-10

41. **புண்ணியர்**

ஊரன் பன்னெடுஞ் சொன்மலர் கொண் டிட்டன பத்தும்
வல்லார், பொன்னுடை விண்ணுலகம் நண்ணுவர்
புண்ணியரே 83-10

42. **பெருமை (தரும்)**

வன்றொண்டன் சொல் பெருங்குலத்தவரொடு பிதற்றுதல்
பெருமையே 72-11

43. **மண்டல நாயகராய் வாழ்வர்**

ஆரூரன் பன்னும் இசைக்கிளவி பத்திவை பாடவல்லார்
பத்தர் குணத்தினராய் எத்திசையும் புகழ, மன்னி
இருப்பவர்கள் வானின் இழிந்திடினும், மண்டல
நாயகராய் வாழ்வது நிச்சயமே 84-10

44. **மண் மறப்பர்**

ஊரன் சொன்ன மாலை மதித்துரைப்பார் மண் மறந்து
வானோர் உலகில், சால நல் இன்பம் எய்தித்
தவலோகத் திருப்பவரே 97-10

45. **முத்தி பெறுவார்**

ஆரூரன் ஆதரித் தழைத்திட்ட இம்மாலை, பாரூரும் பாவித்
தொழவல்லார் பத்தராய் முத்தி தாம் பெறுவாரே 56-11

46. **முத்தியாவது**

ஊரன் உரைத்த பாடலாந் தமிழ் பத்திவை வல்லார்
முத்தியாவது பரகதிப் பயனே 64-10

47. மூவுலகாள்வர்
சிங்கடி யப்பன் உரை விலையார் மாலை வல்லார் வியன்
மூவுலகாள்பவரே 27-10

48. மேலார்
ஆரூரன் அடித்தொண்டன் அடியன் சொல் அகலிடத்தே
ஊரூரன் இவைவல்லார் உலகவர்க்கு மேலாரே 51-12
ஊரன் உரைத்தன பத்திவை விரும்புவார் மேலையார்
மேலையார் மேலாரே 96-10

49. வானகம் ஆள்வர்
சீபர்ப்பத மலையை அல்லல் அவைதீரச் சொன தமிழ்
மாலைகள் வல்லார், ஒல்லைச்செல உயர் வானகம்
ஆண்டங் கிருப்பாரே 79-10

50. வானத் துயர்வார்
ஆரூரன்...அடிநாய்சொல் ஊரூரன் உரைசெய்வார்
உயர் வானத் துயர்வாரே 86-10

51. வானவர்க்கும் தலைவராவர்
ஆரூரன்...தமிழ்கள் வல்லார், வரையினுர் வகை ஞாலம்
ஆண்டவர்க்கும் தாம்போய், வானவர்க்கும்
தலைவராய் நிற்பரவர் தாமே 40-11

52. வானுலகாட்சி
ஊரன்...புறம்பயத்தப்பனைத் தமிழ்ச்சீரினுல், நெஞ்சினுலே,
புறம்பயம் தொழுதுய்தும் என்று நினைத்தன வஞ்சியா
துரைசெய்ய வல்லவர் வல்ல வானுல காள்வரே 35-10
நினைந்தேத்திய பத்தும் வல்லார், அல்லல் களைந்து
உலகின் அண்ட வானுல காள்பவரே 20-10

53. வானுளார் ஆவர்
ஆரூரன்...கேட்டமாலை பத்தும் தெரித்தவண்ணம்
மொழியவல்லார் செம்மையாளர் வானுளாரே 6-10

54. வானோரின் உலகை ஆளுதல்
ஆரூரன் உரைத்த தமிழ் வழுவா மாலை வல்லார் வானோர்
உலகாள்பவரே 23-10

55. வானோர் உலகில் இன்டம் பெறுதல்
ஊரன் சொன்ன மாலை மதித்துரைப்பார் மண்மறந்து
வானோர் உலகில் சால நல் லின்பம் எய்தித்
தவலோகத் திருப்பவரே 97-10

56. விண்ணுலகம் பெறுதல்

ஆரூரன்சொல் இவை வல்லவர்கள், ஏரார் இமையோர்
உலகெய்துவரே 93-11

ஆரூரன் சொன்ன, சீரூர் செந்தமிழ்கள் செப்புவார்
வினையாயினபோய்ப், போய் விண்ணுலகம் பெறுவார்
பிழைப்பொன்றிலரே 26-10

ஊரன் பன்னெடுஞ் சொல்மலர் கொண் டிட்டன பத்தும்
வல்லார், பொன்னுடை விண்ணுலகம் நண்ணுவர்
புண்ணியரே 83-10

வன்றொண்டன் ஒலிகொள் இன்னிசைச் செந்தமிழ்ப்
பத்தும் உள்ளத்தால் உகந்தேத்த வல்லார் போய்,
மெலிவில் வானுலகத்தவர் ஏத்த விரும்பி விண்ணுல
கெய்துவர் தாமே 67-11

57. விண்முழுதாள்வர்: விண்ணவர்க்கரசு ஆவர்

ஆரூரன் உரைத்தன நற்றமிழின் மிகுமாலையோர்
பத்திவை கற்றுவல்லார்...யானை மன்னவராகி
ஓர் விண்முழுதாள்பவரே 3-10

நாவலாரூரன், உரைதரு மாலையோர் அஞ்சினோ டஞ்சும்
உள்குளிர்ந் தேத்தவல்லார்கள், நரை திரை மூப்பும்
நடலையும் இன்றி நண்ணுவர் விண்ணவர்க்கரசே 69-11

படியா இவை கற்றுவல்ல அடியார் பரங்குன்ற மேய
பரமன் அடிக்கே, குடியாகி...வானோர்க்கும் ஓர்
கோவுமாகிக் குலவேந்தராய் விண்முழுதாள்பவரே 2-11

58. வினை அடையா

ஆரூரன் தமிழ்வல்லார்க் கடையா வல் வினைதானே 89-11

59. வினை அறும், வினை கழியும், போம், மாயும்

ஆரூரன் உரைத்த தமிழ் காதலித்தும், கற்றும் கேட்பவர்தம்
வினைக்கட்டறுமே 17-11

ஆரூரன் உரைத்த தமிழ்பத்தும் வல்லார் வினைபோய்ப்
பரமனடி கூடுவரே 19-11

ஆரூரன் சொன்ன சீரூர் செந்தமிழ்கள் செப்புவார்
வினையாயின போம் 26-10

(கூடலையாற்றூரில்) நாவலஆரூரன் சொல், பாடல்கள்
பத்தும் வல்லார் தம்வினை பற்றறுமே 85-10

நாவலஆரூரன் உரைத்தன மடியாது கற்றிவை ஏத்த
வல்லார் வினைமாய்ந்து போய்க், குடியாகப் பாடிநின்
றாடவல்லார்க் கில்லை குற்றமே 50-10

நாவலாரூரன் சொன்ன பங்கமில் பாடல்வல்லா ரவர்தம்
வினை பற்றறுமே 99-11

60. வினை இலர்

ஊரன்...உள்ளத்தால் உகந்தன்பினாற் சொன்ன
அருந்தமிழ் ஐந்தோ டைந்தும் வல்லவர் அருவினை
யிலரே 55-10

61. வினை கழியும்

ஒற்றியூர் மேல் ஊரன் உரைத்த கற்றுப் பாடக்
கழியும் வினையே 91-10

62. வினை கூடா

ஊரன்...உரைசெய்த குறையாத் தமிழ் பத்துஞ்
சொலக் கூடா கொடுவினையே 80-10

குறிப்பு : பயன் சொலப்படாத பதிகங்கள் 1, 10, 11, 14, 30, 31, 33, 37, 38, 44, 63, 65, 66, 76, 77, 81, 90, 95, 100.

2. தேவாரம் உரைப்பவரோடு கேட்பவர்களும் பயன் பெறுவர் என்பதும், அது சம்பந்தமான உபதேசமும்

அழகால் உரைப்பார்களும் கேட்பவரும்...சிவலோகம தெய்துவரே 9-11
ஆரூரன் உரைத்த தமிழ் காதலித்தும் கற்றும் கேட்பவர்தம்
வினைக்கட்டறுமே 17-11
ஆரூரன் உரைத்த தமிழ் சொல்லுதல் கேட்டல் வல்லார்
அவர்க்கும் நமர்க்கும் கிளைக்கும் எல்லியும்
நண்பகலும் இடர்கூருதல் இல்லையன்றே 22-10
கழுக்குன்றினை...ஊரன் வனப்பினால் சொல்லல்
சொல்லித் தொழுவாரைத் தொழுமின்களே 81-10
நாவலாரூரன் நம்பி சொன்ன நற்றமிழ்கள் பாடும்
அடியார், கேட்பார்மேற் பாவம்ஆன பறையுமே 53-10
வன்றொண்டன் செஞ்சொற் கேட்டுகப்பார் அவரே அழகியரே 87-10

184. தேவாரம்—மனப்பாடத்துக்கு உரிய பதிகங்களிற் சில, பாடல்களிற் சில

1. பதிகங்கள்

1. பதிக எண் 68-திருநள்ளாற்றுப் பதிகம்: 'செம்பொன் மேனி' எனத் துவக்கும் பதிகம் பெரும்பயன் கூறியிருப்பதால் மனப்பாடம் செய்யவேண்டும்.
2. பதிக எண் 70-திருஆவடுதுறைப் பதிகம்: 'கங்கைவார் சடையாய்' எனத் துவக்கும் பதிகம் இறைவனைப்பற்றிய விளி நிரம்பிய பதிகமாயிருப்பதால் மனப்பாடம் செய்யவேண்டும்.

பிற பதிகங்கள்

3. பதிக எண் 22 'முன்னவன்'
 ,, 39 திருத்தொண்டத் தொகை
 ,, 48 நமச்சிவாயப் பதிகம்
 ,, 59 'பொன்னுமெய்ப் பொருளும்'
 ,, 84 'தொண்டரடித் தொழலும்'

பாடல்கள்

3-1 கல்வாய்
13-1 மலையார்
16-1 குரும்பை
16-9 பொரும்பலம்
19-8 எட்டுகந்தார்
21-1 நொந்தா
41-5 மேலை விதியே
42-5 துளைவெண்
62-8 நாளும்
64-1 நீறு தாங்கிய
78-1 வாழ்வாவது

185. தேன் (மது)

1

கரடியும், மானும் மரையினமும் மயில் மற்றும் பல எல்லாம்
 தேன் உண் பொழில் சோலைமிகு சீபர்ப்பத மலையே 79-9
கரியின் இனமோடும் பிடி, தேனுண்டவை களித்துத், திரிதந்தவை
 திகழ்வாற் பொலி சீபர்ப்பத மலையே 79-8
கரும்பாடத் தேன் புடையெலாம் மணநாறு சோலைப் புறம்பயம் 35-6
கழை தழுவித் தேன் தொடுக்கும் கழனி சூழ்பழனக்,
 கானாட்டு முள்ளூர் 40-8
குரக்கினம் குதிகொள்ளத் தேனுக 87-9
செறிந்த பூம்பொழில் தேன் துளி வீசும் திருமிழலை 88-6
தெளி நீரோடு, ஆனைஞ்சின் தேனை ஆட்டுகந்தீர் 88-3
பங்கய மாமலர் மேல் மதுவுண்டு பண் வண்டறைய 99-9
பங்கய மாமலர்மேல் மதுவுண்டு வண்தேன் முரல 99-7
பானை படு பைங்கமுகின் சூழல் இளந் தெங்கின், படுமதஞ்செய்
 கொழுந்,தேறல் வாய்மடுத்துப் பருகிக், கானை வண்டு பாட 40-4
பிடி செவிதாழ்த்திட அதற்குமிக இரங்கி...வேடர்கள் இலையாற்
 க(ல்)லை கோலித் தேனைப் பிழிந்தினி தூட்டிடும்
 சீபர்ப்பத மலையே 79-5
பொழிலின் தேன் ஆதரித்து இசை வண்டினம் மிழற்றும்
 திருச்சுழியல் 82-1
மதுவம் ஊளிக்கும் சோலைச் சோற்றுத் துறையே 94-4
வண்பொழில் வாய்த் தேனூர் நறையூர் 93-6
வாழைமேற் செங்கனிகள் தேன் சொரியும் கருப்பறியலூர் 30-4

186. தொகை—தொகைக் குறிப்பு

2

இருவர்
(பிரமன் - திருமால்) 7-4, 51-9, 58-8, 76-7, 80-9
இருவராயும் 7-4

திருவடி
இணை இரண்டு 58-10

பொழுது
இருபொழுது(ம்) 83-2

போது
இருபோது(ம்) 50-7

3

உலகு
மூவுலகு 73-7

எரி, தீ
எரிமூன்று 97-7
ஒளி மூன்று 88-3
தீ மூன்றும் 40-2

கண்
கண்(ணு) மூன்று 38-9, 61-7
முக்கண் 71-9

சந்தி
சந்தி மூன்று 65-5
முச் சந்தி 90-7

சுடர்
மூன்று 67-4

சூலம்
மூவிலை-அலையார் கதிர் மூவிலைய 22-5
மூவிலைய சூலம் 40-3
மூவிலை வேல் 19-3, 56-3

திரிபுரம்—எயில்
அரண் மூன்று 82-7
எயில் மூன்று 63-5
மூஎயில் 22-4, 25-1, 44-1, 55-8, 76-3

புரம்
(i) திரிபுரம் 48-8, 63-1
(ii) புரம் மூன்று 1-6, 8; 4-9, 10-3, 11-6, 14-3, 16-5, 20-2, 38-9. 47-9, 52-3, 53-2, 6; 61-9, 62-1, 97-2
(iii) முப்புரங்கள் 9-1, 17-1, 23-7, 24-10, 27-3, 61-3, 66-5, 67-9, 70-3, 84-4, 99-8

மதில் (எயில் பார்க்க)
புரிசை மூன்று 88-5
மதில் மூன்று 7-5
மும்மதில் 21-4, 7; 22-8

மூவர்
திரிபுராதிகள் 6-1, 55-8, 66-5, 70-3

புரிநூல்
முப்புரிநூல் 40-1

பேயுருவம் மூன்று 38-9

போது
முப்போதும் 39-10, 46-10
மூன்று போதும் 30-3

மதம்
மதமூன்று 81-4
மும்மதம் 74-5

மும்மை
(திருநீறு, ருத்ராக்ஷம் அக்கமாலை)
சடைமுடி 39-3

மூவர்
- *பிரமா, திருமால், ருத்ரன்* 7-4, 56-5, 57-7, 80-9, 84-7

வேந்தர்
- *மூவேந்தர்* 2-11

4

சுருதி
- *ஒரு நான்கு* 16-5

தானம்
- *நாற்றானத் தொருவன்* 33-4

(சரியை, கிரியை, யோகம், ஞானம்)

திசை
- *தென்றிசைக் குடபாலின் வடபாலின் குணபாற் சேராத சிந்தையான்* 33-8

நால்வர்
- *(சனகாதி நால்வர்)* 68-7

நிலம்
- *நானிலம்* 3-1

மறை
- *சுருதி ஒரு நான்கு* 16-5
- *நால்-நணி நாலிசை நாலூர்* 31-6
- *நான்மறை* 19-4, 54-10, 56-2, 57-10, 67-9, 11; 68-5, 88-1, 5; 93, 99-5
- *மறைகளாயின நான்கு* 75-1
- *மறை நான்கு* 22-1, 25-4, 71-3, 97-1
- *மாமறை ஒரு நான்கும்* 62-2

வேத நான்கும் 63-1

5

அஞ்சு
- *(ஆனஞ்சு) ஆன் ஐந்து ; ஆனைஞ்சு* 19-5, 40-7, 53-9, 61-8, 68-2, 88-3
- *ஆவில் ஐந்து* 87-6
- *ஆனிடை ஐந்து* 97-3
- *நறுநெய் தயிர் பால் அஞ்சும்* 19-5
- *பால் நறுநெய் தயிர் ஐந்து* 84-7

எழுத்து
- *அஞ்சு பதம்* 83-1

கணை
- *ஐங்கணை* 10-1, 53-4
- *ஐவணமாம் பகழி* 51-2

துட்டர்
- *பஞ்ச துட்டன்* 34-5

பதம் (எழுத்து)
- *அஞ்சு பதம்* 83-1

பிரமன் தலை
- *ஐந்து* 4-8

புலன்
- *அஞ்சு (ஐம்புலன்)* 100-6
- *ஐஞ்சும் (ஐம்புலனும்)* 56-5
- *ஐம்புலன்* 60-7
- *ஐவகை அரையர்* 60-9
- *ஐவகையர் ஐயர்* 60-9
- *ஐவர் (ஐம்புலன்)* 5-1, 7-4, 5; 60-5, 96-1, 4
- *புலன் ஐந்து(ம்)* 3-5, 63-4, 82-5

பூதங்கள்
- *ஐந்தாய்* 40-2

பொறி
- *பொறிவாயில் ஐந்தும்* 3-2

6

அங்கம்
- *அங்கம் ஆறும்* 62-2
- *அங்கம் ஓராறு* 97-7
- *ஆறங்கம்* 73-3
- *ஆறுகந்தார் (அங்கம்)* 19-4

எழுத்து
ஆறு (சடக்ஷரம்) 19-8

சமயம்
அறுவகைச் சமயம் 55-9

வண்டின் கால்
அறுகால் வண்டு 71-9

7

இசை
இசை ஏழு 19-4
ஏழிசை 71-9, 83-6, 100-10
ஏழிசையாய் 51-10
ஏழுகந்தார் (ஏழிசை) 19-8

உலகு
உலகேழும் 53-7
ஏழ் உலகு 24-5, 45-7, 68-2, 83-6

எழுமை 72-1, 92-1

கடல்
கடல் ஏழு 10-6, 68-2

நரம்பு
ஏழ் நரம்பு 83-6

படி (தலைமுறை)
ஏழேழ்படி 52-9

பிறப்பு
எழு பிறப்பு 40-5, 63
எழுமை 72-1
ஏழ் பிறப்பு 97-8
எழுமா பிறப்பு 75-10
ஏழேழ் பிறப்பு 41-2

மலை
மலை ஏழும் 97-4
வரை ஏழு 68-2

8

குணம்
எண்குணத்தினன் 40-3

சடை
எட்டு 19-7

திசை
எட்டுகந்தார் திசை 19-8
எண் திசை 72-10
எண் திசையோர்கள் 74-5

தோள்
எண்தோள் 71-9, 76-5
தோளும் எட்டு 81-3

புட்பம்
*அட்ட புட்பம் 22-8
எண் (ஆர்) நாண் மலர் 86-3

மூர்த்தி
எட்டான மூர்த்தியை 30-3
எண்வகை ஒருவன் 58-1

18

எண் கணம் (இது பதினெண்கணம்) 62-8, 63-8
பதினெண் கணம் 25-8

---

* அட்டபுட்பம்: புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை. ஞானபூசை செய்பவர்க்கு: கொல்லாமை, ஐம்பொறி அடக்கம், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பன அட்டபுட்பமாம்.

96		பல	
தத்துவங்கள்		ஆசை பல	73-10
அறுபதும் பத்தும் எட்டும்		கலைகள் பல	60-6, 95-11
ஆறிஞேடஞ்சு		பல்லடியார்	67-2
நான்கும்	8-3	பல்லுயிர்	22-10, 53-3
[60+10 (எட்டும்=+)		பல தேவர்கள்	67-4
+6+(5×4)20=96		பல பண்	40-10
எட்டும்=கூடிய;		பல பாவங்கள்	60-6
எட்டுகின்ற.]		பாஞர் பல	71-10

187. தோத்திரம்

சொற்பால பொருட்பால தோத்திரமும் பல சொல்லித்
துதித்து இறைதன் திறத்தே கற்பாரும் கேட்பாரும் 16-5

188. நகரலக்ஷண உறுப்புக்கள்

1. அரங்கு
மண்ணார் முழவும் குழலும் இயம்ப மடவார் நடமாடு மணி
அரங்கில் விண்ணோர் மதிதோய் வெஞ்சமாக் கூடல் 42-4

2. ஒலி
மறையொலி...மறுகுநிறைவெய்தி 16-3

3. கடை
கடையார் மாளிகை 26-3
கடையும் புடைசூழ் மணி மண்டபமும் 41-4

4. கொடி
கொடி யணி நெடுமாடக் கூடலையாற்றூர் 85-1

5. கோபுரம்
கோபுர(மு)ம் 16-3, 42-2, 43-5, 87
மாட மதிலணி கோபுரம் 43-5

6. சூளிகை
(நிலா முற்றம்) 16-3

7. பொழில்
பொழிலணி நாவல் 76-10
வளரும் வளர் பொழில் 87-1

8. மண்டபம்

மண்டபமும் 16-3, 42-2, 87-1, 7
மணி மண்டப(மு)ம் 41-4, 43-5

9. மதில்

சிலையார் மாமதில்சூழ் திருமேற்றளி 21-9
திண்ணிய மாமதில்சூழ் தென் திருவாரூர் 83-9
பொழில்சூழ் குளிர் மாமதில் மாளிகைமேல் வந்தணவும்
மதிசேர் முதுகுன்று 25-7
மதில் 43-5
மதிற் காஞ்சி மாநகர் 21-10
மாமதில் 25-7
வளங்கொள் மதில் 42-2

10. மறை

மறை ஒலி 16-3

11. மாடம்

கன்னிமாடம் 41-4
காண்பினிய மணிமாடம் 46-3
கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூர் 85-1
செழுமாடத் திருமிழலை 88-3, 9
திணிந்த மாடந் தொறும் செல்வ மல்கு திருமிழலை 88-7
திருந்து மாடங்கள் நீடு திகழ்திரு வாஞ்சியம் 76-6
நன்மாடமலி தென் நாவல் 3-10
பிறை நுதலார் நீடு மாடங்கள் மாளிகை தோறும் நிலவு
தென் திருநின்றியூர் 65-7
பொன்னலங் கனன் மாடப் பொழிலணி நாவல் 76-10
மஞ்சுற்ற மணிமாட வன்பார்த்தான் பனங்காட்டூர் 86-8
மல்லிகை மாடநீடு மருங்கொடு நெருங்கி எங்கும்...
வண்டியங்கும் ஆரூர் 8-4
மாடம் 43-5, 87-1
மாட மல்கு கடவூர் 53-10
மாடமாளிகை 87

12. மாளிகை

கடையார் மாளிகைசூழ்...காளத்தி 26-3
செம்பொன் மாளிகைசூழ் திருமுல்லைவாயில் 69-8
செம்பொனின் மாளிகைசூழ் திருக்கோளிலி 20-7
சேட்டார் மாளிகைசூழ் திருமேற்றளி 21-2
பிறை நுதலார் நீடு மாடங்கள் மாளிகை தோறும் நிலவு...
நின்றியூர் 65-7

மாடமாளிகை 87
மாடார்ந்தன மாளிகை சூழுந் துறையூர் 13-5
மாளிகை 16-3, 42-2, 87-1
மாளிகைமேல் வந்தணவும் மதிசேர்...மா முதுகுன்று 25-7

13. வாத்தியம்

பாடல் முழவும் குழலும் இயம்பப் பணைத் தோளியர்
பாடலோ டாடலரு ..வெஞ்சமாக் கூடல் 42-8
மண்ணார் முழவும் குழலும் இயம்ப மடவார் நடமாடு மணி
யரங்கில், விண்ணார் மதிதோய் வெஞ்சமாக் கூடல் 42-4
மண்ணெலாம் முழவம் அதிர்தர மாடமாளிகை கோபுரத்தின்
மேல், பண்ணியாழ் முரலும்...திருப்பனையூர் 87-8

14. விழா

விழவார் மறுகில் வெஞ்சமாக்கூடல் 42-6
விழவொலி 16-3

15. வீதி - மறுகு

கழிப்பால் கண்டடங்கச் சுழியேந்து மாமறுகிற் கழிப்பாலை 23-5
காண்பினிய மணிமாடம் நிறைந்த நெடுவீதிக்
கடல் நாகைக் காரோணம் 46-3
திண்டேர் நெடுவீதி இலங்கை 3-8
தேரூர் நெடுவீதி...தென் நாவல் 3-10
மண்டபமும் கோபுரமும் மாளிகை சூளிகையும் மறுகுநிறை
...கலயநல்லூர் 16-3
மறையொலியும்...மறுகு நிறைவெய்தி 16-3
மாமறுகிற் கழிப்பாலை 23-5
விழவார் மறுகில் வெஞ்சமாக்கூடல் 42-6
விழவொலியும் மறுகு நிறைவெய்தி 16-3

16. நகர லக்ஷணங்கள் பல

கடையும் புடைசூழ் மணிமண்டபமும் கன்னிமாடங்
கலந்தெங்கும், புடையும் பொழிலும் புனலும்
தழுவிப் பூமேற் றிருமா மகள் புல்கி, அடையும்
கழனிப் பழனக் கச்சூர் 41-4
மண்டப மாடமாளிகை கோபுரத்தின்மேல், திரங்கல்
வன்முகவன் புகப்பாய் திருப்பனையூர் 87-7
மண்டபமும் கோபுரமும் மாளிகை சூளிகையும்,
மறையொலியும் விழவொலியும் மறுகுநிறை வெய்திக்,
கண்டவர்கள் மனங்கவரும்...கலயநல்லூர் 16-3
மண்ணெலாம் முழவம் அதிர்தர மாடமாளிகை கோபுரத்தின்
மேல், பண்ணியாழ் முரலும் பழனத் திருப்பனையூர் 87-8

மாட மதிலணி கோபுர மணிமண்டபம் மூடி முகில் தவழ்
சோலை முதுகுன்று 43-5
மாட மாளிகை கோபுரத்தொடு மண்டபம் வளரும்
வளர் பொழில்...பழனத் திருப்பனையூர் 87-1
வளங்கொள் மதில் மாளிகை கோபுரமும் மணிமண்டபமும்
இவை மஞ்சு தன்னுள் விளங்கும் மதிதோய்
வெஞ்சமாக்கூடல் 42-2

189. நகைகள்

ஆபரணம் 46-5

ஆரம் 46-1
ஒளி முத்தம் பூணாரம் 46-11
முத்தாரம் 46-1

கழல் 5-1, 30-5, 41-2, 57-1, 62-7, 63-9, 86-2
அறைகழல் 76-7, 10
அறையுங் கழல் 32-7
அறையும் பைங்கழல் 86-2
ஆளும்அம் பொற்கழல் 37-3
குரைகழல் 55-4, 62-6
குரை சேர்கழல் 57-1
துன்று பைங்கழல் 62-7
பைங்கழல் 62-7, 86-2
பொற்கழல் 37-3

குண்டலம் 40-9, 61-4

குழை 33-1, 40-8, 43-6, 58-1, 70-6, 81-9, 87-1, 89-1 92-5
கனகக் குழை 56-7
குழைகொள் முத்தம் 81-9
சங்கக் குழை 47-2
சங்க வெண் குழை 61-6
சந்தாருங் குழையாய் 24-7
திணிவார் குழை 53-6
துளை வெண் குழை 42-5
மகரக் குழை 3-7, 84-9
விளங்குங் குழை 4-8, 26-3, 28-8
வெண் குழை 42-5, 58-1, 61-6

சிலம்பு 41-2, 62-7

தோடு 84-9, 87-1
சுருள் வெண் தோடு 42-5
வெண்தோடு 42-5
பட்டிகை (மேகலை) 46-10
பொற்பூ 46-10
மணி வயிரக்கோவை 46-1
முத்தம்
ஒளி முத்தம் 46-11
குழை கொள் முத்தம் 81-9
முத்தாரம் 46-1
வயிரக்கோவை 46-1
வளை 16-4, 36-6, 37; 57-5, 91-8 93-2
கணவளை 37-5
கையார் வளை 32-5
கோல்வளை 30, 40-7, 96-8
நிரைவளை 64-1
வரிகொள் வெள்வளை 61-3
வரிவளை 39-11
வெள்வளை 46-3, 61-3

190. நகைச் சுவை

உழுவார்க் கரிய விடை ஏறி 42-6
செட்டி நின்காதலி ஊர்கள் தோறும் அறம்செய,
அட்டுமின் சில்பலிக்கென் றகங்கடை நிற்பதே 43-9
தையலாள் உலகுய்ய வைத்த, கச்சி மூதூர்க் காமக் கோட்டம்
உண்டாக நீர்போய், ஊரிடும் பிச்சை கொள்வ தென்னே
ஓணகாந்தன் தளியுளீரே 5-6
மங்கையாளொடு இயங்கவும் மிடுக்குடையராய் விடில்,
எத்துக் கிங்கிருந்தீர் எம்பிரானிரே 49-5
வேடுவர் கூடிவாழ் முருகன்பூண்டி மாநகர்வாய், ஏறுகால் இற்ற
தில்லை யாய்விடில் எத்துக் கிங்கிருந்தீர் எம்பிரானிரே 49-4

191. நரகம்

உயிரொடு நரகத் தழுந்தாமை 54-6
நந்தி உனை வேண்டிக் கொள்வேன் நரகம் புகாமையே 92-7

சமன் தமர் நரகத்திடல் அஞ்சி 60-7
மேலிய வெந்நரகத்தில் அழுந்தாமை நமக்கு மெய்ந் நெறியைத்
தான் காட்டும் வேத முதலானை 40-10

192. நாகரிக நிலை, மக்கள் நிலை

[நகர லக்ஷண உறுப்புக்கள் என்னும் தலைப்பு 188-ம் பார்க்க]

1. அரங்கில் நடம்
(1) அங்கயற்கண்ணார் அருநடம் ஆடல் அறாத...திரு
முல்லைவாயில் 69-7
(2) மண்ணார் முழவும் குழலும் இயம்ப மடவார் நடமாடும்
மணிஅரங்கு (வெஞ்சமாக் கூடல்) 42-4

2. ஆடல், பாடல், வாத்தியங்கள்
கொட்டாட்டொடு பாட்டொலி ஓவாத் துறையூர் 13-6

3. அழகிய மாதர்கள் மாட மாளிகையில் நிலவுதல்
பேடை மஞ்ஞையும், பிணைகளின் கன்றும், பிள்ளைக்
கிள்ளையும் எனப் பிறைநுதலார், நீடு மாடங்கள்
மாளிகை தோறும் நிலவு தென்திரு நின்றியூர் 65-7

4. உழுதல் (காலையில்)
*பூணி பூண்டுழப் புட்சிலம்பும் (புகலூர்) 34-3

5. கப்பல்கள்
கலமெலாம் கடல்மண்டு 35-8

6. மக்களின் நிலை (மக்களின் மனநிலை, புலவர்களின்
ஏழைமை நிலை)
(1) எள்விழுந்திடம் பார்க்கு மாகிலும், ஈக்கும் ஈகிலனாகிலும்,
வள்ளலே எங்கள் மைந்தனே என்று வாழ்த்தினும்
கொடுப்பாரிலை 34-8
(2) கற்றிலாதானைக் கற்று நல்லனே, காமதேவனை ஒக்குமே
முற்றிலாதானை முற்றனே என்று மொழியினும்
கொடுப்பாரிலை 34-9
(3) காணியேற் பெரிதுடையனே! கற்று நல்லனே! சுற்ற
நன்கிளை, பேணியே விருந்தோம்புமே என்று
பேசினும் கொடுப்பாரிலை 34-3
(4) கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினுங்
கொடுப்பாரிலை 34-2

---

* பூணி - எருது.

(5) தம்மையே புகழ்ந்திச்சை பேசினும் சார்வினும் தொண்டர்
தருகிலாப், பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள், இம்மையே தரும்
சோறும் கூறையும் ஏத்தலும் இடர்கெடலுமாம்,
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும்
ஐயுறவில்லையே 34-1

(6) தையலாருக்கோர் காமனே! சால நல அழகுடை ஐயனே!
கையுலாவிய வேலனே! என்று கழறினும்
கொடுப்பாரிலை 34-10

(7) நரைகள் போந்து மெய்தளர்ந்து மூத்துடல் நடுங்கி
நிற்குமிக் கிழவனை, வரைகள் போல்திரள் தோளனே
என்று வாழ்த்தினுங் கொடுப்பாரிலை 34-4

(8) நலமிலாதானை நல்லனே என்று நரைத்த மாந்தரை
இளையனே, குலமிலாதானைக் குலவனே என்று
கூறினுங் கொடுப்பாரிலை 34-6

(9) நோயனைத் தடந்தோளனே என்று, நொய்ய மாந்தரை
விழுமிய, தாயன்றோபுல வோர்க்கெலாமென்று
சாற்றினுங் கொடுப்பாரிலை 34-7

(10) மிடுக்கிலாதானை வீமனே விறல் விசயனே வில்லுக்
கிவனென்று...கூறினும் கொடுப்பாரிலை 34-2

(11) வஞ்ச நெஞ்சனை மாசழக்கனைப் பாவியை வழக்கில்லியைப்,
பஞ்ச துட்டனைச் சாதுவே என்று பாடினும்
கொடுப்பாரிலை 34-5

7. வேடர்கள்

1. மறவேடர்களுக்கும் வாணிகக் கூட்டத்துக்கும் பூசல் (சண்டை)

மறவேடுவர் பொருது சாத்தொடு பூசல் அறாப் புனவாயிலே 50-2

2. வேடர்கள் ஆறலைத்துக் கூறை கோள்ளுதல்

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர் கூறைகொண்
டாறலைக்கும் இடம்-வடுகர்வாழ் முருகன் பூண்டி 49-1

193. நாடு, நாட்டின் பகுதி

இலங்கை 4-8, 68-9, 73-8
எறியுமாகடல் இலங்கை 55-9
கதிருசூழ் கடல் இலங்கை 78-9
திண்டேர்நெடுவீதி இலங்கை 3-8

திரையினார் கடல்சூழ்ந்த தென்இலங்கை 40-11
தேசுடைய இலங்கை 46-7

ஈழநாடு
ஈழநாட்டு மாந்தோட்டம் 12-7

ஊருமா தேசமே 74-8

எய்தமான் (நடுநாட்டின் ஒரு பகுதி) 81

குறுக்கை நாடு
குறுக்கை நாட்டுக் குறுக்கையே 12-2

கொங்கு 47-2, 92-3
கொங்கிற் குறும்பிற் குரக்குத்தளி 47-2
மீகொங்கில் அணிகாஞ்சி வாய்ப் பேரூர் 90-10

கொண்டல் நாடு
கொண்டல் நாட்டுக் கொண்டல் 12-2

சென்னி நாடு 15-10

சோழ நாடு
சோழ நாட்டுத் துருத்தி 12-7
காவிரி புடைசூழ் சோணாடு 87-6

தென்னாடு
தென்னாட் டிராமேச்சுரம் 12-7

தேசம்
ஊருமா தேசமே 74-8
தேசமெங்கும் தெளிந்தாட....காவிரி 77-10
தேசத் தடியார் 50-7
நெடுமா கடல்சூழ் தேசம் 19-2

நறையூர் நாடு
நறையூர் நாட்டு நறையூர் 12-4

நாங்கூர் நாடு
நாங்கூர் நாட்டு நாங்கூர் 12-4

நாடு 12-11, 13-5, 62-10, 64-10, 90-9
கருங்கடல்சூழ் நாடு 97-4
நாடெலாம் 64-10

புரிசை நாடு
புரிசை நாட்டுப் புரிசையே 12-6

பொன்னூர் நாடு
பொன்னூர் நாட்டுப் பொன்னூர் 12-6

மருகல் நாடு
மருகல் நாட்டு மருகல் 12-1

மலைநாடன் 44-5

மிழலை நாடு
மிழலை நாட்டு மிழலை 12-5

வான நன்னாடு 100-6
வான நாடு 57-8, 65-5, 68-5, 70-9, 88-2

விளத்தூர் நாடு
விளத்தூர் நாட்டு விளத்தூரே 12-8

வெண்ணிக் கூற்றம்
வெண்ணிக் கூற்றத்து வெண்ணியே 12-3

வெண்ணி நாடு
வெண்ணி நாட்டு மிழலையே 12-5

வேளார் நாடு
வேளார் நாட்டு வேளூர் 12-8

194. நாயன்மார்

[*உடுக்குறியிடப்பட்டவர்கள் தொகை அடியார்கள்]
[திருத்தொண்டத்தொகைப் பதிகம், 39]

1. அதிபத்தர்
விரிதிரைசூழ் கடல் நாகை அதிபத்தர் 39-7

2. *அப்பாலும் அடிச்சார்ந்த அடியார் 39-10

3. அப்பூதி
ஒரு நம்பி அப்பூதி 39-4

4. அமர்நீதி
அல்லிமென் †முல்லையந்தார் அமர்நீதி 39-1

5. அரிவாட்டாயர்
எஞ்சாத வாள்தாயன் 39-2

† முல்லைமாலை வணிகர்க்கு உரியது.

6. ஆனாயர்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர் 39-2

7. இசைஞானி
இசைஞானி காதலன் திருநாவலூர்க்கோன் 39-11
இசைஞானி சிறுவன் ஆரூரன் 16-11, 38-10

8. இடங்கழி
மடல் சூழ்ந்த தார்நம்பி இடங்கழி 39-9

9. இயற்பகை
இல்லையே என்னாத இயற்பகை 39-1

10. இளையான்குடி மாறன்
இளையான் தன் குடிமாறன் 39-1

11. உருத்திர பசுபதி 39-3

12. எறிபத்தர்
இலைமலிந்த வேல்நம்பி 39-2

13. ஏயர்கோன் கலிக்காமன் 39-5
(1) ஏத நன்னிலம் ஈரறுவேலி ஏயர்கோன் 55-3
(2) ஏயர்கோன் உற்ற இரும்பிணி தவிர்த்து 55-3
(3) ஏயர்கோன் மழைவேண்டிப் பன்னிரு வேலி நிலம்
இறைவனுக்குத் தந்ததும், பெருமழையால் வந்த
பெருவெள்ளம் தவிர மீண்டும் பன்னிருவேலி
நிலம் தந்ததுமான வரலாறு:—

வையகம் முற்றும் மாமழை மறந்து வயலில் நீரிலை மாநிலம்
தருகோம், உய்யக் கொள்கமற் றெங்களை என்ன
ஒளிகொள் வெண்முகிலாய்ப் பரந்தெங்கும், பெய்யுமா
மழைப் பெருவெள்ளம் தவிர்த்துப் பெயர்த்தும்
பன்னிரு வேலி கொண்டருளும், செய்கை கண்டு நின்
திருவடி யடைந்தேன் செழும் பொழிற் றிருப்புன்
கூருளானே 55-2

14. ஏனாதிநாதன் 39-2

15. ஐயடிகள் காடவர்கோன் 39-7

16. கண்ணப்பர்
எறிந்த சண்டி இடந்த கண்ணப்பன் ஏத்து பத்தர்கட்
கேற்றம் நல்கினீர் 88-6
கண்ணப்பன் கணம்புல்லன் என்றிவர்கள் குற்றம்
செய்யினும் குணமெனக் கருதும் கொள்கை
கண்டுநின் குரைகழல் அடைந்தேன் 55-4

கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன் 39-2
சண்டி...நாவினுக் கரையன் கழுனைகொள் கண்ணப்பன்
என்றிவர் பெற்ற காதலின்னருள் ஆதரித் தடைந்தேன் 65-2

17. கணநாதன்

கடற் காழிக் கணநாதன் 39-6

18. கணம்புல்லர்

கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த
கணம் புல்ல நம்பி 39-8
சாக்கியன் சிலந்தி கண்ணப்பன் கணம்புல்லன் என்றிவர்கள்
குற்றம் செய்யினும் குணமெனக் கருதும், கொள்கை
கண்டுநின் குரைகழல் அடைந்தேன் 55-4

19. கலிக்கம்பன்

கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் 39-7

20. கலியன் 39-7

21. கழற்சிங்கன்

கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான், காடவர்
கோன் கழற்சிங்கன் 39-9

21A. **கழறிற்றறிவார்** '33 சேரமான் பெருமாள் நாயனார்' பார்க்க.

22. காரி 39-8

23. காரைக்கால் அம்மையார்

பேயார் 39-4

24. குங்கிலியக் கலய நாயனார்

கடவூரிற் கலயன் 39-2

25. குலச்சிறை

பெருநம்பி குலச்சிறை 39-4

26. கூற்றுவ நாயனார்

ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக் கோன் 39-6

27. கோச்செங்கட் சோழன்

கோடுயர் வெங்களிற்றுத் திகழ் கோச்செங்கணான்
செய்கோயில், நாடிய நன்னிலத்துப் பெருங்கோயில்
நயந்தவனே 98-11
சிலந்தி கண்ணப்பன்...குற்றம் செய்யினும் குணமெனக்
கருதும் கொள்கை கண்டுநின் குரைகழல்
அடைந்தேன் 55-4

திருவும் வண்மையும் திண்டிறல் அரசும் சிலந்தியார்
செய்த செய்பணி கண்டு, மருவு கோச் செங்கணான்
தனக்களித்த வார்த்தை கேட்டு நுன் மலரடி
அடைந்தேன் 65-1
திரைபொரு பொன்னி நன்னீர்த் துறைவன் திகழ்
செம்பியர்கோன், நரபதி நன்னிலத்துப் பெருங்
கோயில் நயந்தவனே 98-10
தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி சித்திரப்
பந்தர் சிக்கென இயற்றச், சுருண்ட செஞ்சடையாய்!
அதுதன்னைச், சோழனுக்கிய தொடர்ச்சிகண்
டடியேன்...நின்பொன் மலர்ப்பாதம்...வந்தடைந்தேன் 66-2
*தென்னவனாய் உலகாண்ட செங்கணார் 39-11

28. கோட்புலி

அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலி 39-9
கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற கொடிறன்
கோட்புலி 15-10

29. சடைய நாயனார்

ஊரன் சடையன் சிறுவன் 47-10
ஊரன் சடையன்தன் காதலன் 58-10
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவலூர்க் கோன் 39-11
சடையன்தன் சிறுவன் வன்றொண்டன் 34-11
†சடையன் திருவாரூரன் 98-11
சடையனவன் சிறுவன்...ஊரன் 7-11
நண்புடைய நன்சடையன் இசைஞானி சிறுவன்...ஆரூரன் 16-11
வன்றொண்டன் சடையன் காதலன் 57-12

30. சண்டேசுரர்

அணிகொள் ஆடையம் பூணணி மாலை ‡அமுது
செய்தமுதம் பெறுசண்டி...பெற்ற காதலின் அருள்
ஆதரித்தடைந்தேன் 65-2

---

* கோச்செங்கட் சோழன் பாண்டி நாட்டையும் ஆண்டனன்.
"நிம்ப நறுந்தொங்கற் கோச் செங்கணான்"
—திருத்தொண்டர் திருஅந்தாதி, 82.

† தந்தையார் பெயரை முன்வைத்துத் தன்பெயரைப் பின்வைக்கும் இக்காலத்து முறை போன்றது.

‡ அமுது செய்த அமுதம் - சிவனுக்கு நிவேதனம் ஆனது.
"உண்ட கலமும் உடுப்பனவும்"
—பெரியபுராணம், சண்டேசுரர், 56.

இண்டைமலர் கொண்டுமணல் இலிங்கம தியற்றி
இனத்தாவின் பாலாட்ட இடறியதா தையைத்தாள்
துண்டமிடு சண்டியடி அண்டர்தொழு தேத்தத்
தொடர்ந்தவனைப் பணிகொண்ட விடங்கன் 16-3

எறிந்த சண்டி, இடந்தகண்ணப்பன், ஏத்து பத்தர்கட்
கேற்றம் நல்கினீர் 88-6

கோதனங்களின் பால்கறந் தாட்டக் கோல வெண்மணற்
சிவன்தன் மேற்சென்ற, தாதை தாளற எறிந்த
தண்டிக்குன் சடைமிசை மலர்அருள் செயக்கண்டு,
பூதவாளி நின்பொன்னடி அடைந்தேன் பூம்பொழிற்
திருப்புன்கூருளானே 55-3

தஞ்சங்கொண்டார் அடித் தண்டியைத் தாமென
வைத்துகந்தார் 17-4

மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச் சண்டிப் பெருமான் 39-3

31. சத்தி நாயனார்

கழற்சத்தி வரிஞ்சையர்கோன் 39-7

32. சாக்கிய நாயனார்

கற்ற சூதன் நற்சாக்கியன்...இவர்கள் குற்றம் செய்யினும்
குணமெனக் கருதும் கொள்கை கண்டுநின்
குரைகழல் அடைந்தேன். 55-4

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே,
மறவாது கல் எறிந்த சாக்கியர் 39-6

33. *சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் 39-10

34. சிறப்புலி

சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலி 39-6

35. சிறுத்தொண்ட நாயனார்

செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர் 39-6

36. சுந்தரமூர்த்தி நாயனார்-தனித்தலைப்பு 133-156 பார்க்க

37. செருத்துணை நாயனார்

†தஞ்சை மன்னவனாம் செருத்துணை 39-9

---

† இது, "மருகல் நன்னாட்டவர் தஞ்சை" என விளக்கப்பட்டுளது.—திருத்தொண்டர் திரு அந்தாதி, 66.
தஞ்சை நாட்டுத் தஞ்சாவூர் வேறு.

38. சேரமான் பெருமாள் நாயனர்
கார்கொண்ட கொடைக் கழறிற் றறிவார் 39-6
39. சோமாசிமாற நாயனர்
அம்பரான் சோமாசிமாறன் 39-5
40. தண்டியடிகள்
†குண்டிகைப் படப்பினில் விடக்கிளை ஒழித்தவர்,
கண்டவர் கண்டடி வீழ்ந்தவர் கனைகழல்...
தண்டுடைத் தண்டி 72-10
††தண்டிதன் இனமுடை...ஒருசுடர் 72-10
‡நாட்டமிகு தண்டி 39-5
41. திருக்குறிப்புத் தொண்ட நாயனர் 39-3
42. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்
(1) §அருமையாம் புகழார்க் கருள்செயும் பாச்சி லாச்சிராமத்
தெம் அடிகள் 14-11
(2) $இருந்துநீர் தமிழோடிசை கேட்கும் இச்சையாற்,
காசு நித்தல் நல்கினீர் அருந்தண் வீழிகொண்டீர்
அடியேற்கும் அருளுதிரே 88-8
(3) ஊனமில் காழி தன்னுள் உயர் ஞானசம்பந்தர்க்
கன்று, ஞானம் அருள்புரிந்தான் 97-9
(4) ¶எத்து பத்தர்கட் கேற்றம் நல்கினீர்...வீழிகொண்டீர் 88-6
(5) **காவிரி புடைசூழ் சோணுட்டவர் தாம் பரவிய
கருணையங் கடல்...அப் பாவிரி புலவர் பயிலுந்
திருப்பனையூர் 87-6

---

† புலால் உண்ணுதவரும், கண்டவர் - (கண்ணிலாத தண்டி அடிகள்) கண்பெறக் கண்டவருமான சமணர்கள் - தமது கழலடியில் வீழப்பெற்ற தண்டியடிகள்.

†† தண்டியடிகளைப் போன்ற அடியார்களின் கூட்டத்தை உடைய பரஞ்சுடர் (சிவன்). ‡ நாட்டம் - கண்.

§ அருமையாம் புகழார் - திருஞானசம்பந்தப் பெருமான். அவர் "துணிவளர் திங்கள்" என்னும் திருப்பதிகத்தைப் பாடி, கொல்லி மழவன் மகளுக்கிருந்த முயலகன் என்னும் நோயைச் சிவபிரானது திரு அருளால் தீர்த்த வரலாறு குறிப்பிக்கப்படுகின்றது.

$ வீழிமிழலையிற் படிக்காசு பெற்ற வரலாறு.

¶ எத்து பத்தர்கள் - அப்பர், சம்பந்தர்.

** சோணுட்டவர் தாம் பரவிய கருணையங்கடல், பாவிரி புலவர் - இவை ஞானசம்பந்தரைக் குறிக்கின்றன போலும். திருப்பனையூர் -

(6) †கூடப்பாச்சில் உறை கோக்குளிர்வானே 15-6

(7) திருமிழலைப், பரிசினாலடி போற்று பத்தர்கள்
பாடியாடப் பரிந்து நல்கினீர் 88-5

(8) நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரசரும்
பாடிய நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி
ஏத்துகப்பானை 67-5

(9) நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தன் நாவினுக்கரையன்...
கணம் புல்லன் என்றிவர்கள் குற்றம் செய்யினும்
குணமெனக் கருதும் கொள்கை கண்டுநின் குரைகழல்
அடைந்தேன் 55-4

(10) நாவின்மிசை அரையனொடு தமிழ்ஞான சம்பந்தன் 78-10

(11) நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பு ஞானசம்பந்தனுக்
குலகவர்முன் தாளம் ஈந்து அவன் பாடலுக் கிரங்கும்
தன்மையாளனை ...கோலக் காவினிற்
கண்டுகொண்டேனே 62-8

(12) நேசமுடை அடியவர்கள் வருந்தாமை அருந்த, நிறை
மறையோர் உறைவீழி மிழலைதனில் நித்தல், காசருளிச்
செய்தீர், இன்றெனக் கருளவேண்டும் கடல்நாகைக்
காரோணம் மேவி யிருந்தீரே 46-7

(13) மேய நீர்பலி ஏற்றதென் என்று ††விண்ணப்பம்
செய்பவர்க்கு மெய்ப்பொருள், ஆய வீழிகொண்டீர்
அடியேற்கும் அருளுதிரே 88-9

(14) வம்பறு வரிவண்டு மணநாற மலரும், மதுமலர்நற்
கொன்றையான் அடியலாற்பேணா எம்பிரான் சம்பந்தன் 39-5

சம்பந்தப்பெருமானது திருப்பதிகம் பெற்றுள்ள தலம். "ஞான சம்பந்தன் ஆராத சொன்மாலைகள் பத்தும், ஊனூர் நினைவார் உயர்வாரே" என்பது அவரது கருணைக்குச் சான்றாகும். பதிகம், 1-37.

† கோ - பாச்சிலாச் சிராமத்துக் கொல்லிமழவன். அவனுடைய மகளின் நோயைத் தீர்த்து மனம் குளிரச்செய்த சிவபிரான்.

†† 'விண்ணப்பம் செய்பவர்'—பொதுவாகக் கூறினதன்றி ஞான சம்பந்தப் பெருமானை நினைத்துக் கூறினதாகவும் கொள்ள இடம் இருக் கின்றது. சம்பந்தர், அப்பர் தேவாரங்களைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் நன்கு பயின்றவர் ஆதலின், 'விண்ணப்பம் செய்பவர்' என்பது, பாடல் தோறும் இவ்விண்ணப்பத்தைக் கொண்டுள்ள சம்பந்தரது திருவலஞ் சுழிப்பதிகத்தினையிற் கூறினதாகலாம்; சம்பந்தர் பதிகம் 'விண்உலாம்' (2-2) என்பதைப் பார்க்கவும். 1-47, 1-43 பாடல்களையும் பார்க்கவும்.

43. திருநாவுக்கரசு நாயனார்

திருக்கொள் எழெழு நூறிரு †பனுவல் ஈன்றவன்
திருநாவினுக் கரையன்...இவர்பெற்ற காதலின்
அருள் ஆதரித் தடைந்தேன் 65-2

திருத்த நீர்தமி ழோடிசை கேட்கும் இச்சையாற் காசு
நித்தல் நல்கினீர், அருந்தண் வீழி கொண்டீர்
அடியேற்கும் அருளுதிரே 88-8

††பத்தர்கட் கேற்றம் நல்கினீர் வீழிகொண்டீர் 88-6

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன் 39-4

திருமிழலைப் பரிசினால் அடிபோற்று பத்தர்கள்
பாடி யாடப் பரிந்து நல்கினீர் 88-5

நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக் கரசரும் பாடிய
நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை 67- 5

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் நாவினுக் கரையன்...
என்றிவர்கள், குற்றம் செய்யினும் குணமெனக்
கருதும் கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன் 55-4

நாவின்மிசை அரையனோடு தமிழ் ஞானசம்பந்தன் 78-10

நேசமுடை அடியவர்கள் வருந்தாமை அருந்த நிறை
மறையோர் உறைவீழி மிழலைதனில் நித்தல்,
காசருளிச் செய்தீர், இன்றெனக் கருளவேண்டும்
கடல் நாகைக் காரோணம் மேவி யிருந்தீரே 46-7

44. திருநாளைப் போவார்

செம்மையே திருநாளைப் போவார் 39-3

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் நாவினுக் கரையன் நாளைப்
போவானும்...குற்றம் செய்யினும் குணமெனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன் 55-4

45. திருநீலகண்ட நாயனார்

திருநீல கண்டத்துக் குயவனார் 39-1

46. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்

திருநீல கண்டத்துப் பாணனார் 39-11

47. திருநீலநக்க நாயனார்

ஒலி புனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர் 39-4

48. திருமூல நாயனார்

நம்பிரான் திருமூலன் 39-5

---

† பனுவல் - பதிகம். †† பத்தர்கள் - அப்பர் சம்பந்தர்.

49. *திருவாரூர்ப் பிறந்தார்கள் 39-10
50. *தில்லைவாழ் அந்தணர் 39-1

†மண்ணுலகம் காவல் பூண்ட உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை மறுக்கம் செய்யும் பெருமையார் 90-4

முட்டாத முச்சந்தி மூவாயிரவர்க்கு மூர்த்தி யென்னப் பட்டானை 90-7

51. நமிநந்தியடிகள்

அருநம்பி நமிநந்தி 39-4

52. நரசிங்க முனையரையர்

நரசிங்க முனையரையன் ஆதரித்து ஈசனுக்கு ஆட்செயும் ஊர் அணிநாவலூர் 17-11

மெய்யடியான் நரசிங்க முனையரையர் 39-7

53. நெடுமாற நாயனார்

நிறைக்கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன் [தலைப்பு 243-4 பார்க்க.] 39-8

2. (III) மலைமகள் என்பது

அம்பொன் மலைக்கோமான் தன்பாவை 40-10
இமவான் மகள் 44-2, 9; 68-9
குன்ற மலைக் குமரி 99-4
மலைக்கண் மடவாள் 77-7
மலைக்கு மகள் 9-1
மலைக் குமரி 99-4
மலைக்கோமான் தன் பாவை 40-10
மலைதரு மலைமகள் 58-8
மலைப்பாவை 33-1
மலைமகள் 5-6, 15-5, 44-5, 58-8, 61-6, 76-5
மலைமங்கை 4-5, 10-4, 15-3, 33-4, 38-5, 54-8, 57-5, 84-4, 93-2
மலை மடந்தை 16-4
மலையரையன் பொற்பாவை 46-9
மலையான் மகள் 41-1, 82-4
மலையான் மடந்தை 2-4
மலையின் மாது 58-1
மலையுடையாள் 19-7
மாமலை மங்கை 15-3, 84-4
மாமலையாள் 88-1
வரையின் பாவை 67-9
வரையின் மடமகள் 73-1
வெற்பரையன் மடப்பாவை 46-3

2. (IV) தேவியைப் பற்றிய செய்திகள்

1. தேவி அஞ்சின சமயங்கள்

(1) இராவணன் கயிலையை எடுத்தபோது

இலங்கை வேந்தன் எழில்திகழ் கயிலை எடுப்ப ஆங்கு
இமவான் மகள் அஞ்ச 63-9

(2) இறைவன் நஞ்சுண்டபோது

பிறையணி வாணுதலாள் உமையாளவள் *பேழ்கணிக்க
நிறையணி நெஞ்†சனுங்க நீலமால்விடம் உண்டதென்னே 99-1

* பேழ்கணிக்க - அஞ்ச. † அனுங்குதல் - வருந்துதல்.

(3) இறைவன் யானையை உரித்தபோதும், யானைத்தோல் போர்வைக்கும்

இமவான் மகள் பெரிய மனம் தடுமாற வேண்டிப் பெம்மான்
மதக்கரியின் உரியல்ல தில்லையோஎம் பிரானுக்கே 44-9
மடவாள் அஞ்ச மறைத்திட்ட ஆனைத்தோலாய் 41-8
மலைக்கு மகள் அஞ்ச மதகரியை உரித்தீர் 9-1
மாதர் வெருவ வேழமன் றுரித்தாய் 69-3
மாவிரி மடநோக்கி அஞ்ச மதகரியுரி போர்த்துகந்தவர் 87-6
வேழத்தினை உரித்திட்டு உமையை நடுக்கங் கண்டார் 17-10

2. தேவி அஞ்சும் இடம்

கோடி என்னும் தலத்தில் தனிமைக்கு அச்சம்

காடேல்மிக வாலிது காரிகை அஞ்சக், கூடிப் பொந்தில்
ஆந்தைகள் கூகை குழற, வேடித்தொண்டர் சாலவும் தீயர்
சழக்கர், கோடிக் குழகர் இடம் கோயில்கொண்டாயே 82-4

3. தேவி அறம் வளர்த்தது

செட்டி தின்காதலி ஊர்கள்தோறும் அறம்செய 48-9
தையலாள் உலகுய்ய வைத்த காரிரும் பொழிற் கச்சி
மூதூர்க் *காமக் கோட்டம் 5-6

4. தேவி ஊடி இருந்த நிலை

தூசுடைய அகலல்குல் தூமொழியாள் ஊடல் தொலையாத
காலத்து இலங்கையர் கோன் வரை எடுக்க 46-7
[இலங்கை வேந்தன் எழில்திகழ் கயிலைஎடுப்ப ஆங்கு
இமவான் மகள் அஞ்ச...முடி ஒருபதும் தோள்கள்
இருபதும் நெரித்து] 68-9

5. தேவி (கச்சியில்) சிவபிரானைப் பூசித்தது

உமைநங்கை ஆதரித்து வழிபடப்பெற்ற...கம்பன் 61-2, 8
உமைநங்கை என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற கம்பன் 61-1, 7
உமைநங்கை என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற †நல்ல கம்பனை 61-5
உமைநங்கை செழுமி ஏத்தி வழிபடப்பெற்ற . கம்பன் 61-4
உமைநங்கை பரவி ஏத்தி வழிபடப்பெற்ற...கம்பன் 61-9

---

* காமகோட்டம் - கச்சியில் தேவியின் அறச்சாலை.

† நல்ல கம்பன் - உருத்திரன் பூசித்தது. 'உருத்திரன் நலத்தகும் ஒருமை பூண்டுயர் கருத்தொடும் வழிபடு நல்ல கம்பனை'—காஞ்சிப் புராணம்-திருஎகம்பப் படலம், 83.

உமைநங்கை மருவி ஏத்தி வழிபடப்பெற்ற *பெரிய கம்பனை 61-3
உமைநங்கை வழிபடச் சென்று நின்றவா கண்டு, வெள்ளம்
காட்டி வெருட்டிட வஞ்சி வெருவி ஓடித், தழுவ
வெளிப்பட்ட †கள்ளக் கம்பனை 61-10
மலைமகள் கண்டு மருவி ஏத்தி வழிபடப்பெற்ற...கம்பன் 61-6

6. தேவி கோற்றட்டி ஆளாமை

கங்கையாளேல் வாய்திறவாள், ‡கணபதியேல் வயிறுதாரி,
அங்கை வேலோன் குமரன் பிள்ளை, தேவியார்
கோற்றட்டி யாளார் 5-2

7. தேவி சிவபிரான் கண்களை மூடியது; உலகு இருண்டது; நெற்றிக்கண் தோன்றியது

மலைமடந்தை விளையாடி வளையாடு கரத்தால், மகிழ்ந்தவள்கண்
புதைத்தலுமே வல்லிருளாய் எல்லா, உலகுடன்தான்
மூடஇருள் ஓடும்வகை நெற்றி, ஒற்றைக்கண்
படைத்துகந்த உத்தமன் 16-4

8. தேவி சிவபிரானைவிட்டுப் பிரியாதவள்

மதுவிம்மு கொன்றைத் தாரிருந்தட §மார்பு நீங்காத்
தையலாள் 5-6

---

* ஏலவார் குழலி பூசித்த ஏகாம்பர நாதரே—பெரிய கம்பன்.

† திருமால் பூசித்த லிங்கம்—கள்ளக் கம்பன்,
'மருள்புரி கருத்தினான் மாயன் ஏத்தலிற்
கருதுமப் பெயரிய கள்ளக் கம்பனை'
—காஞ்சிப் புராணம்-திருஏகம்பப் படலம், 87.

பிரமன் பூசித்த லிங்கம்—வெள்ளக் கம்பன். மலர்ப்பொகுட்டணை மேலவன் வழிபடு வெள்ளக் கம்பன் ஷை 86.

‡ வயிறுதாரிப் பிள்ளை கணபதியை அதிகமாக உண்ணாதே என்றும், சிறுபிள்ளை குயானைக் கையில் வேல் வேண்டாம், கண்ணைக் குத்திவிடும் என்றும் புத்திமதி சொல்லிக் கோலால் தட்டி அடக்கவில்லை தாயாம் தேவி என்பது பொருள் என்பர் ஓர் அறிஞர்.—சித்தாந்தம்-1939, மலர் 12, பக்கம் 520.

§ மார்பு - சிவபிரானுடைய மார்பு. கொன்றை மாலை நீங்காத தேவியின் மார்பு எனலும் ஒருவாறு பொருந்தும். "உமைஒரு மூகூர்த்தமும் இறைவனைப் பிரியாள் என உணர்க"—தக்கயாகப் பரணி, 293 உரை.

9. தேவி தவஞ் செய்தது; தவத்தைக் கண்டு பிரான் அருளியது; தவத்தின் சிறப்பு

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு, குறிப்பி
    னொடும் சென்றவள்தன் குணத்தினை நன்கறிந்து,
    விரும்பு வரம் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த,
    விண்ணவர்கோன் கண்ணுதலோன் 16-1
வலங்கிளர் மாதவஞ்செய் மலைமங்கை (யோர் பங்கினன்) 98-2

10. தேவி பந்தும் கிளியும் பயில்வது

*பந்தும் கிளியும் பயிலும் பாவை, சிந்தை கவர்வார்
    செந்தீவண்ணர் 91-2

11. தேவி பிறைக் கண்ணியள்

†வெண்பிறைக் கண்ணி தன்னையோர் பாகம் வைத்துகந்ீர் 49-9

12. தேவி முத்திதர வல்லவள்

முத்தி தரவல்ல முகிழ்மென் முலையாள் உமை 52-1

13. தேவி முருகவேளின் தாய்

குமரனைப் பயந்த வார்த்தயங்கிய முலைமட மானை 62-4
சேந்தர் தாய் 38-5

216. பிரமன்

['சிவனும் பிரமனும்' என்னும் தலைப்பு 126 பார்க்க]

1. பெயர்கள்

அந்தணன் 67-10
அயன் 6-9, 7-10, 8-8, 11-1, 16-8, 10; 19-3, 24-9, 27-8, 28-9, 33-8, 51-5, 56-6, 62-7, 68-1, 69-11, 77-10, 79-8, 85-3, 88-4, 92-1, 97-1
செப்பரிய அயன் 51-5

---

* இது அகப்பொருட்டுறைக் கூற்றாகவும் கொள்ளக் கிடக்கின்றது

† பிறைக் கண்ணி - ஆகுபெயராய்ப் பிறைக் கண்ணியைச் சூடின தேவி எனப் பொருள்படும். தேவி - பிறைசூடி என்பது,

'தருணவாள் நிலாவீசு சடிலமோலி மாகாளி'

எனவரும் தக்கயாகப்பரணி (107) காண்க.

செய்யான் 23-9
நான்முகத்தினன் 40-1
நான்முகன் 17-1, 18-9, 19-9, 22-3, 25-6, 32-9, 45-6, 81-8, 85-2
பிரமன் 4-3, 9; 9-5, 20-9, 28-2, 53-1, 63-7, 67-4, 73-9, 98-6, 100-9
விதி 94-5

2. உலகை, உயிரை, ஊழியைப் படைத்தவன்

இன்னுயிர் பார் படைத்தான் 19-6
ஊழி படைத்தவன் 84-8
பரக்கும்பார் அளித்(தவர்) 62-9

3. வழிபட்ட தலங்கள்

1. கலயநல்லூரில் வழிபாடு செய்தது

வண்கமலத் தயன்முன்னாள் வழிபாடு செய்ய மகிழ்ந்தருளி இருந்த பரன் மருவிய ஊர்...கலயநல்லூர் 16-10

2. கழுக்குன்றத்தில் மலரிட்டுப் பூசித்தது

வந்து நாளும் வணங்கி மாலொடு நான்முகன், சிந்தை செய்த மலர்கள் நித்தலும் சேரவே, கந்தம் நாறும் புறவில் தண்கழுக் குன்றமே 81-8

4. நிறம்

செய்யான் 23-9
பொன்னிறத்தின்...நான்முகத்தினன் 40-1

5. புரிநூல் அணிந்தவர்

பொன்னிறத்தின் முப்புரிநூல் நான்முகத்தினனை 40-1

6. மலர்மேல் உறைதல்

அருமலரோன் 9-2
கமலத்தில் இருப்பான் 16-5
தாமரையின் மேலான் 30-9
தாமரையோன் 16-11
திகழ்கின்ற மலரோன் 36-9
தூமலர்த் தோன்றல் 87-7
புண்டரிகத்தயன் 27-8
பூ மிசையான் 44-8
பூவேந்திய பீடத்தவன் 82-8

பெரிய மலர்மேல் உறைவான் 52-8
மலர் உறைவான் 18-8
மலர்மிசையான் 13-10
மலர்மேல் அயன் 2-9, 69-11, 77-10
மலரோன் 78-1, 86-9
மாமலர்மேல் அண்ணல் 83-9
வண்கமலத்தயன் 16-10
விரைதரு மலர்மேல் அயன் 69-11

7. வேதமும் பிரமனும்

வேத முதலான் 40-6

217. பிழையும் ஆராயவேண்டுவனவும்

பதிகம் 82 (ஊறுமுயிர்)

திருச்சுழியற் பதிகம் பண் நட்டராகம் என்று சில பதிப்புக்களில் உள்ளது. இது 'நட்ட பாடை' என்று இருக்கவேண்டும் (நட்ட பாடை வரிசையில் உள்ள காரணத்தால்)—ஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் பதிப்பையும் பார்க்க-பெரிய புராண விரிவுரை கழறிற்றறிவார் 111; பக்கம் 109 பார்க்க.

பதிகம் 99 (பிறையணி வாணுதல்)

'திருநாகேச் சரத்தரனே' என்பதுதான் சரியான பாடம் எனத்தோன்றுகின்றது. பாடல்கள் (கட்டளைக் கலித்துறை வகையில் அமைந்துள்ள காரணத்தால்)—ஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் பதிப்பைப் பார்க்கவும்

218. பிறப்பு

['யாக்கை' 'வாழ்க்கை' என்னும் தலைப்பு 237 பார்க்க]

இடர்ப் பிறவி 51-4
உறங்கி விழித்தால் ஒக்குமிப் பிறவி 3-4
எங்கோன் உனை வேண்டிக்கொள்வேன் பிறவாமையே 92-3
எழுபிறப்பு 40-5
ஏழ் பிறப்பு 97-8
நீடு பொக்கையிற் பிறவியைப் பழித்து 64-10
பாழ்போவது பிறவிக் கடல் 78-1
பிணி கொளாக்கை பிறப்பிறப்பு 64-2
பிறவிப் படுகடற் பரப்பு 67-7

மலங் தாங்கிய பாசப் பிறப்பு 82-6
மறுபிறப்பு 67-3
மறுமைப் பிறப்பு 59-5
முன்னை முதற் பிறவி 33-3

219. புகழ்

அந்தமில் புகழ் (அந்தமில் புகழாள் உமை) 61-8
அருமையாம் புகழ் (அருமையாம் - புகழார் சம்பந்தர்) 14-11
*அற்றமில் புகழ் (அற்றமில் புகழாள் உமை) 61-2
எண்ணில் தொல் புகழ் (எண்ணில் தொல் புகழாள் உமை) 61-7
எல்லையில் புகழ் (எல்லையில் புகழாள் உமை) 61-5
சீர்கொண்ட புகழ் (சீர்கொண்ட புகழ் வள்ளல் சிறப்புலி) 39-6
சொல்லரும் புகழ் (சொல்லரும் புகழான் தொண்டைமான்) 69-10
திகழ் புகழ் 82-4
திருப்புகழ் 69-2, 4
தொல் புகழ் 15-10, 61-7, 9
நிறை புகழ் (நீதிவேதியர் நிறை புகழ்) 65-6
பரந்த தொல் புகழ் (பரந்த தொல் புகழாள் உமை) 61-9
பழிசேரில் புகழ் (பழிசேரில் புகழான் பரமன்) 23-10
பாயின புகழ் (பாயின புகழான் பாச்சிலாச் சிராமத்தடிகள்) 14-12
புகழ் 66-5, 73-11
வீடிலாத வியன் புகழ் (வீடிலாத வியன் புகழானை...பிரானை) 56-7

220. பூதம் (பாரிடம்)

ஆளும் பூதங்கள் 62-8
குறட் பாரிடங்கள் 9-8
குறள் படை 85-8
சில் பூதம் 2-1, 6
பரந்த பாரிடம் 76-6, 83-8
பல பூதம் 11-3
பாரிடங்கள் 2-3, 53-5
பூதங்கள் 2-3, 62-8
பூதம் 18-5, 46-6, 53-1, 55-3, 62-1, 70-1

* அற்றம் - அழிவு, பொய்.

221. பேய்

[தலைப்பு 130 'சிவனும் பேயும்' பார்க்க]

ஈமப் புறங்காட்டிற் பேய் 52-9
எரிதலைப் பேய் 44-4
குழிகட்...பேய் 10-2
கூறுநடைக் குழிகட் பகுவாயன பேய் 10-2
சமண் சாக்கியப் பேய்கள் 15-9
சமண் சாக்கியப் பேய் (மிண்டர்) 15-9, 99-10
துட்டராயின பேய்கள் 46-4
தெள்ளிய பேய் 11-3
பகுவாயன பேய் 10-2
பறைக்கண் நெடும் பேய்க்கணம் 9-8
புலால் வாயன பேய் 2-5
பெரும் பேய் 2-8
பேய்க்கணம் 9-8, 85-8
பேய்கள் வாழும் மயானத்து 53-3
பேய் சூழ்தல் 41-6
பேய் மாறாப் பிணமிடுகாடு 96-3
பேயாய்த் திரிந் தெய்த்தேன் 1-2
பேயுருவம் 38-9
பேயுருவ மூன்றும் 38-9
பேயோ டேனும் பிறிவொன் றின்னாது 95-9
மொய்த்த பல பேய் 2-3

222. பொருள், பொருளழகு

1.

உள்ளத் துள்ளே நின்ற ஒண்பொருள் 45-4
உள பொருள்கள் 75-1
ஒண்பொருள் 45-4, 60-7
தாருகனைப் பொருது பொன்றுவித்த *பொருளினை முன்படைத்துகந்த புனிதன் 16-9
பாடிப் படைத்த பொருள் 43-5
பொருள் 60-9
மெய்ப்பொருள் 59-1, 60-5, 69-1, 73-8

---

* பொருள் - மகன், கடவுள்.

2. பொருளழகு

1. ஆர்த்தார் மூஎயில் எய்து சுடுநுனைப் பகழிய தொன்றால்,
   பார்த்தனார் திரள் தோள்மேல் பன்னுனைப் பகழிகள்
   - பாய்ச்சி 76-3

[ஆர்த்தார் கொடியோர் பலர் மேல் எய்தது பகழி-அம்பு ஒன்று, ஆனால், ஆத்தன்-அருச்சுனன் ஒருவன்மேல் எய்தது பகழி அம்பு பல]

2. பாம்பணை யானுக்கும், பாவை நல்லாள் தனக்கும்,
   மால்விடை ஏற்றுக்கும் பாகன் 17-9

[மாலுக்குப் பாகன் (இடது பாகம் கொடுத்தவர்), தேவிக்குப் பாகன் (கணவன்), விடைப்பாகன் (விடை ஊர்பவன்) 'பாகன்']

223. பொழிலும் சோலையும்

1. சோலை

அளிக்கும் ஆத்தி* அல்லான் மதுவம் துளிக்கும் சோலை	94-4
அன்றில் முட்டா தடையும் சோலை	95-3
ஆயம் பேடை அடையும் சோலை	95-7
ஆலும் மயிலும் ஆடல் அளியும் சோலை தருநீர்	94-3
இலைகள் சோலை	37-5
கதலிவனம் தழுவு பொழிற் சோலை	40-9
கந்தார் சோலைகள்	27-5
கருக்கு வாய்ப் பெண்ணையொடு தெங்குமலி சோலை	40-5
கழைக் கரும்பும் கதலிப் பலசோலை	58-4
கறையார் சோலைகள்	27-2
கனிகள் பலவுடைச் சோலைக் காய்க் குலையீன்ற கமுகின்	73-2
கனிவினிய கதலிவனம் தழுவு பொழிற்சோலை	40-9
காலை வண்டு பாட மயிலாலும் வளர்சோலை	40-4
குரங்காடு சோலை	92-5
குலைமலிந்த கோட்டெங்கு மட்டொழுகும் பூஞ்சோலை	30-11
குழை யணி திகழ் சோலை	85-7
கொங்கார்ந்த பொழிற்சோலை சூழ்கனிகள் பல உதிர்க்கும்	30-9
கொய்ம்மாவின் மலர்ச்சோலைக் குயில்பாட மயிலாடும்	30-1
கொய்யணி மலர்ச் சோலை	85-2
கொய்யுலா மலர்ச்சோலை	30-6
செண்பகச் சோலை	69-3
செந்தண் பவளம் திகழும் சோலை	95-5
செருந்தி செம்பொன் மலரும் சோலை	95-10
செறிந்த சோலைகள்	68-10
சோலை	16-3

* அல்லால் - இருளில், இரவில்.

223. பொழிலும் சோலையும்

தெங்குமலி சோலை	40-5
தேனுண் பொழில் சோலை	79-9
நல்லார் தூநீலம் கண்வளரும் சூழ்கிடங்கின் அருகே கனிவினிய கதலிவனம் தழுவு பொழிற் சோலை	40-9
நீடுயர் சோலை	3-4
பக்கமே குயில் பாடும் சோலை	36-9
பணையிடைச் சோலை	8-6
பாடல் வண்டிசை யாலும் சோலை	36-7
புறைக்காடு சோலை	92-4
புள்ளேறு சோலை	92-9
பூஞ்சோலை	30-11
பெண்ணையொடு தெங்குமலி சோலை	40-5
பைந்தண் மாமலர் உந்து சோலைகள் கந்த நாறு பைஞ்ஞீலி	36-4
பொழில் சோலை	79-9
பொழிலாருஞ் சோலை	92-2
பொழிற் சோலை	30-9, 40-9
மட்டவிழ் சோலை	59 2
மட்டொழுகும் பூஞ்சோலை	30-11
மடையெலாம் கழுநீர் மலர்ந்து, மருங்கெலாம் கரும்பாடத், தேன் புடையெலாம் மணம் நாறு சோலை	35-6
மணநாறு சோலை	35-6
மதுவம் துளிக்கும் சோலை	94-4
மயிலார் சோலைகள்	86-6
மலர்ச் சோலை	30-1, 6
மாட மதிலணி கோபுரமணி மண்டபம் மூடி முகில்தவழ் சோலை	43-5
முகில் தவழ் சோலை	43-5'
முருகமர் சோலை	69-1
மைந்தார் சோலைகள்	24-7
வண்டிசையாலும் சோலை	36-7

2. பொழில்

அணிபொழில்	16-1, 35-7
அணிமயில்கள் நடமாடு மணிபொழில்	16-1
அணியார் பொழில்	4
அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட அணிமயில்கள் நடமாடு மணிபொழில்	16-1
அறுகால் வண்டாடு தண்பொழில்	71-9
அன்னச் சேவலோடேடிப் பேடைகள் கூடிச் சேருமணி பொழில்	35-7

ஏரார் பொழில் 32-10
ஏராரும் பொழில் 89-11
ஒண்பொழில் 84-10
கடிபொழில் 16-9
கடியார் பூம்பொழில் 27-1
கதலி வனம்தழுவு பொழிற்சோலை 40-9
கரடியும் மானும் மரையினமும் மயில் மற்றும்பல எல்லாம்
தேனுண் பொழில்சோலை மிகு சீபர்ப்பத மலையே 79-9
கரும்பனை வெண்முத்தரும்பிப் பொன்மலர்ந்து பவளக்
கவின்காட்டும் கடிபொழில் 16-9
கனிவினிய கதலிவனம் தழுவு பொழிற்சோலை 40-9
காரார் பூம்பொழில் 27-7
காராரும் பொழில் 26-10, 28-10
காரிரும் பொழில் 5-6
காரூர் பொழில்கள் 47-4
குரவ நாறக் குயில் வண்டினம் பாடநின் றரவம் ஆடும்பொழில் 37-9
குரவம் பொழில் 32-6
குரவமரும் பொழில் 20-6
குறையாப் பொழில் 32-7
குன்றாப் பொழில் 32-2
கொங்கணை வண்டரற்றும் குயிலும் மயிலும் பயிலும்
தெங்கணை பூம்பொழில் 99-11
கொங்கார்ந்த பொழிற் சோலை 30-9
கொங்குலாம் பொழில் 62-2
கொத்தலரும் பொழில் 85-6
கொத்தார் பொழில் 32-3
கொந்தணவும் பொழில் 25-7, 85-3
கொய்யார் பொழில் 32-5
கோதில் பொழில் 20-3
சிமயமார் பொழில் 64-9
சிறையார் பொழில் 80-10
சிறைவண்டார் பொழில் 70-6
சீதப் புனலுண் டெரியைக் காலும் சூதப்பொழில் 94-6
சூதப்பொழில் 94-6
செழும் பொழில் 55
செறிந்த பூம்பொழில் தேன் துளி வீசும் 88-6
சேடுலாம் பொழில் 64-10
தண்பொழில் 69-3
தாழைப் பொழில் 71-1
திணி பொழில் 69-7

திணியும் வார்பொழில் 61-2
தெங்கணை பூம்பொழில் 99-11
தெங்கம் பொழில் 80 5
தேமாம் பொழில் 79-1
தேனுண் பொழில் 79-9
நல்லார்...கனிவினிய கதலிவனம் தழுவு பொழிற்சோலை 40-9
நறவம பூம்பொழில் 34-11
நாதகீதம் வண்டோது வார்பொழில் 83-10
நிரையார் கமுகும், நெடுந்தாட் டெங்கும், குறுந்தாட் பலவும் விரவிக் குளிரும் விரையார் பொழில் 42-3
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெழில்பெற நின்ற காவிரிக் கோடு 48-7
பலங்கிளர் பைம்பொழில் பனிவெண் மதியைத் தடவ 93 2
பூம்பொழில் 24, 27-1, 7; 34-11, 55-3, 83-6, 99-11
பைந்தண் மாதவி புன்னையும் ஆய பைம்பொழில் 36-3
பைம்பொழில் 36-3, 56-4, 76-7, 93-2
பைம்பொழில் விளாகம் 8-6
பொழில் 9, 12-10, 39-7, 41-4, 55, 76-10, 79-1
பொழில் சோலை 79-9
பொழிலாரும் சோலை 92-2
பொழிலின் தேன் 82-1
பொழிற் சாரல் 79-2
பொழிற் சோலை 40-9
மட்டுண்டு வண்டாலும் பொழில் 80-8
மண்ணார் பூம்பொழில் 24-5
மாதவர் வளரும் வளர்பொழில் 87-10
மாம் பூம்பொழில் 24-3
மாவின்கனி தூங்கும் பொழில் 80-9
மூடத்தாழை யீன்று மொட்டலர்ந்து விரைநாறு முருகு விரி பொழில் 40-1
முருகு விரி பொழில் 40-1
மைம்மாம் பூம்பொழில் 24-3
மையார் பூம்பொழில் 24-8
வண்டாடு தண்பொழில் 71-9
வண்டார் பூம்பொழில் 24-4
வயலணி பொழில் 72-8
வளங்கனி பொழில் 29-10
வளர்பொழில் 38-10, 87-1, 10
வன்பனைய வளர்பொழில் 38-10
வார்பொழில் 64-2, 88-10

வானோர்மதியம் பதிவண் பொழில்வாய்த் தேனார் நறையூர் 93-6
விரிபொழில் 39-1, 40-1
விரையார் பொழில் 42-3

224. மக்களைக் குறிப்பன

அகலிடத்தவர் 62-5
*அங்கம் மொழி யன்னாரவர் 80-3
அஞ்சினார்க்கு 48-5
அடியார் 47-5
அப்பாலும் அடிச் சார்ந்த அடியார் 39-10
அருமையாம் புகழார் 14-11
அழகுடை ஐயன் 34-10
அற்றார் 3-3
ஆகமங்கள் அறிவார் 100-8
ஆகம சீலர் 96-6
ஆறலைப்பார் 92-3
இரப்பார்கள் 60 4
இருங்குலப் பிறப்பர் 72-10
இளையவர் 60-9
இளையன் 34-6
ஈக்கும் ஈகிலன் 34-8
உலகவர் 51-12
உலகில் உள்ளார் 91-8
ஊரன்...தமிழ்மாலை செம்மாந்திருந்து திருவாய் திறப்பார் 47-10
எங்கள் பிரானை அறியாதார் 86-7
எங்கள் பிரானை உணராதார் 86-2
எங்கள் பிரானை நினையாதார் 86-8
எங்கள் பிரானைப் பாவாதார் 86-5
எத்தவத்தோர்களும் 43-11
எத்திசையும் புகழ் மன்னி இருப்பவர்கள் 84-10
எமர்கள் 79-7
ஒன்னலர் 89-9
ஓதுவார் 88-10
கண்டகர் 43-3
கண்ணறையன் 46-9
கலைமலிந்த தென் புலவர் 30-11
கலையார் மாதவர் 27-10

---

* வேதாங்கங்களை எடுத்துரைக்கும் அந்தத் தன்மை வாய்ந்தவர் என்பது ஒரு பொருள். "அங்கம் மொழியன்னாரவரமரர் தொழுதேத்த" என்பதை "அங்கம் ஒழி அந்நாள் அரவமரர் தொழுதேத்த" எனத் திருத்திக்கொண்டு திருமாலால் புடைக்கப்பட்ட உடம்பு இரு கூறுகிய அந்நாளில் 'அரவமரர்' (அரவின் வடிவு தாங்கி அமரராய் நின்ற ராகு கேதுக்கள்) தொழுதேத்திய தலம் திருக்கேதீச்சரம் எனப் பொருள் காண்பர். கேது பூசித்ததால் கேதீச்சரம் எனப் பெயர் போந்தது என்பர்.

"செய்ய கேது தலையற்ற அந்நாள்
திருந்தும் பூசைகள் செய்து முடிப்பேன்"
—கதிரைமலைப்பள்ளு, பக்கம் 86, 87.

அங்ஙனம் திருத்தாமலே 'அங்கம் மொழியன்னாரவரமரர்' என்பதற்கு (மாறுபட்ட) அங்கவிசேடமே இவர்கள் இன்னார் என மொழியும் (வெளிப்படுத்தும்) ராகு கேதுக்களும், அமரர் (தேவர்களும்) தொழுதேத்தும்' எனப் பொருள் எளிதில் காணலாம்.

கற்ற பெரும்புல வாணர் 73-3
கற்றவர் 48-1, 61-11
கற்றிலாதான் 34-9
கற்று நல்லன் 34-3, 9
கற்றோர் 30-11
கறவிலா மனத்தார்கள் 76-2
காணியேற் பெரிதுடையான் 34-3
கிழக்கே சலம் இடுவார் (அந்தணர்) 78-4
கிழவன் 34-4
குணத்தினர் 34-10
குலமிலாதான் 34-6
குலவன் 34-6
குவலயத்தோர் 64-5
குழை காதற் கடிமைக்கட் குழையாதார் 36-9
குறத்திகள் 43-7
கூழை மாந்தர் 6-9
கூழையர் (அடியார் கூட்டத்தில் கடையில் நிற்பவர்) கூழையராகிப் பொய்யே குடியோம்பிக் குழைந்து மெய்யடியார் குழுப்பெய்யும் வாழியர் 67-3
கூறை கொண் டாறலைப்பார் 92-3
கொடியார் 32-9
கொடுக் கிலாதான் 34-2
கொடுப்பார் 34
கொடும் பாடன் 46-9
கோணாதார் 86-4
சங்கை யவர் 10-9
சந்தம் இசையொடும் வல்லார் 73-11
சடையிற் கங்கை தரித்தானைச் சாராதார் 86-1
சழக்கர் 32-4
சழக்கன் 34-5
சாது 34-5
சார்ந்தவர் 73-7
*சால நல அழகுடை ஐயன் 34-10
சித்தத்தைச் சிவன் பாலே வைத்தார் 39-10
சித்தர் 52-10
சிறந்தார் சுற்றம் திருவென்றின்ன துறந்தார் 94-7
சிறியார் 4-3
சீரார்ந்த அன்பர் 90-2
சுற்றம் நன்கினை பேணியே விருந்தோம்பு(வோன்) 34-3
செடிச்சிகள் 43-7
செத்தார் 46-1, 80-1
செம்மையாளர் 6-10
சைவர் 93-9
சோணாட்டவர் 87-6
தகு சைவர் 93-9
தடந்தோளன் 34-7
தண்டமிழ் நூற்புலவாணர் 96-6
தத்துவ ஞானிகள் 43-11
தமர் 93-9
தமிழ் பாட வல்லார் 57-12
தவத்தின் மிக்க நமர் 93-9
தாய் 34-7
திடங்கொள் சிந்தையினார் 88-2
திருவாரூர்ப் பிறந்தார்கள் 39-10
திருவினார் 90-2
தீயர் 32-4
தீயராக்†குலை யாளர் 88-9
துறந்தார் 94-7
தூர்த்தர் 76-3
தெவ்வர் 57-5
தென்புலவர் 30-11
தொடர்ந்தவர் 73-3
தோத்திரமும் பல சொல்லித் துதித்து இறைதன் திறத்தே கற்பாரும் கேட்பாரும் 16-5
நம்பினார் 83-1
நரைகள் போந்து மெய் தளர்ந்து மூத்துடல் நடுங்கி நிற்குமிக் கிழவன் 34-4

---

* 'சாலநல் வழக்குடையனே' என்றும் பாடம்.

† 'கொலையாளர்' என்றும் பாடம்.

நரைத்த மாந்தர் 34-6
நல்லவர் 48-4, 56-10, 69-10
நல்லன் 34-6
நல்லார் 82-2
நல்லாரவர் 79-10
நலமிலாதான் 34-6
நற்பதம் என்றுணர்வார் 84-3
நாவலர் (திருநாவலூரர்) 57-12
நீதி நிறைந்தவர் 45-5
நாவலாரூரன் உரைதருமாலை யோரஞ்சி னோடஞ்சும் உள் குளிர்ந்தேத்த வல்லார்கள் 69-11
நீற்றுரு மேனியர் 30-2
நெறியில் வழுவா நியமத்தவர்கள் 93-10
நொய்ய மாந்தர் 34-7
நோயன் 34-7
பஞ்ச துட்டன் 34-5
பண்ணிசையார் மொழியார் 11-2
பத்தர் 52-1, 10; 84-10
பத்தராய்ப் பணிவார்கள் 39-10
பயிலப் புகுவார் 10-5
பரமனையே பாடுவார் 39-10
பனங்காட்டூர் பயில்வானுக்கு அடிமைக்கட் பயிலாதார் 86-6
பாருளார் 56-1
பாரோர் 24-10, 27-7, 28-10
பாவம் வினை அறுப்பார் 80-9
பாவி(கள்) 34-5, 49-3
பிள்ளையினம் துள்ளி விளையாட்டொலி 16-2
புண்ணியர் 33-10
புல்கியும் தாழ்ந்தும் போந்து தவஞ்செய்யும் போகரும் யோகரும் 74-3
புலவர் 30-11, 87-6, 96-2
புலவாணர் 73-3, 96-6
புலவீர்காள் 34
புலவோர் 34-7
பெண் ஆண் ஆய பிரானைப் பேசாதார் 86-3
பெண்டிர் 57-5
பெரியவர் 51-12
பெரியார் 4-3
பெரியோர்(கள்) 10-10, 90-3
பெருங்குலத்தவர் (சிவனடியார்) 72-11
பெரும்புல வாணர் 73-3
பெருமையார் 90-4
பெற்றொன்றேறும் பிரானைப் பேசாதார் 86-4
பேராளர் 90-2
பொதியே சுமந்துழல்வீர் 78-9
பொய்ம்மையாளர் 34-1
போகர் 74-3
மக்கள் 57-5
மண்டல நாயகர் 34-10
மண்ணவர் 85-5, 87-8
மண்ணுளார் 62-2
மதிமாந்திய மாந்தர் 73-4
மதியுடையவர் 5-3
மருவார் 76-1
மறை நாவர்(ன்) 30-8, 39-11
மறையோர் - தலைப்பு 230 பார்க்க.
மாசழக்கன் 34-5
மாந்தர் 34-6, 7; 60-9 62-10, 78-4
மாறலார் 74-10
மிடுக்கிலாதான் 34-2
மிண்டர் 73-8
முப்போதும் திருமேனி தீண்டுவார் 39-10
முழுநீறு பூசிய முனிவர் 39-10
முற்றன் 34-9
முற்றிலாதான் 34-9
முனிபவர் 73-2
மூர்க்கன் 60-4
மெய்த் தவத்தோர் 75-4
மெய்யடியார் 67-3

மெய்யர் 45-11
மெய்யிலாதவர் 57-11
மேலையார் 96-7
மைந்தன் 34-8
யோகர் 74-3
வஞ்சங் கொண்டார் 19-5
வஞ்ச நெஞ்சன் 34-5
வஞ்சமற்ற மனத்தார் 86-8
வஞ்சர் 84-7
வடுகர் 49-1
வடுக வேடுவர் 49-1
வண்டமிழ் வல்லவர்கள் 83-6
வருங்கலமும் பலபேணுதல் சருங்கடல் இருங்குலப் பிறப்பர் 72-11
(வணிகர்-நெய்தல் நிலத்தவர்)
வரைகள் போல் திரள் தோளன் 34-4
வழக்கில்லி 34-5
வழக்குடையன்... 34-10
வள்ளல் 34-8
வன்றொண்டன்...தண்டமிழ் மலர் பத்தும் வல்லார்கள் 70-10
வாளிகள் (வாள்வீரர்) 43-3
வில்லிகள் 43-3
விழுமிய தாய்...புலவோர்க் கெலாம் 34-7
வெருண்டவர் 73-5
வேடர்(கள்) [கொடியார் பலர் வேடர்கள்] 32-9, 42-8, 49-3
வேடித்தொண்டர் சாலவும் தீயர், சழக்கர் 32-4
வேடுவர் 49-1, 4
வேத நீதியர் 83-10
வேத வித்தல்லாதவர்கள் 45-1
வேத வேதியர் 83-10

225. மந்திரம்

ஆறெழுத்து
உகந்தார் எழுத்தாறும் 19-8
மந்திரம் ஒன்றறியேன் 100-3
மந்திரம் ஓதுவர், மாமறை பாடுவர், மான்மறியர் 18-9
மந்திர மாமுனிவர்...இவன் ஆரென...ஊரன் என்றான் கொடித்தான்மலை உத்தமனே 100-9
மாலொடு நான்முகன் இந்திரன் மந்திரத்தால் வணங்க நீல நஞ்சுண்டவர் 19-9

சமணர் மந்திரம் ஓதும் முறை
தங்கள் கூறையொன் றின்றியே ஞமண ஞாஞண ஞாண ஞோணமென் றோதி யாரையும் நாணிலா அமணர் 33-9

226. மரம், செடி, கொடி, மலர், தளிர், அரும்பு, பயிர், பாளை, குரும்பை முதலிய

அகில் 16-4, 7; 42-2, 8; 60-10, 74-4, 6; 99-5
கல்வாய் அகில் 3-1
காரகில் 9-1, 57-7

கந்தங் கமழ் காரகில் 13-8
காரகிற் குறடு 69-5
மன்னு காரகில் 36-2
சிகர முகத்தில் திரளார் அகில் 8-7
தண்ணார் அகில் 42-4

அடும்பு 72-6

பெ(ண்)ணை அடும்பொடு விரவியமருங்கு 72-6

அரவிந்தம் (தாமரை—பார்க்க)

அரும்புயர்ந்த அரவிந்தத் தனி மலர்கள் ஏறி அன்னங்கள் விளையாடும் 40-3

அரும்பு

அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண் பாட 16-1
அரும்பார்ந்தண மல்லிகை செண்பகம் 13-4
அரும்பு 58-6
அரும்புடை மலர்ப் பொய்கை 29-5
அரும்புயர்ந்த அரவிந்தத் தனிமலர்கள் 40-3
புன்னை மாதவித் தொகுதி என்றும் அரும்புவாய் மலரும் 8-5

அல்லி

அரும்புடை மலர்ப் பொய்கை அல்லி 29-5
அல்லிமென் முல்லையந்தார் 39-1
அல்லியந் தாமரைத் தார் 22-10
அல்லியிடைப் பெடை வண்டுறங்கும் 10-8
அல்லிவண் டியங்கும் ஆரூர் 8-4

அலர் ('மலர்'—பார்க்க)

அடிமேல் அலரிட்டு நல்ல தொண்டங் கடிபரவி 22-2
அரும்பினை அலரினை 58-6
அலர்கொண் டடிசேர்வறியா வஞ்சனை 100-6
அலர்கொண்டு முன் வந்திறைஞ்ச 100-7
கோங்கலர் 3-4
வேங்கை அலர் 3-4

ஆத்தி

அளிக்கும் ஆத்தி *அல்லான் மதுவம் துளிக்கும் சோலை 94-4

ஆல்

ஆலதன் கீழிருந் தறமே புரிதற்கு 99-2
ஆலின்கீழ் உரைத்த அறவனை 8-7

---

* அல்லால் - (அல் - இரவு) இரவில்.

குளங்கள் ஆல் நிழற்கீழ் நற்குயில் பயில் வாஞ்சியம் 76-8
கோல ஆல் நிழற்கீழ் அறம் பகர 65-6
பொழில்கொள் ஆல் நிழற்கீழ் அறம் புரிந்து 55-7

இஞ்சி 42-1

இதழி ('கொன்றை'—பார்க்க)
கொத்தலரும் இதழித் தொத்து 84-5

இலவங்கம் 16-9, 42-1

இலவு
இலவிதழ் வாய் 46-6

இலை
இலையால் அன்பால் ஏத்தும் அவர்க்கு 94-9

எருக்கு
எருக்க நாண்மலர் இண்டை 31-7
துன்னெருக்கு 2-3
வெள்ளெருக்கமும் சடையதாம் 36-8

ஏலம் 9-7, 16-9, 42-1
ஏலவார் குழலாள் உமை 61-1

ஏனல்
ஏனல்லவை மலைச்சாரலில் 79-9
கொய்புன(ல்) ஏனல் 74-2

ஐவணம் (மலை நெல்) 60-10, 74-2

கச்சி
*கச்சியூர் கச்சி 31-4

கண்டல் (நீர்முள்ளி)
கண்டல்...சூழ் கடற்கரை 12-2
கண்டலங் கழிக்கரை 58-5

கதலி (வாழை—பார்க்க) 74-4
கதலிக் கனி 9-9
கதலிப் பல சோலை 53-4
கிடங்கின் அருகே கனிவினிய கதலிவனம் தழுவு பொழிற்சோலை 40-9

* கச்சி - சீந்தில் - படர்கொடி வகை.

கமலம் ('தாமரை'—பார்க்க)

அந்நலங் கமலத் தவிசின்மேல் உறங்கும் அலவன் 69-4
எரிக் கனகக் கமல மலரன்ன சேவடி 43-2
கமலங்கள் முகமலரும் 16-1
கயல்மண்டக் கமலம் களிவண்டின் கணம் இரியும் 16-2
குளத்திடை மடைதொறும்...கமலம் 29-2
செய்யார் கமலம் 13-11
செய்யார் பைங்கமலம் 21-7
சேறுவினிற் செழுங்கமலம் ஓங்குதென் புகலூர் 34-11
தண் கமலப் பொய்கை 16-10
நறக்கொள் கமலம் நனிபள்ளி எழ 93-4
பாயுநீர்க் கிடங்கார் கமலமும் 36-3
பொற்றிரள் மணிக் கமலங்கள் மலரும் பொய்கை 55-4
மடைமலி வண்கமலம் மலர்மேல் மடஅன்னம் மன்னி 98-7
முகிழ்மென் முலையார் முகமே கமலம் 93-3

கமுகு

இளங்கமுகின் முதுபாளை 99-4
கண்கமுகின் பூம்பாளை மதுவாசம் கலந்த கமழ் தென்றல் 16-10
கண்டார்தம் கண்குளிரும் களிக் கமுகம் பூஞ்சோலை 30-10
கமுகின் பழுக்காயும் 9-9
*கரவில் அருவி கமுகுண்ண 77-1
களிக் கமுகம் பூஞ்சோலை 30-10
கனிகள் பலவுடைச் சோலைக் காய்க் குலையீன்ற கமுகு 73-2
நிரையார் கமுகு 42-3
பாளை ஒண் கமுகம் 37-4
பாளைபடு பைங்கமுகின்...தேறல் 40-4
முன்றில் இளங் கமுகின் முதுபாளை மது அளைந்து தென்றல் புகுந்துலவும் 99-4

கரந்தை 76-6, 96-10

சடைமேலும் நாறு கரந்தையோ 33-2

கரும்பு

இன்கரும்பின் சுவை 100-10
என் பிறவி வேரறுக்கும் கரும்பினை 58-6
கட்டியின் கரும்போரங்கிய நீடூர் 56-7
கட்டியைக் கரும்பின் தெளிதன்னை 59-10
கருப்பாலை 77-1
கருப்புச் சிலைக் காமனை 9-4

---

* எப்பொழுதும் நீர் பாயும்.

கரும்பருகே கருங்குவளை 16-1
கரும்பார் மொழிக் கன்னியர் 13-4
கரும்பாருங் கழனி 23-4
கரும்பாரும் வயல் 27-9
கரும்பின் தெளிதன்னை 59-10
கரும்புயர்ந்து பெருஞ் செந்நெல் நெருங்கி விளைகழனி 40-3
கரும்பு வில்லின் மலர்வாளிக் காமன் 16-9
கரும்பே என்கட்டி 38-3
கழைக்கரும்புங் கதலிப் பலசோலை 58-4
கழைக்கொள் கரும்பு 9-9
*கற்றினம் நன்கரும்பின் முளை கறி கற்கக் கறவை 16-5
குருகு பாயக் கொழுங் கரும்புகள் நெரிந்த சாறு 37-1
சடையுடைக் கரும்பு 62-10
செந்நெலதனயலே தடந்தாள மென்கரும்பின் தாழ் கிடங்கு 40-8
தீங்கரும்பின் ஊறலிருந் தேனை 40-7
தெங்கங் குலைக்கீழ்க் கருப்பாலை 77-1
மருங்கெலாம் கரும்பாடத் தேன்புடையெலாம் மணநாறு
சோலை 35-6
வேம்பினொடு தீங்கரும்பு விரவி 46-2

கல்லால்

கல்லால் நிழற்கீழ் அறங்கள் உரைத்த அம்மானே 41-3
கல்லாலா 47-8
மறை நான்கும் கல்லால் நிழற்கீழ்ப் பன்னிய எங்கள் பிரான் 22-1

கழுநீர்

கமழ் கழுநீர் கவர்கழனி 16-6
கழுநீர் கமழக் கயல் சேல் உகளும் செழுநீர் 93-5
குளத்திடை மடைதோறும் காவியும் குவளையும் கமலம்
செங்கழுநீரும் மேவிய குருகாவூர் 29-2
கோல மலர்க்குவளைக் கழுநீர் வயல்சூழ் கிடங்கு 99-3
செங்கழுநீர் 46-2
சேம்பினொடு செங்கழுநீர் தண்கிடங்கில் திகழும் திருவாரூர் 46-2
நாறு செங்கழுநீர் மலர் 87-2
மடையெலாம் கழுநீர் மலர்ந்து 35-6

கழை ('கரும்பு'—பார்க்க)

கரும்பின் தாழ்கிடங்கின் அருகே கழைதழுவித் தேன்
தொடுக்கும் கழனி 40-8
கழைக் கரும்புங் கதலிப் பலசோலை 58-4

---

* கற்றினம் - கன்று இனம்.

கழைக்கொள் கரும்பு 9-9
கழைக்கொள் பிரசம் 77-5
கழை தழுவித் தேன் தொடுக்கும் கழனி 40-8
கழைநீர் முத்து 94-1

கள்ளி

கள்ளி வற்றிப் புல்தீந்து வெங்கானம் கழிக்கவே, புள்ளி மானினம் புக்கொளிக்கும் புனவாயிலே 50-8
பிறவு கள்ளியின் நீள்கவட்டேறித் தன் பேடையைப் புறவங் கூப்பிட 50-6

கறி ('மிளகு'—பார்க்க)

காவி

காவியங் கண்ணி பங்கனை 68-3
காவிவாய் வண்டு பல பண்செய்யும் கழனி 40-10
குளத்திடை மடைதோறும் காவியும் குவளையும் கமலம் செங்கழுநீரும் மேவிய குருகாவூர் 29-2

குங்குமம்

குங்குமங்கள் உந்திவரும் கொள்ளிடம் 40-6

குரவு

குரவம் அரவின் எயிறேற் றரும்ப 99-2
குரவம் நாறக் குயில் வண்டினம் பாடநின், றரவம் ஆடும் பொழில் 37-9
குரவம் நாறிய குழலினார் 36-6
குரவம் பொழில் சூழ்தரு கோடி 32-6
குரவமரும் குழலாள் உமை 20-6
குரவு கொன்றை...விரவுகின்ற சடையுடையீர் 6-8
குரவோடரக் கூவிளமும் மிளிர்தரு புன்சடை 98-8
குரா வகுளம் குருக்கத்தி 10-8
கொங்குலாம் பொழிற் குரவெறி கமழும் கோலக்கா 62-2

குருக்கத்தி

குளிர் *மாதவி மவ்வல் குரா வகுளம் *குருக்கத்தி புன்னை 10-8
தழைமா முடப்புன்னை ஞாழல் குருக்கத்திகள் மேற் குயில் கூவல் அறா...வெஞ்சமாக் கூடல் 42-1

---

* மாதவி - குருக்கத்தி - என்றதனால் இங்கு மாதவி வேறு, குருக்கத்தி வேறு எனத் தெரிகின்றது. மாதவி - குருக்கத்தி—சிந்தா. 1322. மாதவி, குருக்கத்தி, மாலதி, மௌவல் ஒருபொருட் கிளவிகள். தக்கயாகப்பரணி—விசேடவுரை, பக்கம்-279; மாதவி - துளசி எனலுமாம்.

குருந்து

குருந்தயலே குரவம் அரவின் எயிறேற் றரும்ப 99-2

குரும்பை

குரும்பை முலை 16-1

குல்லை

குறையணி குல்லை (குல்லை - துளசி, வெட்சி) 99-1

குவளை

அருவி பாய்தரு கழனி யலர்தரு குவளை(யங் கண்ணார்) 76-7
கடைகள் விடுவார் குவளை களைவாருங் கழனி 40-6
கரும்பருகே கருங்குவளை கண்வளரும் கழனி 16-1
கள்வாய கருங்குவளை கண்வளரும் கழனி 40-1
குளத்திடை மடைதோறும் காவியும் குவளையும் 29-2
கொங்கையார் பலரும் குடைந்தாட நீர்க்குவளை மலர்தர 87-5
கோலமலர்க் குவளைக் கழுநீர் வயல் 99-3

குழை (தளிர்)

குழையணி திகழ்சோலை 85-7

குன்றி

குன்றி போல்வதோர் உருவரோ
(குன்றி - குன்றிமணி, குண்டுமணி) 33-3

கூவிளம் 44-7, 96-10

கூவிள மலரும் விரவிய சடைமுடி 58-10.
கூவிள மாலை 76-6
கூவிளமும் மிளிர்தரு புன்சடை 98-8
கொய்த கூவிளமாலை—குலாவிய சடைமுடி 76-5

கேதகை (தாழை—பார்க்க)

கேதகையும் பருகிக் கலங்கு புனல் அலம்பி வரும் அரிசில் 16-7

கைதை (தாழை—பார்க்க)

கடலிடையிடை கழியருகினிற் கடிநாறு தண் கைதை மடல்
இடையிடை வெண்குருகெழு மணிநீர் மறைக்காடே 71-6
கைதை நெய்தலங் கழனி கமழ்புகழ் வாஞ்சியம் 76-5

***கொகுடி** (கொகுடி - முல்லைக்கொடி வகை)

---

* கொகுடிமுல்லை குவிந்தெங்கும் மொய்ம்பார் சோலை
—சம்பந்தர் 2-64-6.

கொடி

கொடிகளிடைக் குயில் கூவும் இடம் 10-3
கொடியிடை உமையவள் 69-2
கொடியேரிடையாள் 24-9, 99-4
கொடியேறி வண்டினமும் தண்தேனும் பண்செய்யும் 30-5
பவளக் கொடிகள் 69-5

கொடிமுல்லை ('முல்லை'—பார்க்க)

கொவ்வை ('தொண்டை'—பார்க்க)

கொவ்வைத் துவர் வாயார் 82-3

கொன்றை

அறவிலகும் மருளான் *மருளார் பொழில் வண்டறையும்
நறைவிரி கொன்றையினன் 97-2
எடுலா மலர்க்கொன்றை 36-7
கடிமலர்க் கொன்றை 76-6
கடியார் கொன்றையனே 28-1
கந்தம் கமழ்கொன்றை மாலைக் கண்ணியன் 78-7
களையே கமழும் மலர்க்கொன்றை(யினாய்) 42-5
கார்க்கொள் கொன்றை 77-6
காரூரும் கமழ் கொன்றை நன்மாலை (முடியன்) 59-11
கானக்கொன்றை கமழ மலரும் கடிநாறுடையாய் 41-8
கொங்கார் மலர்க்கொன்றையந் தாரவனே 42-9
கொங்கு நுழைத்தன வண்டறை கொன்றை 10-4
கொத்தார் கொன்றை 53-5
கொன்றை 6-8, 36-8, 70-10
கொன்றைத் தார் 5-6
கொன்றைப் புது வீ 41-1
சுரும்பார் மலர்க்கொன்றை 42-6
சுரும்புடை மலர்க்கொன்றை 29-5
சுரும்புயர்ந்த கொன்றை 40-3
செழுமலர்க் கொன்றை 58-10
தண்கொன்றை 44-7
தார்நிலவு நறுங்கொன்றை 89-7
தீ மலர்ந்த கொன்றை(யினன்) 89-6
தூமலர்க் கொன்றை 57-5
தேனைக்காவல் கொண்டு விண்ட கொன்றைச் செழுந்தாராய் 47-7
தேனையாடிய கொன்றை 54-6, 57-8
தொடைமலி கொன்றை 98-7

* 'மருளார் மொழி' என்னும் பாடம்.

தோடார் மலர்க்கொன்றை 2-3
நறுங்கொன்றை 42-7, 89-5, 7
நறுங்கொன்றை நயந்தவனே 42-7
நறைவிரி கொன்றை(யினன்) 97-2
நீல வண்டறை கொன்றை 75-3
பாலுலா வரி வண்டறை கொன்றைத் தாரனே 48-10
பிறங்கு கொன்றை 81-2
புனக்கொன்றை 77-8
புனைத்தார் கொன்றைப் பொன்போன் மாலை 95-6
பொறிவண் டாழ்செயும் பொன் மலர்க் கொன்றை 59 5
பொன்மலர்க் கொன்றை 59-5
பொன்னவிலும் கொன்றை(யினாய்) 89-9
பொன்னிலங்கு நறுங்கொன்றை 89-5
மட்டார் மலர்க்கொன்றை 13-6
மதுவார் கொன்றைப் புது வீ 41-1
மதுவிம்மு கொன்றைத் தார் 5-6
மருவார் கொன்றை 53-1
மழைக் கரும்பும் மலர்க்கொன்றையினானை 58-4
மாமலர்க் கொன்றை 36-8
மிளிர்கொன்றை யணிந்தவனே 24-1
வண்டலம்பு மலர்க்கொன்றை(யன்) 53-5, 61-4
வண்டறை கொன்றை 10-4
வண்டறையும் நறவிரி கொன்றை 97-2
வம்பறு வரிவண்டு மணநாற மலரும் மதுமலர்
நற்கொன்றையான் 39-5
வாசத்திகழ் மலர்க்கொன்றை யுள்ளார் 19-2
விரைகொள் கொன்றையினானை 75-8
விரைசெய் மாமலர்க் கொன்றை(யினானை) 68-2
விரையார் கொன்றையினாய் 21-8
வெறியார் மலர்க் கொன்றையினாய் 27-1

கோங்கம்—கோங்கு

கொய்யாமலர்க் கோங்கொடு வேங்கையும் சாடி *13-8
கோங்கம் (வேங்கை கோங்கமும்) *36-2, 74-2
கோடுயர் கோங்கலர் (வேங்கை அலர்) *3-4
தளிர் தரு கோங்கு (வேங்கை) *98-8
விரைசேர் தளிர்தரு கோங்கு 98-8

---

* இக்குறி இட்ட இடங்களில் கோங்கும் வேங்கையும் ஒருங்கே கூறப்பட்டது கவனிக்கற்பாலது.

சண்பகம் ('செண்பகம்'—பார்க்க)

சந்தனம்

அகிலொடு சந்து	16-4
அரைக்கும் சந்தனத்தோடகில் உந்தி	60-10
கந்தங் கமழ் காரகில் சந்தனம்	13-3
சந்தகில்	16-7
சந்தனமும் அகிலும்	42-2, 8
சந்தன வேரும் காரகிற் குறடும்	69-5
புகழுமா சந்தனத் துண்டமோ டகிலும்	74-6
பொறியுமா சந்தனத் துண்டமோ டகிலும்	74-4
மலைத்த சந்து	36-2
மலையாரம்	38-5
முரிக்கும் தளிர்ச் சந்தனத்தொடு	9-3
வரைச்சந்தகிலோடும் உந்தி	99-5

சந்தி (மூங்கில்) ('வேய்'—பார்க்க)

சாமரை (சிவதைக் கொடி)

நல சாமரை	42-4

சூதம் ('மா'—பார்க்க)

சூதப் பொழில்	94-6

செங்கழுநீர் ('கழுநீர்'—பார்க்க)

செடி

செடிகொள் கான்	64-3
செடியார் பெண்ணை	1-4

செண்பகம் - சண்பகம்

அரும்பார்ந்தன மல்லிகை செண்பகம்	13-4
காரகில் சண்பகம்	36-2
செண்பகச் சோலை	69-3
தடமாதவி சண்பகமும்	98-8
தெற்றும்கொடி முல்லையொடு மல்லிகை செண்பகமும்	16-6
நல்ல மல்லிகை சண்பகத்தொடு	87-2
*மல்லிகை செண்பகம் புதிய பூ மலர்ந்தெல்லி நாறும்	35-2
மலர்ச் செண்பகம்	99-8
விரிதரு மல்லிகையும் மலர்ச் செண்பகமும் அளைந்து திரிதரு வண்டு பண்செய்	99-8

---

* மல்லிகையும் சண்பகமும் ஒருங்கே கூறியிருத்தல் கவனிக்கற்பாலது. 'மல்லிகை மௌவல் மணங்கமழ் சண்பகம்'—பரிபாடல், 12-77.

செருந்தி
செருந்தி செம்பொன் மலரும் சோலை இதுவோ திருவாரூர் 95-10
செருந்தி செம்பொன் மலரும் திருநாகேச்சரத்தானே 99-2
செருந்தி பொன்மலர் திருத்தினை நகர் 64-8

செம்பு (செடி வகை)
செம்பினொடு செங்கழுநீர் தண்கிடங்கில் திகழும் 46-2

ஞாழல்
ஞாழற் றிரள் நீழல்...சுறவங் கொணர்ந் தெற்றும்
மறைக்காடே 71-2
(முடப்புன்னை) ஞாழல் 42-1

தக்கோலம் (வால்மிளகு) 42-1

தகரம் (வாசனை மரவகை)
தகரத்திடை தாழைத்திரள்...சுறவங் கொணர்ந்தெற்றும் 71-2

தடம் (கடம்பு வகை)
வேங்கை, தடமாதவி 98-8

தழை
தழைதழுவு தண்ணிறத்த செந்நெல் 40 8

தளவு (முல்லை பார்க்க) 10-9

தளிர்
தளிர்போல் மெல்லடி 26-9
விரைசேர் தளிர்தரு கோங்கு 93-8

தாமரை
[அரவிந்தம், கமலம், பங்கயம் பார்க்க]
அந் தாமரைப் பொய்கை 59-9
அல்லியந் தாமரைத்தார் ஆரூரன் 22-10
கருமேதி செந்தாமரை மேயும் கழனி 40 2
செந்தண் மாமலர்த் திருமகள் 65-5
தாமரைப் பொய்கை 59-9
தாமரையின் மேலான் 30-9
தாமரையோன் 16-11
பூமேல் திருமாமகள் 41-4
பெரிய மலர்மேல் உறைவான் 52-8
வயற்றேன் று தாமரைப் பூக்கள் மேல் புள்ளி நள்ளிகள்
பள்ளி கொள்ளும் 35-5
விளங்கு தாமரைப்பாதம் 76-8

தாழை

தாழைத் திரள் 71-2
தாழைப் பொழில் 71-1
முள்வாய மடல் தழுவி முடத்தாழை யீன்று
மொட்டலர்ந்து விரைநாறு முருகுவிரி பொழில் 40-1

தாழை (*தெங்கு பார்க்க*)

தாழைத் திரள் 71-2
தாழைப் பொழில் 71-1
தாழை வாழையந் தண்டு 76-9

தெங்கு (*தாழை பார்க்க*)

குலைமலிந்த கோட்டெங்கு மட்டொழுகும் பூஞ்சோலை 30-11
குளிரிளம் தெங்கொடு பனைபழம் படுமிடம் 72-4
கூழை வானரம் தம்மிற் கூறிது சிறிதெனக் குழறித்
**தாழை வாழையந் தண்டாற் செருச் செய்து*
தருக்கு (வாஞ்சியம்) 76-9
தாழைப் பொழில் 71-1
தாழை வாழையந்தண்டு 76-9
தெங்கங்கள்...பழம்வீழ் மணல் 71-3
தெங்கங் குலை 77-1
தெங்கணை பூம்பொழில் 99-11
தெங்கு மலிசோலை 40-5
தெங்கொடு பனைபழம் 72-4
நெடுங்தாட் டெங்கு 42-3
பாளை தெங்கு பழம் வீழ 57-9
பாளைபடு பைங்கமுகின் சூழல் இளந் தெங்கின் படுமதஞ்
செய் கொழுந்தேறல் 40-4
வாழைக் குலைத் தெங்கு 77-4

தொண்டை (*கொவ்வைக் கனி*)

தொண்டைவாய் உமை 20-4
தொண்டைவாய் நல்லார் 40-9

நீலம்

ஒப்புடை ஒளி நீலம் ஓங்கிய மலர்ப்பொய்கை 29-4
கருமணிகள்போல் நீலம் மலர்கின்ற கழனி 40-7
அந்நீலம் கண்வளரும் சூழ்கிடங்கு 40-9
நீலம் மலர்ப்பொய்கையில் அன்னம் 3-6
மடைக்கண் நீலம் மலர் வாளொளிபுற்றூர் 57-2

---

* *தாழைத் தண்டு - தென்னம்பட்டை. தாழை - தெங்கு "தாழை இளநீர் விழுக்குலை"—திருமுருகா, 307-8.*

நெய்தல்
கைதை நெய்தல் கழனி 76-5

நெல்
கரும்புயர்ந்து பெருஞ் செந்நெல் நெருங்கிவிளை கழனி 40-3
தழைதழுவு தண்ணிறத்த செந்நெல் 40-8
பெருஞ் செந்நெல் 40-3
பெருஞ் செந்நெல் நெருங்கிய கழனி 58-6

நெல்லி
அங்கை நெல்லியின் பழத்திடை அமுதே 51-3
சிந்தித் தெழுவார்க்கு நெல்லிக் கனியே 4-3

நொச்சி
*நொச்சியம் பச்சிலையால் நுரைதீர் புனலால் தொழுவார் 98-3

பங்கயம் (தாமரை பார்க்க)
கொங்கையார் பலரும் குடைந்தாட நீர்க்குவளை மலர்தரப்
பங்கயம் மலரும் †பழனம் 87-5
செங்கண்மலர் பங்கயமாச் சிறந்தானுக்கு அருளி 16-2
செங்கயல் பங்கயத் தொதுங்க 76-2
பங்கயச் சேவடி 45-10
பங்கய பாதன் 22-5
பங்கயம் மலரும் பழனம் 87-5
பங்கய மாதனையார் 84-6
பங்கய மாமலர்மேல் மதுவுண்டு பண் வண்டறைய 99-9
பங்கய மாமலர் மேல் மதுவுண்டு வண்டு தேன்முரல 99-7
பங்கய மாமுகத்தாள் உமை 97-7

பயிர் 84-9

பருத்தி ('பருவி' பார்க்க)

பருவி (பருத்தி)
‡பருவி விச்சி 77-3

---

* நொச்சி - பஞ்ச வில்வங்களுள் ஒன்று. பஞ்ச வில்வங்களாவன : வில்வம், நொச்சி, மாவிலங்கை, முட்கிளுவை, விளா, 'வில்வம் நொச்சி மாவிலங்கை முட்கிளுவை வெள்ளில்' பஞ்ச வில்வம் என்பார். —சிவராத்திரி புராணம் - சிவமான, 37.

† பழனம் - பொய்கை. "பழனவாளை"—புறநானூறு, 61.

‡ பருவி - பருத்தி. பருவி விச்சி - பருத்தி விதையை விதைத்து.
"பருவி வித்திய பைந்தாட் புனம்" (பெருங்கதை, க-டுO-16)
"பரீஇ வித்திய வேனல்" (குறுந். 72)

பலா ('வருக்கை' பார்க்க)

கழைக்கரும்புங் கதலிப் பலசோலை 58-4
குறுந்தாட் பலவும் 42-3
பலசோலை 58-4
பலவின் கனி 3-9
பாடார்ந்தன மாவும் பலாக்களும் சாடி 13-5

பனை ('பெண்ணை' பார்க்க)

தெங்கொடு பனைபழம் படுமிடம் 72-4
பனைக்கனி பழம்படும் பரவையின் கரை 72-1
வன்பனைய வளர்பொழில் 38-10

பாதிரி

பாதிரி சந்தகில் 16-7

புட்பம் ('பூ'—'மலர்' பார்க்க)

*அட்ட புட்பம் அவைகொண் டடிபோற்றி 22-8
சந்திகள்தோறும் சலபுட்பம் இட்டு வழிபடப்புந்தி உறைவாய் 92-7

புண்டரிகம் ('தாமரை' பார்க்க)

கண்டவர்கண் மனம் கவரும் புண்டரிகப் பொய்கை 16-3
புண்டரிகத் தயன் 27-8
புண்டரிகப் பரிசாம் மேனி 84-1
புண்டரீகம் மலரும் பொய்கை 85-9

புல்

கள்ளிவற்றிப் புல் தீய்ந்து வெங்கானம் கழிக்கவே புள்ளி
மானினம் புக்கொளிக்கும் 50-8

புன்னை

கரும்பு(ன்)னை வெண்முத் தரும்பிப் பொன்மலர்ந்து
பவளக் கவின்காட்டும் கடிபொழில் 16 9
†புன்னைக் கன்னிகள் ‡அக்கு அரும்பு புறம்பயம் 35-7
புன்னை மலரும் புறவு 91-4

---

* அட்டபுட்பம் - புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை.
ஞானபூசை செய்வார்க்கு :—
கொல்லாமை, ஐம்பொறி அடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பன.

† 'புன்னைக் கன்னி கழிக்கண் நாறும் புறம்பயம்' என்றும் பாடம்.

‡ அக்கு - சங்குமணி.

*புன்னை மாதவி போதலர் நீடூர் 56-2
*மாதவி...குருக்கத்தி புன்னை 10-8
*மாதவி புன்னையும் 36-3
†முடப்புன்னை ஞாழல் குருக்கத்திகள்மேற் குயில் கூவலரு 42-1
விரும்பிய கமழும் புன்னை மாதவித் தொகுதி என்றும்
அரும்புவாய் மலரும் ஆரூர் 3-5

புனல்

கொய்‡புனல்...எனலோ டைவனம் 74-2

பூ ('மலர்' பார்க்க)

அந்தணர்...இடுபூச் சிறப்பு 88-7
சடிபடு பூங்கணை 9-4
நீர்மூழ்கிப் பூப்பறித்து 30-3
புதிய பூ மலர்ந்து எல்லி நாறும் 35-2
பூ உயர் சென்னியனை 84-3
§பூ ஏந்திய பீடத்தவன் 82-8
பூத்தாழ் சடையாய் 92-6
§பூமேல் திருமாமகள் 41-4
பூவார்ந்தன பொய்கைகள் 13-10

பெண்ணை ('பனை' பார்க்க)

$கருக்கு வாய்ப் பெண்ணையொடு தெங்குமலி சோலை 40-5
(தெங்கங்களும்) நெடும் பெண்ணையும் பழம் வீழ்மணற்
படப்பை 71-3
நெருங்கிய நெடும்பெ(ண்)ணை அடும்பொடு விரவிய மருங்கு 72-6

பெருமரம்

இருகரைப் ¶பெருமரம் பீழ்ந்துகொண் டெற்றிக் கலங்குமா
காவிரி 74-9

---

* புன்னையும் மாதவியும் ஒருங்கு கூறப்பட்டன (பல இடங்களில்).

† முடம் - "கொடுங்காற் புன்னை"—வளைந்த காலை உடைய புன்னை.—பெரும்பாண். 266.

‡ புனல் - வாலுளுவை. (கொடி வகை)

§ 'பூ எனப்படுவது பொறிவாழ்பூவே'-நால்வர் நான்மணிமாலை, 40.
பொறி - இலக்குமி.

$ 'பனைத்தலைக் கருக்குடை நெடுமடல்'—குறுந்தொகை, 372.

¶ பெருகு சந்தனம் காரகில் பீலியும் பெருமரம் நிமிர்ந்துந்திப் பொருது காவிரி—சம்பந்தர், 2-110-6.

பெருமரம் - பீனாறி: பெருங்கள்ளி—Lexicon.

போது ('மலர்' பார்க்க)
போதார்ந்தன பொய்கைகள் சூழும் துறையூர் 13-7

போது 56-2

மகிழ் (மகிழமரம்)
போய் மகிழ்க் கீழ் இரு 89-9
மகிழும் மல்லிகை செண்பகம் பூதிய பூ மலர்ந்தெவ்வி நாறும் 35-2

மஞ்சள்
அரைத்த மஞ்சள் 60-2

மத்தம்
குளிர்மா மத்தமும் 84-2
தனி மத்தமும் 44-7
மத்தம் 6-8, 96-10
மத்தம் மலர் 32-3
மத்தமா மலர்க் கொன்றை 36-8
மத்தமார் தருசடையாய் 70-3
முடிமேல் எருக்க நாண்மல ரிண்டையும் மத்தமும் சூடி 31-7
வேரி மத்தம் 70-10

மரம்
பெருமரம்...வீழ்ந்துகொண் டெற்றிக் கலங்குமா காவிரி 74-9
மரங்கள்மேல் மயிலால 87-7
மரவுரி 72-2
வன்மரம் 3-2

மராம்—மரவம் (வெண்கடம்பு)
மரவம் கமழ் மாமறைக் காடு 32-6

மராமரம் (ஆச்சா மரம்)
மராமரங்கள் 38-5, 74-7

மருது
மருதம் 74-2
மருது கீறி ஊடுபோன மால் 7-10

மல்லிகை
அரும்பார்ந்தன *மல்லிகை செண்பகம் 13-4
அரும்புடை மலர்ப் பொய்கை அல்லியும் மல்லிகையும் 29-5
எல்லி மல்லிகையே கமழ் நீடூர் 56-10

---

* மல்லிகை சண்பகம் ஒருங்கே கூறப்பட்டன.

தெற்றுகொடி முல்லையொடு மல்லிகை செண்பகமும் 16-6
நல்ல மல்லிகை செண்பகத்தொடு 87-2
மகிழும் மல்லிகை செண்பகம் புதிய பூ மலர்த்தெல்லி நாளும் 35-2
மல்லிகை மாடநீடு மருங்கு 8-4
விரிதரு மல்லிகையும் மலர்ச் சண்பகமும் அளைந்து 99-8

மலர் (அலர்-பூ, புட்பம், வீ பார்க்க)
அரும்புடை மலர்ப் பொய்கை 29-5
அருமலரோன் 9-2
அழுமலர்க் கண்இணை அடியவர் 58-10
அன்பர் இட்டுகந்தார் மலர்ப் பூசை இச்சிக்கும் இறைவர் 19-8
ஆயிர மலர் 66-3
இண்டை மலர் 16-3
இண்டை மாமலர் 70-10
எண்ணார் நாண்மலர் கொண்டங் கிசைந்தேத்தும் அடியார்கள் 86-3
ஏடுலா மலர்க் கொன்றை 36-7
கடிபடு பூ 9-4
கடிமலர்(க் கொன்றை) 76-6
கடிமாமலர் 41-9
கூவிள மலர் 58-10
கொய்ம்மாவின் மலர்ச்சோலைக் குயில்பாட மயிலாடும் 30-1
கொய்யணி மலர்ச்சோலை 35-2
கொய்யா மலர் 13-8
கோங்கலர் 3-4
சுரும்பார் விண்ட மலர் 23-4
சுரும்புடை மலர்க்கொன்றை 29-5
செங்கண் மலர் 16-2
செங்கழுநீர் மலர் 87-2
செந்தண் மாமலர் 65-5
செய்ய மலர்கள் 24-8
செழுமலர்(க் கொன்றை) 58-10
தீர்த்தமா மலர்ப்பொய்கை 76-3
துன்று மலர் 83-2
தூமலர்த் தோன்றல் 87-7
தொழுமலர் எடுத்த கை 58-10
நறைசேர் மலர் ஐங்கணையான் 53-4
நன்மலர் 74-5
நாண்மலர் 86-3
நிலம் தாங்கிய மலர் 82-6
நீண்மலர் 66-3
பன்மா மலர்கள் 52-9

பெரிய மலர்மேல் உறைவான் 52-8
பைந்தண் மாமலர் 36-4
பொன் மலர்(க் கொன்றை) 59-5
பொன் மலர் வேங்கை 74-5
மட்டு மயங்கி அவிழ்ந்த மலர் 10-7
மட்டுலா மலர்கொண் டடியிணை வணங்கும் 69-9
மலர் தூய்த் தொழுவாரை 57-4
மலர் இட்டு அடியிணை போற்றுவர் 44-6
மலர் இட்டு வணங்கார் 59-8
மலர் உறைவான் 18-8
மலர்கள் 31-8
மலர்க் கொன்றை 58-4
மலர்ச் சண்பகம் 99-8
மலர்ப்பூசை 19-8
மலர்ப் பொய்கை 76-3
மலர்மிசையான் 13-10
மலர்மேல் அயன் 77-10
மலர் மேலவன் 3-9
மழைக் கரும்பும் மலர் 58-4
மாமலர் 62-2, 65-5, 83-9, 84-2, 99-7, 9
வண்டலம்பு மலர்(க் கொன்றை) 61-4
விரைசெய் மாமலர்(க் கொன்றை) 63-2
விரைதரு மலர்(மேல் அயன்) 69-11
வெறியார் மலர்க் கொன்றையினாய் 27-1
வேங்கை அலர் 3-4
வேங்கையின் நன்மலர் 74-5

மா

கொய்ம்மாவின் மலர்ச்சோலை 30-1
சீதப் புனலுண்*டெரியைக் காலும் சூதப் பொழில் 94-6
தேமாம் பொழில் 79-1
பாடார்ந்தன மாவும் பலாக்களும் 13-5
புகழு மா 74-6
பூமா மரம் - மானும் மரையினமும் மயிலினமும்...
பூமா மரமுரிஞ்சி 79-1
பொறியு மா 74-4
மாடு மா 74-2
மாவிரி மடநோக்கி 87-6

* மாந்தளிருக்குத் தீ உவமை. ஒப்புமைப் பகுதியிற் (பக்கம் கூகூ) காண்க.

மாவின் கனி தூங்கும் பொழில் 80-9
முறிக்கும் தழை மா 42-1
மைம்மாம் பூம்பொழில் 24-3
வரையின் மாங்கனி 74-7

மாதவி

குளிர் *மாதவி மவ்வல் குரா வகுளம் குருக்கத்தி 10-8
குளிர் மாதவிமேல் சிறையணி வண்டுகள்சேர் திருநாகேச்சர(ம்) 99-1
தட மாதவி 93-8
புன்னை மாதவி போதலர் நீடூர் 56-2
பைந்தண் மாதவி 36-3
மட்டு மயங்கி அவிழ்ந்த மலர் ஒரு மாதவியோடு மணம் புணரும் 10-7
மாதவித் தொகுதி 8-5

மிளகு

†கறிமா மிளகு 3-2
†கறியுமா மிளகு 71-4

முண்டல் (முண்டகம் - கழிமுள்ளி)

‡கண்டல் முண்டல்கள் சூழ் கழிப்பாலை கடற்கரை 12-2

முருக்கு

முருக்குவாய் மலரொக்கும் திருமேனியானை 40-5

முல்லை

அல்லிமென் §முல்லையந்தார் அமர்நீதி 39-1
குறையணி குல்லை முல்லை 99-1
தெற்று கொடி முல்லையொடு மல்லிகை 16-6
முல்லைத் தாது மணம் கமழ் முருகன்பூண்டி 49-2
முல்லை படைத்த நகை மெல்லியலாள் 84-5
முல்லை முறுவலுமை 20-5

---

* மாதவி - மவ்வல் - குருக்கத்தி என்றதனால் மாதவி, மவ்வல், குருக்கத்தி - இவை வேறு, வேறு எனத் தெரிகின்றது: பக்கம் ௬0௯ கீழ்க் குறிப்பைப் பார்க்க.

† கறிக்குப் பயன்படுவது. கறி - சிறுமிளகு. மிளகு - பெரிய மிளகு என்பர்.

‡ 'கண்டகங்காள் முண்டகங்காள்'—அப்பர், 4-12, 2.

['மணிப்பூ முண்டகம்'—மதுரைக்காஞ்சி, 96. 'நீலமணி போலும் பூக்களை உடைய கழிமுள்ளிகளை உடைய மணற்குன்றுகள் மிக்க கடற்கரை.]

§ முல்லைமாலை வணிகர்க்கு உரியது.

மொட்டு
மொட்டலர்ந்து மணங்கமழ் முருகன்பூண்டி 49-6

மௌவல் (காட்டுமல்லிகை)
குளிர் மாதவி மௌவல் குரா 10-8

வகுளம்
குரா வகுளம் குருக்கத்தி 10-8

வஞ்சி
வஞ்சி நுண்ணிடை 42-10, 87-10

வருக்கை (பலா பார்க்க)
மதுவிம்மு வருக்கையின் சுளை 76-9

வள்ளை
*வள்ளை வெண்மலர் 76-4

வன்னி
கரந்தையும் வன்னியும் 96-10
கொன்றையும் வன்னியும் 13-6
கொன்றை வன்னியும் 36-8
வன்னிமதி சென்னிமிசை வைத்தவன் 16-8

வாழை ('கதலி' பார்க்க)
கருந்தாள வாழை 30-4
கிளி வாழை யொண்கனி கீறியுண் கேதாரம் 78-6
வாழைக்கனி கூழைக் குரங்குண்ணும் மறைக்காடே 71-1
வாழைக்குலை...கரைமேலெறி...காவிரி 77-4
வாழை காய்க்கும் வளர் மருகல் நாட்டு மருகலே 12-1
வாழைதான் பழுக்கும் நமக்கென்று வஞ்ச வல்வினையுள்
வலைப்பட்டு 60-9
வாழையின் கனி 74-7, 76-9
வானரம் தம்மிற் கூறிது சிறிதெனக் குழறித், தாழை
வாழையந் தண்டாற் செருச்செய்து தருக்கு வாஞ்சியம் 76 9
வேலிதோறும் கருந்தாள வாழைமேற் செங்கனிகள்
தேன்சொரியும் கருப்பறியலூர் 30-4

---

* சள்ளை வெள்ளையங் குருகு தானது வாமெனக் கருதி, வள்ளை வெண்மலரஞ்சி மறுகிஓர் வாளையின் வாயில், துள்ளு தெள்ளுநீர், 76-4.

[வள்ளையின் வெண்மலரைக் குருகு எனப் பயந்து சள்ளைமீன் அஞ்சிக் கலங்கித் துள்ளி வாளைமீன் வாயில் விழும் என்றபடி.]

வீ (மலர் பார்க்க)

மதுவார் கொன்றைப் புது வீ சூடும்	41-1

வேங்கை

கோங்கலர் வேங்கை அலர்	3-4
கோங்கொடு வேங்கையும்	13-8
தளிர் தரு கோங்கு வேங்கை	93-8
பொன்மலர் வேங்கையின் நன்மலர்	74-5
வேங்கை கோங்கமும்	36-2

வேம்பு

வேம்பினொடு தீங்கரும்பு விரவி எனைத் தீற்றி	46-2

வேய்

உயர்வேய்	81-9
உயர்வே யொடிழி நிலவு	3-5
எறிக்கும் கதிர்வேய் உதிர்முத்தம்	42-1
கிடங்கின் அருகே கழை தழுவித் தேன் தொடுக்கும்	40-8
*சந்தித் தடமால் வரை	4-3
தளிர்ச் சந்தனத்தொடு வேயும்	9-3
நீடுயர் வேய்	81-9
பழவேய் முழவதிர	78-7
மழைகள் சாலக் கலித்து நீடுயர் வேயவை குழைகொள் முத்தம் சொரியும் தண்கழுக் குன்றமே	81-9
முது வேய்கள்	78-8
வேய்கொள் தோள் உமை	56-8
வேய் புரை தோளி	62-2
வேய்புரையும் தோளாள் உமை	2-9
வேயன தோளி மலைமகளை	44-5
வேயார் பெண்ணை	1-2

2. மரங்களின் பெயர் நிறைய வந்துள்ள இடங்கள்

குளிர் மாதவி மவ்வல் குரா வகுளம் குருக்கத்தி புன்னை அல்லி	10-8
காவியும் குவளையும் கமலம் செங்கழு நீரும்	29-2
மலைத்த சந்தொடு வேங்கை கோங்கமும் மன்னுகாரகில் சண்பகம்	36-2
முறிக்கும் தழைமா முடப்புன்னை ஞாழல் குருக்கத்திகள்	42-1
கரந்தையும் வன்னியும் மத்தமும் கூவிளம்	96-10
விரைசேர் தளிர்தரு கோங்கு வேங்கை தடமாதவி சண்பகமும்	98-8

---

* சந்தி - மூங்கில்.

3. கடற்கரை மரங்கள், செடிகள்

கண்டல்	12-2, 58-5
கழியருகினிற் கடிநாறு தண் கைதை	71-6
சடசட விடு பெணை பழம்படும் இடவகை...இடிகரை மணல்	72-9
ஞாழற் றிரள்	71-2
தகரம்	71-2
தாழைத் திரள்	71-2
தெங்கொடு பனைபழம் படுமிடம்...கடல்...இடம்	72-4
நெடும்பெணை அடும்பொடு விரவிய...கடல் அணைகரை	72-6
பனைக்கனி பழம்படும் பரவையின் கரை	72-1

227. மலை

['சிவனும் மலையும்' என்னும் தலைப்பு 131-ம் பார்க்க]

அகத்தியர் தமக்கு...திருப்பொதியிற் சேர்வு நல்கிய செல்வம்	65-5
அம்பொன் மலை	40-10
(இமய)மலை	9-1, 10-4, 19-7; 40-10; 44-7; 58-8; 73-1
எழில் திகழ் கயிலை	68-9
(கயிலை)மலை	12-5; 38-9; 46-7; 55-9, 57-9, 68-9, 73-8; 93-10
கருவரை	93-10
கல் (மேரு)	75-5; 81-10
கற்குன்று	50-4
கனகமால் வரை	68-6
குமண மாமலைக் குன்று	33 9
குன்றம் (மேரு)	62-5, 88-5
கோல மால்வரை (மேரு)	55-5
சந்தித் தடமால் வரை	4-3
சிமயம்	64-9
சிலை	21-7; 22-6, 27-3; 38-9
தடமால்வரை	4-3, 12-5
பருவரை (கயிலை)	73-8
பவள வெற்பு	94-4
பொதியில்...அகத்தியர் தமக்குச் சிந்துமாமணி யணிதிருப் பொதியில் சேர்வு	65-5
பொற்குன்றம்	50-4
மங்குல் நுழை மலை	10-4
மலை	4-1, 9-1, 10; 10-1, 4; 13-1; 19-7; 21-9; 27-3; 30-11; 38-9; 41-5; 42-8; 47-1; 58-8; 70-8; 73-1, 74-2, 77, 97-4; 100-7
மலைச்சாரல்	79-2, 9

மலைச்சாரல்...புறமே வரும் இனங்கள் (களிறு - பிடி) 79-2
மலைச்சாரலில் திரியும் சுரடையும் மானும் மரை இனமும் மயில் மற்றும் பல எல்லாம் 79 9
மலைப்புறம் 43-3
மழை வளரும் நெடும்கோடு 48-6
மாணிக்கத்தின் மலை 53-1
மாமலை 44-5, 97-4
மாமேரு 99-8
மால்வரை 4-3; 55-9
மால்வரை (கயிலை) 55-9
[மேரு] 62-5; 75-5; 99-8
வரை(கள்) 34-4, 40-11, 42-3, 46-7, 51-6; 55-5, 57-9, 73-1, 74-7, 98-10, 99-5
வரை ஏழு 68-2
வரை (இமயம்) 67-9
வரை (கயிலை) 46-7, 57-9, 93-4
வரை (மேரு) 51-6
வெற்பு 16-5, 94-4
,, மேரு 16-5

228. மழை, மேகம், மின், இடி

உரும் அன்ன கூற்றத்தை 90-5
உரும் ஏற்றன் 82-7
உலவும் முகிலிற் றலைகற் பொழிய 3-5
ஒரு மேக முகில் 49-2
ஒளிகொள் *வெண்முகிலாய்ப் பரந்தெங்கும் பெய்யு மாமழைப் பெருவெள்ளம் 55-2
கணமுகில் 16-4
கருமாமுகில் (போல் மிடற்றாய்) 26-2
கார்க்குன்ற மழையாய்ப் பொழிவானை 59-3
கார்முகில் போல்வதோர் கண்ட(ம்) 96-8
காரார் பூம்பொழில் 27-7
காராரும் பொழில் 26-10, 28-10
காரூர் மழைபெய்து பொழி அருவி 9-11
குரை விரவிய குலைசேகரக் கொண்டல் 71-4
குழைக்கும் பயிர்க்கோர் புயலே ஒத்தியால் அப்பனே 4-4

* ஒப்புமைப் பகுதி பக்கம் சக பார்க்க :
"வெண்மழை பொழியும்"—முல்லைப் பாட்டு-100.

கொண்டல் 37-6, 7
கொண்டல் எனத் திகழும் கண்டமும் 84-1
பயிர்க்கோர் புயலை ஒத்தியால் 4-4
புயல் 58-7
மங்குல் நுழை மலை 10-4
மஞ்சு (தன்னுள் விளங்கு மதி) 42-2
மஞ்சுற்ற மணி மாடம் 86-8
மழைக் கரும்பும் மலர்க் கொன்றை 58-4
மழைகள் சாலக் கலித்து 81-9
மழை கூர்தர 78-8
மழை நுழை மதியம் 85-7
மழை வளரும் நெடுங்கோடு 43-6
மாட மதிலணி கோபுர மணிமண்டபம் மூடி முகில்தவழ் சோலை 43-5
மாமழைப் பெருவெள்ளம் 55-2
மாமழை மறந்து வயலில் நீரிலை 55-2
மின் 58-7, 62-7, 76-10
மின் இலங்கு நுண்ணிடை 89-5
மின் தயங்கிய இடை 62-7
மின் னலங்கலம் சடை 76-10
மின்னாய்த் தீ என நின்றான் 86-6
மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவி வெடிபட 74-1
மின்னெடுஞ் செஞ்சடையான் 83-10
விண்ணார்ந்தன மேகங்கள் நின்று பொழிய 13-9
விதிர்த்து மேகம் மழைபொழிய வெள்ளம் பரந்து 77-9

229. மறை, வேதம், ஆகமம், அங்கம்

1

['சிவனும் மறையும்' என்னும் தலைப்பு 133 பார்க்க]

அருமறை 61-5, 78-3
அருமாமறை 97-7
கையினால் எரியோம்பி மறை வளர்க்கும் அந்தணர் 30-6
ஞாலந்தான் பரவப் படுகின்ற நான்மறை 54-10
*நால் - நனி நாலிசை நாலூர் 31-6
நான்மறை 2-6, 19-4, 54-10, 56-2, 57-10, 67-9, 68-5; 88, 98-4, 99-5
நான்மறையார் 19-4

* நால் - நான்மறை.

பன்னான்மறை 2-6
பன்னு நான்மறை 56-2
பாடு மாமறை 56-4
பெருமேதை மறை ஒலி 16-2
மறை 18-2, 44-6, 63-4
மறை நான்கும் 25-4
மன்னிய சீர்மறை 39-11
மாமறை 17-8, 56-4
மாமறை ஒரு நான்கு 62-2

2. வேதம்

['சிவனும் மறையும்' என்னும் தலைப்பு 133 பார்க்க]

அரவொலி ஆகமங்கள் அறிவார் அறி தோத்திரங்கள்
விரவிய வேத ஒலி 100-8
இருக்கு வாய் அந்தணர்கள் 40-5
வேத ஒலி 100 8
வேத கீதங்கள் 22-7
வேதவித்து 45-1

3. ஆகமம்

['சிவனும் ஆகமமும்' என்னும் தலைப்பு 100 பார்க்க]

4. அங்கம்

அங்கம் ஓராறு 97-7
அங்கமொழி அன்னார் 80-3
ஞாலந்தான் பரவப்படுகின்ற நான்மறை அங்கம் 54-10

230. மறையவர், அந்தணர்

['சிவனும் மறையவரும்' என்னும் தலைப்பு 132-ம் பார்க்க]

அங்க நான்மறையால் நிறைகின்ற அந்தணாளர் 68-5
அங்கம் மொழி அன்னார் 80-3
அங்கமோ ராறவையும் அருமாமறை வேள்விகளும், எங்கும்
இருந்தந்தணர் எரிமூன் றவை ஓம்புமிடம்...திருநனி
பள்ளியதே 97-7
அந்தணர் 16-4, 5; 30-3, 6; 39-1, 40-2, 5; 67-9, 88-7, 97-7
அரிய நான்மறை அந்தணர் 67-9
இருக்குவாய் அந்தணர்கள் எழுபிறப்புள் எங்கும், வேள்வியிருந்
திருநிதியம் வழங்குநகர்...கானாட்டு முள்ளூர் 40-5

கடவூரில் மறையோர் 53-10
கலிகடி அந்தணர் 16-4
கலிவலங்கெட வாரழ லோம்பும் கற்றநான்மறை முற்றனல்
ஓம்பும் வலிவலம் 67-11
கலைபயில் அந்தணர் 16-5
கலையடைந்த கலிகடி அந்தணர் ஓமப் புகையால் கணமுகில்
போன்றணி கிளரும் கலயநல்லூர் காணே 16-4
கற்பாரும் கேட்பாரு மாயெங்கு நன்கார் கலைபயில் அந்தணர்
வாழும் கலயநல்லூர் 16-5
கிழக்கே சலம் இடுவார் 78-4
குறையாத மறைநாவர் 30-8
திருமிழலைத் தணிந்த அந்தணர் 88-7
திருமிழலை நிறைந்த அந்தணர் 88-6
திருமேவு செல்வத்தார் தீமூன்றும் வளர்த்த, திருத்தக்க
அந்தணர்கள் ஓதுநகர்...காறூட்டுமுள்ளூர் 40-2
தில்லைவாழ் அந்தணர் 39-1
தீயராக் குலையாளர்...திருமிழலை 88-9
தூய நெய்யால் வட்டக் குண்டத்தில் எரிவளர்த் தோம்பி
மறைபயில்வார் 18-2
தெரிந்த நான்மறையோர்க் கிடமாய திருமிழலை 88-8
நன்கார் கலைபயில் அந்தணர் வாழும் கலயநல்லூர் 16-5
நாட்டகத் தேவர் (பூசுரர்) 62-3
நான்மறையோர் 88-5, 8; 98-1, 6
நிறைந்த அந்தணர் 88-6
நிறைமறையோர் உறை வீழிமிழலை 46-7
நீதிவேதியர் நிறைபுகழ் உலகில் நிலவு தென் திரு நின்றியூர் 65-6
பண்புடை நான்மறையோர் 98-6
பறையாத வல்வினைகள் பறைந்தொழியப் பன்னாளும் பாடியாடி
...முக்கண்ணன் கருப்பறியலூர்க், குறையாத மறைநாவர்
குற்றேவல் ஒழியாத கொகுடிக்கோயில் 30-8
பார் நிலவு மறையோர் 89-7
புண்ணிய நான்மறையோர் 98-1
புரியும் மறையோர் நிறைசொற் பொருள்கள், தெரியும் நறையூர்ச்
சித்தீச்சரமே 93-8
பொய்யாத வாய்மையாற் பொடிப்பூசிப் போற்றிசைத்துப் பூசை
செய்து, கையினால் எரிஓம்பி மறைவளர்க்கும் அந்தணர்தம்
கருப்பறியலூர் 30-6
மறையார் (தங் குரிசில்...ஆரூரன்) 25-10
மறையார் (புகழ் ஊரன்) 80-10
மறையோர் 27-2, 46-7, 53-10, 89-7, 93-8, 98-1

மூட்டாமே நாடோறும் நீர்மூழ்கிப் பூப்பறித்து மூன்று போதும்,
கட்டார்ந்த இண்டை கொண் டடிசேர்த்தும் அந்தணர்தம்
கருப்பறியலூர் 30-3
மூன்று நூறு வேதியர் 65-3
*வேதப்புரவித் தேர்மிசைத் திரிசெய் நான்மறையோர் 88-5
வேத வேள்வியர் 68-8
வேத வேதியர், வேத நீதியர் ஓது...மிழலை 88-10
வேதியர் 73-5, 85-5

231. மாதர்கள்

1. மாதர்களைக் குறிக்கும் சொற்கள், சொற்றொடர்கள்

